# வலு

ஏப்ரல் - யூன் - 2021 | காலாண்டிதழ் | இதழ் - 30

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களைத் தாங்கி
வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை

ரூபா 120/=

ISSN : 2513 - 2989
ISBN : 978 – 955 – 23 – 0019 – 3




04 ஆஸ்கார் லியோனார்ட் கார்ல் பிஸ்டோரியஸ் -ஞானா-

38 முற்றத்து மல்லிகை



கருவியோடு இணைந்து மாற்றத்தை நோக்கிய ஒரு பயணத்தில்...
கலாநிதி ரஜனிகாந்த்

கருவியின்
8 வது ஆண்டு சிறப்பு மலர் பக். 52

ISSN 2513-2989
9 772513 298007

வெளியீடு :
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவியின் தடங்கள் 2020



கருவி சூழல்நேய அலகுத் திறப்பு விழா. ஜனவரி-01



பயனாளி ஒருவருக்கான வாழ்வாதார உதவி வழங்கல். பெப்ரவரி - 15



அங்கத்தவர் ஒருவருக்கு நீர்த்தாங்கி வசதி ஏற்படுத்திக் கொடுத்தல். மார்ச் - 10



நீலன்திருச்செல்வம் நம்பிக்கை நிதியத்தின் பங்களிப்புடன் அங்கத்தவர்களுக்கான மாதம் ஒரு பொதி ஏப்ரல்.3



கருவியின் ஆண்டுவிழா யூன் - 12



கருவியின் நீர்வேலி அலுவலக அங்குராப்பணம். மே - 6




கருவி நிறுவனத்திற்கு பல்லூடக எறியி (Multi media Projector) அன்பளிப்பு. யூலை - 9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN : 2513 - 2989 ISBN : 978 – 955 – 23 – 0019 – 3

# வலு

ஏப்ரல் – யூன் 2021 காலாண்டிதழ் இதழ் – 30

மாற்றுத் திறனாளிகள் தொடர்பான தகவல்களையும் பொது விடயங்களையும் தாங்கி வெளிவரும் காலாண்டுச் சஞ்சிகை


**பிரதம ஆசிரியர்**

திரு. நா. கீதா கிருஷ்ணன்.
karuvivalu@gmail.com
Tel : 076 638 5563

**நிர்வாக ஆசிரியர்**

திரு. கணபதி சர்வானந்தா
(சிரேஷ்ட ஊடகவியலாளர்)

**இதழ் குழு ஆலோசகர்**

திரு. க. தர்மசேகரம்

**ஆசிரியர் குழு**

திரு. செ. சசிராஜ்.
திரு. ச.க. தேவதாசன்
திருமதி.சு. சுபோதினி

**உதவி ஆசிரியர் குழு**

திருமதி ஹே. லுசிந்தன்
திருமதி சி. வசந்தன்
செல்வி லோ. டனுசிகா



**வெளியீடு**

**கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்,**
இல. 290, பருத்தித்துறை வீதி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.
தொலைபேசி : 021 205 4224


## பொருளடக்கம்


| | |
|---|---|
| எண்ணக் கிண்ணம் - கவிதை | 02 |
| திருமண ஆசை | 03 |
| வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள் *ஞானா* | 40 |
| வலுவிடம் கேளுங்கள் | 06 |
| வலைவெளி ஓட்டிசம் (Autism) *பாலபாரதி* | 07 |
| செய்திச் சாளரம் | 09 |
| தசரசம் | 12 |
| எழுதுங்கள்; வெல்லுங்கள் | 41 |
| முற்றத்து மல்லிகை | 42 |
| மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா? நவீன தொழில்நுட்ப மாற்றங்கள்! | 44 |
| சிறுகதை | 46 |
| கண்கள் காணும் மௌன மொழி | 50 |
| கருவியின் 8ஆம் ஆண்டு சிறப்பு மலர் | 52-56 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணக் கிண்ணம்

சுந்தரலிங்கம் நிருத்திகன்
அல்வாய்

# நம் வாழ்க்கை நம் கையில்

நம் வாழ்க்கை நம் கையில்
விண்ணில் பறந்தே விந்தைகள் செய்வாய்
மண்ணில் பிறந்த மனிதா நீயும்.
எண்ணிலா ஏற்றம் வாழ்வில் கண்டாய்
கண்ணில் துன்பம் வந்தபோதும்
கலங்கி அழுதல் முறையோ சொல்வாய்?

வாழ்வில் வெற்றி வகையாய்ப் பெறவே
வீழ்ந்தபோதும் விரைவாய் எழுவாய்
தாழ்வு என்பது தரணியில் வேண்டாம்
காழ்ப்புணர்வு தன்னைக் களைந்தே நாளும்
ஏழ்மை போக்க எழுவாய் நீயே!

உடலில் ஊனம் குறையே இல்லை
திடமாய் நீயும் திரண்டிடும் வேளை
தடங்கல் யாவும் தரணியில் அகன்று
தடங்கள் பதித்தே நடக்கின்றபோது
முடங்கும் வாழ்வும் மீட்சி பெறுமே!

போட்டிகள் மிகுந்த உலகினை வென்று
மீட்சி நீயும் பெற்றிட வேண்டும்
ஆட்சிப் பீடம் ஏறியே நீயும்
ஏடுகள் சொன்ன அறவழி நின்று
நாட்டினை நீயும் ஆண்டிட வேண்டும்!

பயந்தே நீயும் பதுங்கிடல் முறையோ?
அயர்ந்து நீயும் தூங்கிடல் சரியோ?
தயவு கேட்டே தாழ்ந்திடலாமோ?
துயரம் கண்டும் அழுதிடலாமோ?
வியர்வை சிந்தியே விரைவாய் எழுவாய்!

துறைகள் பலவுண்டு துயரம் போக்க
அறைந்தே நீயும் அகிலத்தில் கூறு
பாறையில் வீழ்ந்த நீராய் நீயும்
உறைந்திடாது எழுந்தே ஓடி
முறையாய் உலகை வென்றிட வேண்டும்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமண ஆசை

உலகில் வாழும் மனிதனது வாழ்நாள் மிகச் சொற்பகாலம் தான். ஆனால் அவனது ஆசைகளோ அளவுக்கு அதிகம். ஆசைகள் இருக்கும் வரைதான் வாழ்க்கை இனிக் கும். மனிதவாழ்வின் உயர்ச்சிக்கு ஆசைகள் அவசியமானது. அதேபோல சில சமயங் களில் இவ்வாசைகள் அவனை வாழ்க்கையில் வீழ்ச்சியிலும் தள்ளி விடுகின்றன.

மனிதனது மனவெளியில் அலைபாயும் ஆசைகள் பல. அவற்றுள் ஒன்றுதான் இந்தத் திருமண ஆசை. பொதுவாக எல்லோருக்கும் வரும் ஆசைதான் இது. திருமணத்தைப் பொறுத்தவரையில் காதல் திருமணம், நிச்சயிக்கப்பட்ட திருமணம் என இருவகைப்படுத்தலாம். இதில் காதல் திருமணம் செய்வோர் தமக்கு வேண்டிய துணையைத் தாமே தேர்ந்தெடுத்துக் கொள்கின்றனர். நிச்சயிக்கப்பட்ட திருமணத்தைப் பொறுத்தவரையில் தமக்கான துணையைப் பெற்றோர். உறவினர்களுடன் கூடி ஆராய்ந்து தெரிவு செய்து கொள்கின்றனர்.

எமது தமிழ்க் கலாசாரத்தை பொறுத்தவரையில் கல்யாணம் ஆயிரம் காலத்துப் பயிர் என்பர். மேலை நாட்டுக் கலாசாரத்தைப் போன்றதன்று. அங்கு வாழ்க்கைத் துணையை மாற்றுவதென்பது சாதாரண விடயம். எமது நாட்டில் ஒரு வாழ்க்கைத் துணையுடன் வாழ வேண்டும் என்பது தான் முறை. எனவே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பவர்கள் தமக்கேற்றவரைத் தெரிவு செய்யும்பொழுது அவருடன் வாழ்நாள் முழுதும் வாழும் முடிவுடன் திருமண பந்தத்தில் இணைதல் வேண்டும். இருவரும் புரிந்துணர்வோடு பயணிக்கும் போது அவர்களது வாழ்க்கைப் பயணம் இனிமையாக அமையும்.

திருமண ஆசையைப் பொறுத்தவரை மாணவர்களுக்கு வேண்டத்தகாதது. அதேவேளை இல்லற பந்தத்தில் உள்ள தம்பதியினருக்கும் ஏற்புடையது அல்ல. மாணவர்களாயின் கல்வியினையும் திருமணமான வர்களாயின் வாழ்க்கையினை யும் சீர்குலைத்து விடும். பருவமடைந்த குறித்த வயதினருக்கு இவ்வாசை வரும்பொழுது அது காத்திரமானதாக இருக்கும். எமது கலாசாரத்தைப் பொறுத்தவரை பெண்களாயின் 18 வயதைத் தாண்டியவர்களாகவும், ஆண்களாயின் 21 வயதைத் தாண்டியவர்களாகவும் இருத்தல் வேண்டும் எனக் கூறப்படுகின்றது.

இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக பலர் இலகுவாகக் காதல் வலையில் சிக்குண்டு விடுகின்றனர். சிலர் உண்மையாகவே நேசித்துத் திருமணத் தைத் தாண்டியும் பயணிக்கின்றனர். வேறு சிலரோ திருமண ஆசையைக் காட்டி ஏமாற்றி விடுகின்றனர். இதனால் காதல் எனும் போர்வைக்குள் அகப்படும் முன்னரே இருவரும் ஒருவரை ஒருவர் நன்கு அறிந்து கொள்ளல் அவசியம்.

இவ்வாசை மாற்றுத்திறனாளிகளையும் விட்டு வைப்பதில்லை. அவர்களைப் பொறுத்தவரை மிக நிதானமாகச் சிந்தித்துத் தமக்கான வாழ்க்கைத் துணையைத் தெரிவு செய்ய வேண்டும். அத்துணை இவர்களின் வெற்றிக்குத் துணையாக வேண்டும்.

"தான் போக வழியில்லையாம் மூஞ்சூறு விளக்குமாற்றைத் தூக்கியதாம்" என்றில்லாமல் இவ்வாசைக்குள் அகப்பட்ட அனைவரும் தங்கள் ஆசைகளை மகிழ்வாக்க வேண்டும்.

**திரு. நா. கீதா கிருஷ்ணன்**
பிரதம ஆசிரியர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலிகளை உரமாக்கி எழுந்த உலக விருட்சங்கள்

ஞானா







# ஆஸ்கார் லியோனார்ட் கார்ல் பிஸ்டோரியஸ்

ஆஸ்கார் லியோனார்ட் கார்ல் பிஸ்டோரியஸ் என இவர் அழைக்கப் படுகிறார். இவரை கால்களற்ற அதிவேக ஓட்ட வீரர் என்றும் "பிளேட் ஓட்டக்காரர்" என்றும் செல்லமாகக் குறிப்பிடுகின்றனர். இவர் தனக்குக் கால்கள் இல்லை என்று குறை பட்டதில்லை. இவரது பயிற்சியும் விடாமுயற்சியும் இவரை ஒரு வெற்றியாள னாக உயர்த்தியதாகச் சொல்கிறார்கள். பல சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பற்றியதோடு மட்டுமல்லாது வெற்றியின் உச்சத்தைத் தொட்டு மாற்றுத் திறனாளி களுக்கு முன்னுதாரணமாக இருப்பதோடு அவர்களுக்கு ஒரு நம்பிக்கை நட்சத்திர மாகவும் திகழ்கின்றார். இவர் விளையாட்டு களுக்கூடாக பல கோடி அமெரிக்க டொலர் களைச் சம்பாதித்தவர் என்ற பெருமைக்குரி யவர். பார்வைக்கு மட்டுமே அவர் ஒரு மாற்றுத் திறனாளியாக இருந்தார். அவர் மனதில் அவர் ஒரு சாதாரண மனிதரையும் விட வலுவுள்ள மனிதராக வலம் வந்தது மட்டுமல்லாது பல சாதனைகளை முறிய டித்தவர் என்றும் புகழப்படுகிறார்.

இவர் 22 நவம்பர் 1986 இல் ஆஸ்கார் லியோனார்ட் மற்றும் ஷீலா பிஸ்டோரியன் தம்பதியினருக்கு மகனாகத் தென்னாபிரிக் காவின் டிரான்ஸ்வால் மாகாணத்தில் (இப்போது கௌடெங் மாகாணம்) ஜோகன்னஸ் பேர்க்கில் உள்ள சாண்டன் என்ற இடத்தில் பிறந்தவர். ஒரு முன்னாள் தொழில்முறை விளையாட்டு வீரர். இவர் கைக்குழந்தையாக இருந்த போது முழங் கால் பகுதிக்குக் கீழ் - பிறவிக் குறை பாட் டோடு பிறந்தவர். அதன் காரண மாக அவரது இரண்டு கால்களும் சத்திர சிகிச்சை யில் துண்டிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பிஸ்டோரியஸ் ஊனமுற்றோர் அல்லாத குறை தூர அதிவேக ஓட்டப் போட்டிகளிலும் முழங்காலுக்குக் கீழே உள்ள மாற்றுத் திறனாளிகளுக்கான குறைதூர அதிவேக ஓட்டப் போட்டிகளிலும் பங்குபற்றினார். மாற்றுத் திறனாளிகளுக்கான பாராலிம்பிக் போட்டிகளிலும் மற்றும் சாதாரணமான வர்களுக்காக நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகள் இரண்டிலும் பங்கேற்ற பத்தா வது தடகள வீரர் இவர் எனப் பதியப்பட் டுள்ளார்.

ஒரு பாராலிம்பிக் சாம்பியனான பிறகு, இவர் சாதாரணமானவர்களுக்கான சர்வ தேசப் போட்டிகளில் நுழைய முயன்றார், அதற்குத் தொடர்ச்சியாக சர்வதேச தடகள சம்மேளனத்தின் (IAAF) ஆட்சேபனைகள் முன்வைக்கப்பட்டன. அவரது செயற்கைக் கால்களைக் காரணம் காட்டி அவருக்குரிய வாய்ப்பு மறுக்கப்பட்டது. அது தொடர்பாகப் பல வாதப் பிரதிவாதங்கள் காணப்பட்டன. அந்தச் சட்டத் தகராறில் பிஸ்டோரியஸ் வெற்றி பெற்றார். 2011 உலக தடகள சாம்பியன் தொடரில் ஊனமுற்றோர் அல்லாத உலக டிராக் பதக்கத்தை வென்ற முதல் ஊனமுற்ற வர் பிஸ்டோரியஸ் எனப் புகழ் பெற்றார். 2012 கோடைகால ஒலிம்பிக்கிப் போட்டியில், பங்குபற்றிய முதல் இரட்டைக் கால் ஊனமுற்றவராக இவர் பதியப்பட்டிருக் கிறார்.

2013 ஆம் ஆண்டு தற்காப்புக்காக இவர் நடத்திய துப்பாக்கிச் சூடொன்றில் இவரது காதலி கொல்லப்பட்டார். அவ் வழக்கில் இவர் நிரபராதி எனக் காணப்பட்டு விடுதலை பெற்றாலும் அந்நாட்டின் சட்டப் படி ஒரு கொலைக்கு ஆதாரமாக இருந்தார் எனக் கருதப்பட்டு ஐந்தாண்டு சிறை வாசத்தை அனுபவித்தவர்.

இவர் ஒரு கிறிஸ்தவ காப்பகத்தில் வளர்ந்தவர், அவருக்கு கார்ல் என்றழைக் கப்படும் ஒரு மூத்த சகோதரரும் மற்றும் ஐமி என்ற பெயருடைய தங்கையும் உள்ள னர். பிஸ்டோரியஸ்'க்கு 15 வயதாக இருந்த போது அவரது தாய் இறந்துவிட்டார். அப்போ அவருக்கு வயது 43. தனது தாயாரின் மரணம் தனது வாழ்க்கையில் பெருந் தாக் கத்தை ஏற்படுத்தியதாக அவர் குறிப்பிடு கிறார். பிஸ்டோரியஸ், கென்யாவிற்கு இடம் பெயர்ந்த இத்தாலிய வம்சாவளியினர். அவரது தாய்மொழி ஆஃப்ரிகான்ஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆங்கிலத்திலும் சரளமாகப் பேசக்கூடியவர்.

சிறுவயதிலே பாடசாலை நாட்களில் இவர் பல விளையாட்டுகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர். இருந்தும் 2004 இலேயே ஓட்டப் பயிற்சிக்குள் நுழைந்தவர். இவர் ஒரு ஓட்ட வீரராக வருவதற்குத் தேவையான கால்களுக்குப் பொருத்த வேண்டிய பிளேட்டுகளுக்காக அதனைத் தயாரிக்கும் கம்பெனிகளை நாடினாலும் ஈற்றில் ஐஸ்லான்ட்டிலுள்ள ஓசர் என்ற கம்பெனியே இவருக்குப் பொருத்தமான கால் பிளேட்டுகளைத் தயாரித்துக் கொடுத்தது.

விளையாட்டில் பிரசித்தி பெற்றிருந்த போது இவரைத் தங்கள் தயாரிப்புகளின் விளம்பரத்துக்காகப் பயன்படுத்திக் கொண்ட தொழில் நிறுவனங்கள் விசேடமாக விளையாட்டு வீரர்கள் அணியும் உடைகள், சப்பாத்துகள் மற்றும் உபகரணங்கள் போன்றவற்றைத் தயாரிப்பவர்கள் இவருக்கு ஆண்டொன்றுக்கு ஊதியமாக இரண்டு மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இவரது முயற்சியும் வெற்றியும் வலு வாசகர்களையும் வலுப்படுத்தும் என எண்ணுகிறோம். மனதால் ஊனமுற்றோர் அதிகம் வாழும் இவ்வுலகில் உடலால் ஊனமுற்றவர்கள் பலர் சாதனையாளர் களாக இருப்பதோடு வெற்றியாளர்களாக வலம் வருவதும் மகிழ்வைத் தருகிறது

# வலுவிடம் கேளுங்கள்

◆ **எனக்கு யுத்தம் காரணமாக இடுப்பின் கீழ்ப் பகுதி பாதிக்கப்பட்டு சக்கர நாற்காலியிலிலேயே வாழ்க்கையைக் கழிக்கிறேன். என்னைக் கால் பாதிப்புக்குள்ளான ஒருவர் காதலிக்கிறார். இக்காதலை நம்பலாமா? இது அன்பு சார்ந்து இருக்குமா? எதிர்காலம் பற்றிய பயம் எனக்கு உள்ளது இதற்குத் தங்களால் விளக்கம் தர முடியுமா?**

டிலக்சனா கிளிநொச்சி

◆ சகோதரி,'வாழ்க்கை வாழ்வதற்கே' சக்கர நாற்காலியில் வாழ்ந்தும் சாதனையாளர்களாக வாழ்ந்த பலரை நீங்கள் அறிந்து இருப்பீர்கள். நீங்கள் விரும்பாமலேயே யுத்தம் இந்த விளைவை உங்களுக்குத் தந்துவிட்டது. அதற்காக வாழ்வில் நீங்கள் ஒதுங்கிவிடத் தேவையில்லை. முதலில் குறித்த நபரின் காதலை ஏற்றுத் திருமண உறவில் நிலைப்பதற்கு நீங்கள் தயாராக இருக்கின்றீர்களா என்ற சுயபரிசோதனையைச் செய்து கொள்ளுங்கள். அடுத்து நபரின் நல்ல அம்சங்களை நீங்கள் புரிந்து கொள்வதற்கு அப்பால் அவரிடமிருக்கின்ற எதிர்மறையான எண்ணங்கள் மற்றும் நடத்தைகளையும் புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள். காதல் தருகின்ற கற்பனை அனுபவத்திற்குள் பலரும் நனைந்து துணையின் மறுபக்கத்தைத் தெரிந்துகொள்ளாது குடும்பமாக இணைகின்ற பொழுதும் காலஓட்டத்தில் முரண்பாடுகள் யாதேனும் ஏற்பட்டால் அதனை கையாள முடியாத நிலையில் சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எனவே நீங்கள் ஒரு பெண்; அத்தோடு வலுவிழப்புடன் கூடிய நபராகவும் இருக்கின்றீர்கள். இலகுவில் பாதிக்கப்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகமாக உண்டு. எனவே உங்கள் வாழ்க்கை தொடர்பில் விழிப்பாக இருங்கள். உங்கள் எண்ணமும் குறித்த நபரது எண்ணமும் பொருந்துகின்றபொழுதும் தங்களது உடல் மற்றும் உளத் தகைமை ஏற்றதாக அமைகின்றபொழுதும் திருமண உறவு நிச்சயமாக வெற்றியளிக்கும். நீங்கள் பொருத்தமான முடிவை எடுத்து வாழ்வில் வளம்பெற வலுவின் வாழ்த்துக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கடந்த இதழின் தொடர்ச்சி)

# ஓட்டிசம்

பாலபாரதி



## சிறப்புக் குழந்தையின் பெற்றோரே! ஒரு நிமிடம்!

"அடேய் பசங்களா பரீட்சை மட்டுமே உங்க வாழ்க்கையை மாற்றாதுடா. போய் ஜாலியா பரீட்சை எழுதிட்டு வாங்கடா" இவை +2 தேர்வுக்கு முன்தினம் தூத்துக்குடி அருகே இருந்த ஏதோ ஒரு தேநீர் கடையில் எழுதப் பட்ட வாசகம்.

இவற்றை இப்பொழுது பார்க்கும்பொழுது உங்களிடம் சொல்லி விடத் தோன்றுவது இதுதான் "அன்பிற்கினிய பெற்றோர்களே. சிகிச்சை என்பதும் பயிற்சி என்பதும் பள்ளி என்பதும் மட்டுமே உங்கள் குழந்தை களின் வாழ்க்கையைத் தீர்மானிக்கக்கூடிய விஷயங்கள் இல்லை. உங்கள் மனமகிழ்ச் சியே அவற்றைத் தீர்மானிப்பவை. ஆக உங்கள் குழந்தைகளோடு மகிழ்ச்சியாக இருங்கள்."

இதனைச் சொல்வதற்கு அடிப்படைக் காரணம் பெற்றோர்களின் தொடர்ந்த வருத் தங்கள் மற்றும் பதற்ற உணர்வுகளால் தங்களின் உண்மையான தன்மையை இழந்து தவிக்கிறார்கள். இந்த ஒரு உளவி யல் சிக்கல்களை வைத்தே உங்களிடம் உள்ள அத்தனை வளங்களையும் சுரண் டுவதற்கு ஏராளமான. நவீனமயமான ஒரு குழு இயங்கிக்கொண்டிருக்கின்றது. கவனம் மிகக் கவனமாக இருங்கள்.

இது நிச்சயமாக உங்களைப் பயமுறுத்து வதற்காக எழுதப்பட்டதல்ல. உங்கள் பதற றம் என்பது உங்களை நீங்களே மற்றவர்க ளிடம் சுரண்டச் சொல்வதற்கு ஒப்பாகும். "உங்கள் பதற்றமே எங்கள் குறிக்கோள் உங்கள் பதற்றமே எங்கள் இலாபம்" என்ற ஒற்றைக் கொள்கையோடு பல்வேறு மையங்களும், அதன் பிரதிநிதிகளும் பல்வேறு தளங்களில் விரவிக் கிடக்கிறார் கள். மிக கவனம்.

### எப்படி சரியான நிபுணர்களை / மையங் களைத் தெரிவு செய்தல்

1. உங்கள் பிரச்சினைகளுக்கு நீங்கள் தான் காரணம் என்ற பழிசுமத்தும் பட லத்தை எந்தவொரு மொழிநடையிலும் வெளிப்படுத்தாத தன்மை

2. குழந்தைக்கான பிரச்சினைகள் குறித் தான சந்தேகங்களுக்கு அறிவியல் ரீதியி லான விளக்கங்கள். தேவை ஏற்படின் அதை தெளிவுபடுத்தப் பரிந்துரைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கப்பட்ட வலைத்தளங்கள் மற்றும் நூல் களைப் பரிந்துரைத்தல்

3. தான் வழங்குகின்ற சிகிச்சை, பயிற்சி குறித்தான சரியான விளக்கம் மற்றும் திட்டங்கள்.
4. எந்த நேரத்திலும் அதிகபட்சமாக இரு தினங்களுக்குள்ளாக உங்களுக்கான நேரத்தைச் செலவிட்டு உங்கள் சந்தே கங்களைத் தெளிவுபடுத்துதல்.
5. உங்களின் கல்வி மற்றும் புரிதல் திறன் களுக்கு ஏற்ப நேரடியான பயிற்சியை அளிக்கவும் அவர்கள் வழங்கும் பயிற் சியை நேரடியாக/ ஜன்னலுக்கு வெளியே நின்று கவனிக்கவும் அனுமதி வழங் குதல்.
6. உங்கள் குழந்தைகளை உடல் ரீதியா கவோ, உணர்வு ரீதியாகவோ காயப் படுத்தாமல் இருத்தல்.
7. எந்தவொரு நிலையிலும் பயிற்சிகளில் இருந்து முழுமையாகவும் தன்னிச்சை யாகவும் நிறுத்திக் கொள்ளும் உரிமை யைத் தொடர்ந்து வலியுத்துதல்.
8. உங்கள் அனுமதியின்றி உங்கள் குழந் தைகளின் அடையாளங்களை மற்றவர் களுக்குத் தெரிவிக்காமல் இருத்தல்.
9. சிகிச்சை, பயிற்சிகள் தேவைப்படும் காலத்தைத் துல்லியமாகக் கணக்கிட முடியாவிட்டாலும் கூட நிச்சயமாக ஒரு எல்லையை வரையறை செய்தல்.
10. உங்கள் இயலாமையை ஒருபோதும் பயன்படுத்தாமல் உங்கள் திறன்களை மேம்படுத்தி உங்களைத் தன்னிச்சை யாகச் செயல்படச் செய்வது.
11. பல வருடங்கள் கழிந்த பிறகு தங்களின் இயலாமையை அன்புடனோ, அதி காரத்துடனோ வெளிப்படுத்தாது இருத்தல்.
12. எந்த நிலையிலும் தங்களின் தகுதி, நிபுணத்துவம் போன்றவற்றை உங்களிடம் உறுதிப்படுத்த விழைதல்.
13. தான் பயின்ற துறை சாராத எந்தவொரு துறைப் பயிற்சிகளையும் தான் செய்வ தில்லை என்ற தெளிவோடு இருத்தல்.
14. வெளியுலகம் தெரியாது குழந்தையை மாதக் கணக்கில், வருடக் கணக்கில் பூட்டிய அறைக்குள் வைத்திருத்தல்.

இவற்றையெல்லாம் சாத்தியப்படுத்தக்கூடிய அரசு சார்ந்த, அரசு சாராத பல்வேறு அமைப் புகள் உள்ளன. அவற்றை கண்டறிய இது போன்ற எண்ணற்ற குழுக்கள் இருக் கின்றன. ஆக பதற்றம் மட்டுமே தீர்வல்ல, ஏற்றுக்கொள்ளலும், தேவை ஏற்படின் எதிர் வினை செய்தலுமே இன்றைய தேவை. அதுவே உங்களுக்கும், குழந்தைகளுக் குள்ளும் மகிழ்ச்சியையும் பாதுகாப்பையும் உறுதிசெய்யும்.

**நன்றி:-**
**தனபாண்டியன், மறுவாழ்வு உளவியல் நிபுணர் (நடத்தை சீராக்கல் பயிற்றுநர்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சாளரம்

## சர்வதேச ஓட்டிச தினம்
## ஏப்ரல் 02-2021

உலக ஓட்டிச தினம் இவ்வாண்டு "பணியிடத்தில் சேர்ப்பது, தொற்றுநோய்க்குப் பிந்தைய உலகில் சவால்கள் மற்றும் வாய்ப்புகள்" எனும் தொனிப் பொருளில் உலகளாவிய ரீதியில் நினைவு கூறப்பட்டது. உலகையே அச்சுறுத்தி முடக்கியுள்ள கொவிட்-19 பெரும் தொற்றுக் காரணமாக இம்முறை இத்தினம் அநேமாக சமூக ஊடகங்களோடும் குறிப்பிட்ட ஓட்டிசக் குழந்தைகள் சமூகத்தோடும் மட்டுப் படுத்தப்பட்டு விட்டது. பொதுவாக இன்றைய சூழலில் செய்திகளை யாவரிடமும் கொண்டு சேர்க்கக் கூடிய ஊடகமாக சமூக ஊடகங்கள் மாறி வருகின்றன. இதனால் இத்தினம் தொடர்பான தகவல்கள் இவ்வூடகங்களில் வெளிவருவதன் ஊடாக இது பலருக்கும் பயன் தருவதாக அமையும். இந்த வகையில் வலைத்தளங்களில் பெறப்பட்ட தகவல்களை உள்ளடக்கிய விழிப்புணர்வுத் தொகுப்பொன்றைச் செய்திச் சாளரத்தில் தருகின்றோம்.

ஓட்டிசம் என்பது நோயல்ல இது வளரும் குழந்தைகளைப் பாதிக்கும் மனவளர்ச்சிக் குறைபாட்டு நிலையே ஆகும். உலக சுகாதார அமைப்பின் (WHO) ஒரு கணக்கெடுப்பு, 160 குழந்தைகளில் ஒருவர் ஓட்டிசம் குறைபாட்டினால் (Autism Spectrum Disorder- ASD) பாதிக்கப்படுகிறார் எனத் தெரிவிக்கின்றது. ஓட்டிசத்தினால் பாதிக்கப்பட்டவர்களை அங்கீகரித்து கொண்டாட ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 2ஆம் தேதி உலக ஓட்டிசம் விழிப்புணர்வு தினமாக அனுட்டிக்கப்படுகின்றது. ஐ.நா பொதுச் சபையில் நவம்பர் 1, 2007 இல், ஓட்டிசம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கென உலக ஓட்டிச தினமாக ஒரு நாளை பிரகடனப்படுத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய 2008ஆம் ஆண்டு ஏப்ரல் 2ஆம் திகதி முதல் குறித்த தினம் உலக ஓட்டிச தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டு அனுட்டிக்கப்பட்டு வருகின்றது.

ஓட்டிசத்தினால் பாதிக்கப்பட்டவர்களினதும் அவர்களது குடும்பத்தவர்களின தும் மனப் பாரத்தைக் குறைத்து, ஓட்டிசக் குழந்தைகளின் வாழ்க்கையை முன்னேற்றுவது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் இவர்களினதும் இவர்கள் சார்ந்து பணியாற்றுபவர்களினதும் திறன் விருத்தியினை மேலும் மேம்படுத்துவதற்கான பயிற்சிகள், ஆறிவூட்டல் முதலியவற்றை வழங்குதல் இத்தினத்தை அனுட்டிப்பதன் சிறப்பம்சமாகும்.

பொதுவாக மனிதர்கள் எல்லோரும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. இதே போலத்தான் ஓட்டிசப் பாதிப்புக்குள்ளான எல்லோரும் ஒரே மாதிரி இருக்க மாட்டார்கள். அதே வேளை இவ் வோட்டிசப் பாதிப்பின் தன்மைக்கு ஏற்பவும் ஒவ்வொருவரினது இயல்பும் மாறுபடும். இப்பாதிப்புக்கு உள்ளானவர்களை மருத்துவ சிகிச்சை அளித்து குணப்படுத்த முடியாது. ஆனால் உரிய காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஓட்டிசத்தை இனங்கண்டு மருத்துவரின் ஆலோசனைகளைப் பின்பற்றி, பயிற்சிகளை வழங்குவதனூடாகவும் இதற்கான பயிற்சிகளை பெற்ற நிபுணத்துவம் வாய்ந்தவர்களூடாகப் பயிற்சிகளை வழங்குவதனூடாகவும் இப்பாதிப்புக்கு உள்ளானவர்களை ஓரளவோ அல்லது முழுமையாகவோ இயல்பு வாழ்க்கைக்கு கொண்டு வர முடியும்.

ஓட்டிசம் என்பதை அடையாளம் கண்டு கொள்வது சிறு வயதில் சிரமமானது. எனினும் அவ்வயதில் கண்டு கொள்ளப் படுகின்றபொழுது தான் இப்பிள்ளையை இலகுவாக இயல்பு நிலைக்குக் கொண்டு வர முடியும். ஓட்டிசப் பிள்ளைகளைப் பொறுத்த வரை அவர்களிடம் காணப்படும் சில இயல்புகளாக பின்வருவனவற்றை அடையாளப் படுத்தலாம். அவையாவன:

அடிக்கடி எழுந்து ஓடுதல், பொறுமையின்மை, எதிலும் கவனம் செலுத்தாமை, 2 வயதைத் தாண்டியும் பேச முடியாமல் இருத்தல், முகத்தை நேரே பார்த்துப் பேசக் கூச்சப்படுதல், வகுப்பில் ஓரிடத்தில் இருக்காமை, தனிமையை விரும்புதல், அதிக பிடிவாதம், சிலவகை ஆடைகளை அணிய மறுத்தல், சுற்றும் பொருட்களை விரும்பி நீண்ட நேரம் பார்த்தல், பொருட்களை வித்தியாசமாக கையாள்வது, சமூகப் புரிதல்கள் இல்லாமை, பயம், ஆபத்துப் போன்றவற்றை உணராமை, அதிக பதற்றம், வலியை உணராமை, மாற்றங்களை ஏற்றுக் கொள்ளாமை என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

ஓட்டிசக் குழந்தைக்ளுக்கு இவ்வறிகுறிகளில் சிலவோ பலவோ காணப்படலாம். எனினும் இவ்வறிகுறிகளோடு குறித்த வயதுடைய அக்குழந்தையின் வயதை ஒத்த இன்னொரு இயல்பான குழந்தையின் நடத்தையோடு ஒப்பிடும்பொழுது மாறுதல்கள் தென்படுமாயின், அக்குழந்தையினை ஓட்டிசப் பாதிப்புக்குள்ளான குழந்தை என இனங்காணலாம். பொதுவாக, பெண் குழந்தைகளை விடவும் ஆண் குழந்தைகளை ஓட்டிசம் பாதிக்கின்றது. உலகளவில் அண்மைக்காலத்தில் இப்பாதிப்புக்குள்ளானவர்களின் தொகை அதிகரித்து வருவதினையும் அவதானிக்க முடிகின்றது. பெரும்பாலும் படித்த மற்றும் பணக்காரக் குடும்பங்களில் இப்பாதிப்புக்குள்ளான குழந்தைகள் காணப்படுகின்ற பொழுது சிலர் தங்களது குடும்ப கௌரவம் காரணமாகவும் குழந்தைமீது கொண்ட அதீத பாசம் காரணமாகவும் ஓட்டிசத்தினை ஆரம்ப நிலையில் ஏற்க மறுக்கின்றனர். பலர் ஆரம்ப காலத்தில் மருத்துவ ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ளத் தவறுகின்றனர். இது இப்பாதிப்புக்குள்ளான குழந்தைகளை சீர் திருத்துவதில் தாமதத்தை ஏற்படுத்துகின்றது.

ஆரம்ப நிலையிலேயே ஓட்டிசம் இனம் காணப்பட்டு உரிய முறையில் பயிற்சிகள் வழங்கப்படுமாயின், எதிர்காலத்தில் அக்குழந்தையை நல்லதொரு நிலைக்குக் கொண்டு வர முடியும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் க.பொ.த பரீட்சைகள், பல்கலைக்கழக பட்டங்கள் என்ற கனவுகளுக்கு அப்பால் இப்பிள்ளைகள் எத்துறையில் ஆர்வம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காட்டுகின்றார்கள் என்பதனை அறிந்து. அத்துறையில் பயிற்றுவித்தால் அத்துறைசார் நிபுணத்துவம் மிக்கவர்களாக உருவாக்க முடியும். இசை, ஓவியம், கணிதம், விளை யாட்டு போன்ற துறைகளில் ஓட்டிசப் பாதிப்புக் குள்ளானவர்கள் சாதனை புரிவதனைப் பல இடங்களில் காணலாம்.

ஓட்டிசப் பாதிப்புக்குள்ளானவர்கள் ஓரிடத் திலிருந்து திடீரென எழுந்து ஓடுவதனாலும், திடீரென உரக்க சத்தமிட்டுக் கத்துவதனாலும் பொது இடங்களில் அவர்களை அழைத்து வரும் பெற்றோர்கள், மற்றும் உறவினர்கள் அசௌ கரியங்களுக்கு உள்ளாகியிருக் கின்றமையினைக் கண்டிருக்கின்றோம். அவ்விடத்தில் இவர்கள் மீதான சமூகத்தின் பார்வை அவர்களை அவமானப்படுத்து வதாக அமையாது ஆரோக்கியப்படுத்துவதாக அமைய வேண்டும். அத்தோடு அவமானப் பார்வைகளுக்கு அஞ்சி பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் இக்குழந்தைகளைப் பொது இடங்களுக்கு அழைத்து வருவதை நிறுத்திவிடக் கூடாது. ஓட்டிசப் பாதிப்புக்குள்ளான வர்களைச் சமூகத்தோடு இணைந்து வாழச் செய்வதற்கு பெற்றோர்களின் பங்கே மிக முக்கியமானது. எனவே இத்தினத்தில் அனைவரும் ஓட்டிசப் பாதிப்புள்ளானவர்களின் வாழ்வை உயர்வு நிலைக்குக் கொண்டு வருவதற்கு தங்களாலான பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

## "ஸ்மார்ட் கைத்தடி ஒரு புதிய கண்டுபிடிப்பு..."




விஞ்ஞானத்தால் மனிதன் விண்வெளி வரை சர்வ சாதாரணமாகப் பறக்கிறான்... இருந்தும் என்ன? மாற்றுத்திறனாளிகளின் நிலை அப்படியேதானே இருக்கிறது! சொல்லப்போனால் தொழில்நுட்ப முன்னேற்றம் இந்நேரம் அவர்களின் இயலாமையை இல்லாமல் செய்திருக்க வேண்டுமே! என்ற ஆதங்கம் எல்லோரிடமும் உண்டு.

அந்த ஆதங்கத்தைப் போக்கும் வகையில் ஒரு கண்டுபிடிப்பைத் தென்னிந்திய கல்லூரி மாணவர்கள் முன்னெடுத்திருக்கிறார்கள். பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக் காக இவர்கள் உருவாக்கியிருப்பது பேசும், வழிகாட்டும் கைத்தடி (Walking Stick). சுருங்கச் சொன்னால் ஸ்மார்ட் வாக்கிங் ஸ்டிக்! (Smart Walking Stick). பார்வையற்றோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் புது விதமான ஸ்மார்ட் கைத் தடியினை கோவையை சேர்ந்த மாணவர்கள் உருவாக்கியுள்ளனர். இதன் மூலம் அவர்கள் நடக்கும்போது எதிர்ப்படும் பொருட்கள் என்ன என்பதை அவர்கள் அறிந்துக் கொள்ள முடியும். மூன்று வகையான தொழில்நுட்பங்களுடன் கூடிய அந்த கருவியின் மூலம் எதிரே வரும் பொருட்களை அறிவதற்காகவும், மின்சாரப் பயன்பாட்டை வாய்மொழி மூலம் கட்டுப்படுத்தவும், தனியாக இருக்கும் போது செய்திகள் மற்றும் பொதுஅறிவு உள்ளிட்டவற்றை அறிந்துக் கொள்ளவும் முடியும். அந்த இளைஞர்களின் கண்டுப்பிடிப்பு தமிழக அரசின் மாணவர்கள் கண்டுபிடிப்பு என்ற திட்டத்தில் தேர்வாகி யுள்ளதால் அந்த ஆய்வுகூடத்தில் இருந்து தொடர்ந்து தமிழக அரசின் உதவியுடன் இந்தக் கருவியை உருவாக்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தசரசம்

தொகுப்பு : நா. கீதா கிருஷ்ணன்


01. இல்கியச் சுவை
02. பரலருக்கு ஒரு கதை
03. இலகு வழி English
04. நலம் தரும் மருத்துவம்
05. பலன் சொல்லும் ஜோதிடம்
06. வெளிநாட்டுப் பயணம்
07. உலகப் புகழ் பெற்ற மனிதர்கள்
08. அதிசயிக்க வைக்கும் உண்மைகள்
09. விலங்கொன்றின் வாழ்க்கை
10. மாணாக்கருக்கு ஒரு கட்டுரை


## 01. இலக்கியச் சுவை


**இராமர் கதை** (கடந்த இதழ் 29இன் தொடர்ச்சி...)

**சூர்ப்பனகை வருகை**

ஒரு நாள் அரக்கர் குலத்தவளான சூர்ப்பனகை எனும் அரக்கி இராம, இலக்குவணன் மற்றும் சீதை தங்கியிருந்த பஞ்சவதியிலுள்ள குடில் பகுதிக்கு வருகின்றாள். அங்கே இருந்த இராமனைக் கண்ட அவள், ஆகா! என்ன தோற்றம், இவனது தோற்றம் என்று மயங்கி இராமன்பால் மோகம் கொண்டாள். அவனிடம் உடனே சென்று பழகி உறவாட ஆசை கொண்டாள். இந்த அரக்க உருவில் சென்றால், அவன் வெறுத்து விட்டால் என்ன செய்வது என்று எண்ணி ஓர் அழகிய பெண்ணின் உருவத்தை எடுத்துக் கொண்டாள். மெல்ல அடி எடுத்து வைத்தபடி நளினமாக நடந்து சென்று, இராமன் முன் வந்தாள். அவளைக் கண்ட இராமன் "யார் நீ? எங்கு வந்தாய்? உன் வரவு தீமை தராததாக இருக்கட்டும். உன் ஊர் எது? உன் பெயர் என்ன? உனது உறவினர்கள் யார்?" என்று வினாவினான். அதற்கு அவள் "பூவிலோன் புதல்வன் மைந்தன் புதல்வி" என்றாள். அதாவது பூவிலிருப்பவன் பிரம்மன், அவனுடைய மகன் புலஸ்தியன், அவனின் மகன் விஸ்ரவசு, அவனின் வழியில் வந்த மகள் தான் சூர்ப்பனகையாகிய நான் என்றாள். மேலும் முப்புரங்களை எரித்த சிவபெருமானின் நண்பன் குபேரனின் தங்கை என்றும், கைலாச மலையைப் பெயர்த்தவனும் மூவுலகங்களையும் ஆள்கின்றவனுமான இராவணனின் சகோதரி என்றும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கன்னியான காமவல்லி (சூர்ப்பனகை) நான் என்றும் கூறினாள். இதனைக் கேட்ட இராமன் சொல்கிறான். "அப்ப டியா? நீ இராவணனின் தங்கையா? அப்படியானால் அரக்க உருவம் நீங்கி இப்படி அழகிய தோற்றம் எங்ஙனம் பெற்றாய், முதலில் அதனைச் சொல்". இராமன் அப்படிக் கேட்டதும் சூர்ப்ப னகை எனும் காமவல்லி சொல்கிறாள் "அந்த மாய அரக்கர்களோடு வாழப் பிடிக்காமல் தவம் செய்து தேவர்களிடம் வரம் பெற்று அழகிய உருவம் பெற் றேன்" என்று மனதாரப் பொய் சொன் னாள்.

இறைவா! உன்னிடம் நான் ஒரு காரியம் தனித்துப் பேச விரும்பியே தனியாக வந்திருக்கிறேன்" என்றாள். அவள் மேலும் பேசுகிறாள் "உயர் குடியில் பிறந்த மகளிர் தம் காம விழைவைத் தாமே சொல்ல முடியுமா? எனக்குத் தூது செல்லவும் வேறு துணை இல்லை. உயிர் போவதுபோல வருந்துகிறேன். எனவே வேறு வழியின்றி நானே நேரில் உன்னிடம் உரைக்க வந்தேன். எனவே காமன் என்னிடம் செய்யும் கொடுமையைத் தவிர்த்து நீ என்னை ஆண்டு அருள்வாயாக". இவள் சரியான வெட்கங்கெட்டவளாக இருக்கிறாளே. அற்பமானவள் கூட இப்படிப் பேசும் இவள் நல்லவள் இல்லை. இவளிடம் இனியும் பேசுவது ஒழுக்கமல்ல, தனக்கு ஏற்றதல்ல என்று இராமன் எண்ணமிட்டிருக்க, அந்த சமயத்தில் சீதை அங்கே வந்தாள். சுடரொளி மின்னும் உருவத்தோடு, அரக்கர்களின் காட்டைச் சுட்டெரிக்கும் எரிதணல் போல கற்பு எனும் தீயான பிராட்டி தோன்றினாள். அரக்கி சூர்ப்பனகை சீதையை உற்றுப் பார்த்தாள். அவள் பேரழகில் சற்று தன்னையும் மறந்து போய் நின்றாள். அடடா! இவளைக் கண்ட எனக்கே மயக்க நிலை அடைகிறதே. இவளைக் காணும் ஆடவர்க்கு என்ன நிலை ஆகுமோ? என்று எண்ணமிட்டாள். இராமனிடம் சீதையைக் காட்டிச் சொல்கிறாள், "இதோ வருகிறாளே, இவள் ஒரு மாயக்காரி. வஞ்சனை செய்யும் அரக்கி. இவள் நினைப்பதை மறைப்பவள். இவளை நம்பாதே! இவள் அழகானவள் என்று எண்ணாதே! இது பொய்யான வேடம். இவள் மாமிசம் உண்டு வாழ்பவள். எனக்கே இவளைப் பார்க்க பயமாக இருக்கிறது. இவளை உடனே இங்கிருந்து விரட்டி விடு" என்றாள். இராமன் மறுபடியும் கேலியாக சூர்ப்பனகையைப் பார்த்து "பெண்ணே! நீ மிகவும் புத்திசாலி. உன்னை யாரால் ஏமாற்ற முடியும்? உன் அறிவினால் ஆராய்ந்து எப்பேர்ப்பட்ட உண்மையைக் கண்டுபிடித்திருக்கிறாய்" என்று சொல்லி சிரித்தான். அப்போது சீதை இராமனை நெருங்கி வருகிறாள். சூர்ப்பனகை ஆத்திரத்தோடு "அரக்கியே! நீ ஏன் எங்களுக்குக் குறுக்கே வருகிறாய்?" என்று கத்திக்கொண்டு சீதையை நோக்கிப் பாய்ந்து வருகிறாள். இவள் பாய்ந்து வந்ததைக் கண்டு சீதை பதறிப் போய், தனது பஞ்சுபோன்ற பாதங்கள் நோவ ஓடிச்சென்று இராமனைக் அணைத்துக் கொண்டாள். அரக்கர்களோடு விளையாடுவது தீமையென்றுணர்ந்த இராமன், சூர்ப்பனகையை நோக்கி "பெண்ணே! கொடிய காரியங்களைச் செய்யாதே! என் தம்பிக்கு நீ இப்படி நடந்து கொள்ளும் விவரம் தெரிந்தால் உன்னைத் தண்டித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவான். அதனால் இங்கிருந்து ஓடிவிடு" என்றான். எவ்வளவு எடுத்துச் சொல்லியும் மனம் தெளியாத இந்த அரக்கியிடம் இனிப் பேசிப் பலனில்லை என்று இராமன் சீதையை அழைத்துக் கொண்டு தன் பர்ணசாலைக்குள் சென்றுவிட்டான்.

இராமன் போனபிறகு சூர்ப்பனகை நினைக்கிறாள். 'என்ன இவன், இவ்வளவு பேசியும் நம்மிடம் ஆசை வைக்க மறுக்கிறானே. கொஞ்சம்கூட மோகம் அடைய வில்லை. இதில் என்மேல் கோபம் வேறு வருகிறது. அந்தப் பெண்ணிடம் ஆசை கொண்டிருக்கிறான், அதனால்தான் இப்படி நடந்து கொள்கிறான்', என்று எண்ணிக் கொண்டு அவ்விடம் விட்டு அகன்றாள். 'இந்த அழகனுடைய மார்பினை இன்று நான் தழுவாவிட்டால் மாண்டுபோவேன்' என்று ஒரு மலையடிவாரத்திலுள்ள சோலைக்குச் செல்கிறாள்.

அப்போது சூரியன் மலையடியில் மறைந்தான். இரவு முழுவதும் காம வேதனை யில் வாழ்ந்த சூர்ப்பனகை பொழுது விடிந்ததும் சிறிது மனம் தேறியவளாய், அந்தப் பேரழகி அவன் அருகில் இருக்கும்வரை அவன் என்னை ஏறெடுத்தும் பார்க்க மாட்டான். எனவே அவளைத் திருடிக் கொண்டுபோய் எங்காவது ஒளித்து வைத்து விட்டுப் பின் அவள் உருவில் வந்து அவனோடு கூடி வாழ்வதே அறிவுடைமை என்று நினைத்தாள். பிறகு மெதுவாக இராமன் இருந்த இடம் வந்து பார்த்தாள். இராமன் தூரத்தில் ஓர் ஆற்றங்கரையில் ஸ்தானம் செய்து கொண்டிருப்பதைக் கண்டாள். அவன் தம்பி சீதைக்குக் காவல் இருந்தான் என்பதை அவள் அறியவில்லை. "இவள் தனியாகத்தான் இருக்கிறாள், இவளை இப்படியே பற்றித் தூக்கிக் கொண்டு ஓடிவிட வேண்டும்" என்று எண்ணி மெதுவாக சீதை இருக்குமிடம் சென்றாள். இதனை அங்கு காவல் செய்து கொண்டிருந்த இலக்குவன் கவனித்து விட்டான். "அடீ! நில்!" என்று அதட்டிக்கொண்டே இலக்குவன் அரக்கியை நெருங்கினான். இவள் ஒரு பெண்ணா யிற்றே என்று தன் வில்லை எடுக்கவில்லை. அவள் கூந்தலைப் பற்றி இழுத்து நிறுத்தினான். தன் காலால் அவளை எட்டி உதைத்தான். தன் இடையில் இருந்த உடைவாளை உருவி எடுத்தான். இவனையும் அவளோடு சேர்த்து எடுத்துக் கொண்டு ஆகாய மார்க்கத்தில் செல்வேன் என்று அவர்களைத் தூக்கிக் கொண்டு மேலே கிளம்பியவளை, இலக்குவன் இலகுவாக கீழே தள்ளி "இப்படிக் கொடுந்தொழிலைச் செய்யாதே" என்று சொல்லிக் கொண்டே, அரக்கியின் மூக்கையும் செவிகளையும் தன் வாளால் அறுத்து எறிந்தான். பிறகு அவளது கூந்தலை விட்டான். அப்போது அந்த அரக்கியான சூர்ப்பனகை அலறிய அலறல் இருக்கிறதே, அது எட்டுத்திக்கிலும் எதிரொலித்தது. தேவலோகத்திலும் சென்று கேட்டது. அவள் உறுப்புகளிலிருந்து வழிந்த இரத்தம் உலகம் முழுவதும் படர்ந்தது. சூர்ப்பனகையின் மூக்கும் காதுகளும் அறுபட்ட காட்சி, இராவணனின் மணி மகுடமும், பத்துத் தலைகளும் துண்டிப்பதற்குக் குறித்த முகூர்த்தம் போலத் தோன்றியது. பெண்ணாய்ப் பிறந்த எனக்கு நேர்ந்த கொடுமை இது என கதறுகிறாள்.

சூர்ப்பனகை இப்படி அழுது புரண்டு அரற்றிக் கொண்டிருக்கும் வேளையில் நதிக்கரையில் ஸ்தானம் முடித்து, கையில் வில்லோடு வந்த இராமன் இவளைச் கவனித்தான். வருகின்ற இராமனைப் பார்த்து அந்த அரக்கி, உடலில் குருதி ஆறாக ஓட, கண்கள் நீர் சொரிய, என் தலைவனே! ஐயோ! உன் திருமேனிக்கு ஆசைப்பட்டு அன்பு காட்டியதால் நான் படும் துன்பம் இது! பாராயோ...! இந்தக் காட்சியைக் கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இராமன் ஏதோ பெரிய தீங்கிழக்க இவள் முயன்றமையால் காதும் மூக்கும் அரியப் பட்டிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். இராமன் இலக்குவனை நோக்கி "வீரனே! இவள் என்ன கொடிய தீங்கு செய்தமையால் காதையும் மூக்கையும் இழக்க நேடிட்டது என்றான். நடந்தவற்றை இளையவன் எடுத்துரைத்தான். பின்னர் இராமனை நோக்கி சூர்ப்பனகை "நீ என்னை மணந்து கொள். எனக்கு இழைத்த தீமைக்காக என் அண்ணன் இராவணன் உன்னைக் கொல்லாமல் பார்த்துக் கொள்கிறேன்" என்றாள். இராமன் கோபத்துடன் அவளை அங்கிருந்து போகும்படி கூறுகிறான். அவள் போக மறுக்கவும் இலக்குவன் இவளால் பெருந் தொல்லை, இவளைக் கொல்வதே சரி என்கிறான். இவ்வளவு பேசியும் அவள் போகவில்லையென்றால், அவளைக் கொல்வதே சரி என்கிறான் இராமனும். "இதோ போகிறேன். உங்களைக் கொன்று அழிக்க அரக்கனை அழைத்து வருகிறேன்" என்று கோபமாய் கூறிவிட்டு அந்த இடத்தைவிட்டு அகன்றாள் சூர்ப்பனகை.

இராமன் துரத்திவிட அங்கிருந்து ஓடிப்போன சூர்ப்பனகை, உடலிலிருந்து குருதி ஒழுக, அவிழ்ந்த கூந்தலோடு, மூக்கு இருந்த இடத்தில் இரத்தம் வழியும் இரண்டு துவாரங்கள் தெரிய, மதகு போன்ற வாயோடு, செவ்வானம் மேல் படர்ந்த மேகம்போல, சென்று அந்தக் காட்டில் அதிகாரம் செய்துவரும் கரன் எனும் அரக்கன் காலில் வீழ்ந்து அழுதாள். அவளின் நிலையைப் பார்த்த கரனுக்கு கோபம் வந்தது. "உனக்கு இந்த கேட்டை செய்தவர் யார்?" என்று கேட்டான். அதற்கு அவள் "மானிட உருவம் கொண்ட இருவர், தவசிகள் போன்று கையில் வில் ஏந்தியவர்கள், வாளேந்திய கரத்தினர், மன்மதன் போன்ற மேனியர், தர்மவழி நடப்பவர்கள் தசரத குமாரர்கள் அரக்கர்களை அழிக்கும் நோக்கில் வந்தவர்கள்" என்றாள். "அவர்களோடு ஒரு பெண் இருக்கின்றாள். வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பேரழகி அவள். அவளை இலங்கை வேந்தர்க்குக் கொண்டு செல்ல நான் முயன்றபோது இப்படிச் செய்து விட்டார்கள்" என்றாள். "அப்படியா? என்னுடன் வா. அவர்களை எனக்குக் காட்டு" என்றான் கரன். கரன் சூர்ப்பனகையுடன் கிளம்பி இராம லக்சுமணருடன் போர் புரியச் செல்லத் தயாராகும்போது, அவனுடைய படைத்தலைவர் வந்து, தானே சென்று அந்த மானுடர்களை வென்று வருவதாகக் கூறுகிறான். கரனுடைய படை இராமன் தங்கியிருந்த பர்ணசாலையைச் சென்றடைந்தது. அங்கு இருந்த இராமனை படைத்தலைவனுக்குச் சுட்டிக் காட்டினாள் சூர்ப்பனகை. உடனே அரக்கர்கள் 'கொல்லுவோம்', 'வெட்டுவோம்' என்று கூச்சலிட்டுக் கொண்டு அந்த இடத்தைச் சுற்றி வளைத்தனர். இந்த சந்தடிகளையெல்லாம் கேட்டு இராமன் நிலைமையைப் புரிந்து கொண்டான். மூக்கறுபட்ட அரக்கி உதவிக்கு ஆட்களோடு வந்திருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்டான். இலக்குவனை அழைத்து "தம்பி! நீ இங்கே காவல் இரு. சீதையைப் பார்த்துக் கொள். நான் போய் அவர்களை கவனித்துக் கொள்கிறேன்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சொல்லிப் புறப்பட்டான். 'போரிட வந்தீர்களா' என்றபடி தன் வில்லில் அம்பைப் பூட்டினான் இராமன். அரக்கர்களின் ஆயுதங்கள் இராமன் அம்பினால் துண்டிக்கப பட்டுத் தூள்தூளாயின. அரக்கர் நெஞ்சங்களை இராமபாணம் துளைத்துச் சென்றது. இது கண்டு சூர்ப்பனகை அஞ்சி ஓடினாள். ஓடிப்போய் கரனிடம் அவனுடைய படை அழிந்துபோன செய்தியைக் கூறினாள். கரனுக்குக் கோபம் பொங்கிக்கொண்டு வந்தது. தன் படைகளை ஒன்று திரட்டிக் கொண்டு தேரில் ஏறிக்கொண்டான். பெரும் படையோடு போருக்கு வந்தான். கடல்போன்ற கரனுடைய சேனை, இராமன் இருக்குமிடம் சென்றடைந்தது. இராமனும் போருக்கு ஆயத்தமானான். இலக்குவனும் போருக்கு ஆயத்தமாய் வந்து நின்றதைக் கவனித்த இராமன், அவனிடம் தானே போரை கவனித்துக் கொள்வதாகவும், அவனை போய் சீதைக்குக் காவலாக இருக்கும்படியும் கூறிவிட்டு, கரனுடைய படையுடன் போருக்குத் தயாரானான். கரனுக்கு இராமனை அடையாளம் காட்டுகிறாள் சூர்ப்பனகை. அரக்கர் சேனை நாலாபுறமும் சூழ்ந்து கொள்ள இராமன் தனியனாய் தன் வில்லினை ஏந்திப் போர் புரிகிறான். இருளுக்கு இடையே ஒரு விளக்கினைப் போல காட்சி தந்தான் இராமன். கடுமையான யுத்தம் நடந்தது. இராமனின் அம்புகள் அரக்கர்களையும், அவர்களுடைய ஆயுதங்களையும் வீழ்த்தின. தலைகள் துண்டிக்கப்பட்டு அரக்கர் சேனை அழிந்தது. கரன் மட்டும் தனித்து நின்று போர் புரிந்தான். கடுமையான போர் கரன் இராமன் இடையே நடைபெறுகிறது. இறுதியில் கரனும் இராமனின் கணையால் அடிபட்டு மாண்டு போகிறான். இதனைக் கண்டு தேவர்கள் மகிழ்ந்தனர். கற்பக மலர்களை இராமன்மீது தூவினர். அரக்கர்கள் கூட்டத்தை அழித்த பிறகு இராமன் ஆசிரமம் திரும்பினான். வெற்றி வீரனாகத் திரும்பி வந்த இராமனைச் சீதையும், இலக்குவனும் கண்களில் நீர் சொரிய வரவேற்றுத் தங்கள் கண்ணீரால் அவனது பாதங்களைக் கழுவினர்.

போர்க்களத்தில் கரன், தூசணன், திரிசிரன் ஆகியோர் மாண்டது கண்டு சூர்ப் பனகை கதறி அழுதாள். இராமன்மீது நான் கொண்ட ஆசை, என் மூக்கோடு மட்டும் போகவில்லை, என், வாக்கினால் உங்கள் உயிர்களையும் பலி கொடுத்த பாவி நான், என்று புலம்பினாள். இனி என்ன செய்வது? நான் போய் இராவணனிடம் சென்று முறையிடுகிறேன். என்று இலங்கைக்கு ஓடுகிறாள் சூர்ப்பனகை. தனது சகோதரர்கள் இறந்த துக்கத்தையும் மறந்து, இராமன் மீது வைத்த ஆசை மனத்தில் மேலோங்க, சீதையின் அழகையெல்லாம் இராவணனிடத்தில் கூறிவிட ஓடோடி வருகிறாள்.

இலங்கை அரண்மனையில் ஓர் ஒப்பற்ற மணிமண்டபத்தில் இராவணன் சிறப்புடன் அமர்ந்திருக்கிறான். அவனுடைய சிறப்புக்களைக் கண்டு மும்மூர்த்திக ளும், தேவர்களும் மனம் வெதும்பும்படியாக ஆடம்பரமாக வீற்றிருக்கிறான். அந்த சபா மண்டபத்தில் கூடியிருந்த அரசர்கள் எல்லாம் எப்போது இராவணன் தங்கள் பக்கம் திரும்புவானோ" என்று எதிர்பார்த்துத் தலைக்கு மேல் தங்கள் கரங்களைக் கூப்பிக்கொண்டு பணிவாக நின்றார்கள். தன்னருகில் நிற்கும் பணியாளனிடத்தில் ஏதாவது இராவணன் கூறினாலும் 'தங்களிடம் தான் கூறுகிறானோ' என்று தலை ஆட்டிக் கொண்டு நிற்கிறது அந்தக் கூட்டம்.

இவ்வளவு ஆடம்பரத்தோடு அரசவையில் இராவணன் வீற்றிருக்கையில், அவனது தங்கை சூர்ப்பனகை, அலங்கோலமாய்த் தலைமீது கைகளை வைத்தவாறு கதறி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதபடி, அரண்மனையின் வடக்கு வாசல்வழியாக வந்து அரசவையில் வீற்றிருக்கும் இராவணனின் காலடியில் விழுந்து புரண்டு அழுகிறாள். மூவுலகங்களும் இந்தக் காட்சியைக் கண்டு அஞ்சின. எங்கும் இருள் சூழ்கிறது. இடிபோன்ற குரலில் தன் தங்கையைப் பார்த்து "உன்னை இப்படிச் செய்தது யார்?" என்கிறான். "

"அண்ணா! மானுடர்கள்தான் இப்படிச் செய்தார்கள். மன்மதனைப் போல உருவம் கொண்டவர்கள். தங்கள் தோள் வலிமையால் மேரு மலையையும் அழிக்கக்கூடிய ஆற்றலுடையவர்கள். தங்கள் வில் வலிமையால் ஏழு உலகங்களின் பலத்தையும் அழிக்கக் கூடியவர்கள் என்றாள். "இவர்கள் ஒரு சபதம் செய்திருக்கிறார்கள். அது என்ன சபதம் தெரியுமா? அரக்கர் குலத்தையே வேரோடு அழிக்கப் போகிறார்களாம்". "இவர்கள் தசரத சக்கரவர்த்தியின் குமாரர்கள். இராமன், இலக்குவன் என்பது அவர் களது பெயர்கள்" என்றாள். தன் தங்கைக்கு இப்படியொரு தீங்கு செய்தவர்கள் மானு டர்கள். அப்படித் தீங்கு செய்த பின்னும் அவர்கள் உயிரோடு இருப்பது அவமானம். என் கையில் சிவபெருமான் கொடுத்த வாள் இருக்கிறது. அவன் கொடுத்த முக்கோடி வாழ்நாள் இருக்கிறது. கைலாயத்தையே பெயர்த்தெடுத்த தோள்கள் உண்டு. நானும் உயிரோடு இருக்கிறேன், என்று சொல்லிக்கொண்டே நகைத்த இராவணன், அந்த மானுடர்கள் உன் அங்கங்களை அரியும்படியாக நீ என்ன குற்றம் செய்தாய்? அதைச் சொல்" என்றான். "அதுவா? சித்திரத்தில் எழுத முடியாத பேரழகு படைத்த அந்த இராமனோடு, தாமரை மலரிலிருந்து நீங்கி வந்த மகாலக்சுமி போன்ற பேரழகி ஒருத்தி வந்திருக்கிறாள் அண்ணா! அவள் பொருட்டு இப்படி நடந்து விட்டது" என்றாள். "யார் அவள்?" என்றான் இராவணன். "நீ வாழ்க! அண்ணா! அவள் இருக்கிறாளே, அவளை எங்ஙனம் வர்ணிப்பேன். அவள் பாதம் படுவதற்கு பூமி புண்ணியம் செய்தி ருக்க வேண்டும். அவள் பேர் சீதை" "அவள் பேச்சு இனிய கனியின் சுவை. தேனூறும் மலர்களையுடைய கூந்தலை உடையவள். தேவ மகளோ என எண்ணும்படியான திருமகள். அவள் சொற்கள் அமுதம் போன்றவை. அவளது நீண்ட அழகிய கூந்தல் நீருண்ட மேகம் போன்றது. அவள் பாதங்கள் செம்பஞ்சு போன்றது. விரல்களோ செம்பவழம் போன்றது. அவளது முகம் தாமரை மலர் போன்றது. கண்களோ பெரிய கடல் போன்றது". "சிவன் காமனை எரித்து அழித்துவிட்டதாகச் சொல்வது பொய். அவன் இந்தப் பெண்ணின் அழகைக் கண்டால் காம நோய் பிடித்து மெல்லத் தன் உருவம் தேய்ந்து போவான். இவளைப்போல அங்க இலக்சணங்கள் உடைய பெண்ணை நீ எந்த உலகத்திலும் காண முடியாது. அவளது பேரழகை எப்படி எடுத்து ரைப்பேன்". அவளது தோள் அழகை வர்ணிப்பேனா?, முகத்தில் அங்கும் இங்குமாக அலையும் கருமையான கண்களை வர்ணிப்பேனா? எழில் கொஞ்சும் அவளது கொங்கைகளை வர்ணிப்பேனா, பார்த்துப் பார்த்துத் திகைத்துப் போனேன், எப்படி ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியாக வர்ணிப்பேனோ, நீதான் நாளையே அவளை பார்க்கப் போகிறாயே, பிறகு நான் அதைப்பற்றிச் ஏன் சொல்வேன்?. "அவளது நெற்றி வில் போன்றது என்று சொல்லலாமா? அவளது கருவிழிகள் வேல் போன்றது என்று சொல்லலாமா" அவளது பற்கள் இருக்கின்றனவே அவற்றை முத்துக்களுக்கு ஒப்பிடலாமா? அவளது சிவந்த இதழ்களை பவழம் போன்றது என்று சொல்லலாமா? என்றாலும் கூட சொற்கள் பொருந்துவதுபோல பொருள் சரியாகப் பொருந்தவில் லையே." இப்போது சூர்ப்பனகை சீதையின் அழகையும், அவளது அங்கங்களின் அளவற்ற அழகுச் சிறப்புக்களையும் சொல்லி இராவணன் மனதில் மோகத்தீயை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூட்டுகிறாள். "அண்ணா! தெய்வேந்திரனுக்கு சசி எனும் இந்திராணி கிடைத்து விட்டாள். ஆறுமுகனாம் முருகனுடைய தந்தையாகிய சிவபெருமானுக்கு உமாதேவியார் கிடைத்து விட்டார். தாமரைச் செங்கண்ணனார் திருமால் திருமகளைப் பெற்றான் அதுபோலவே, இப்போது நீ சீதையைப் பெறப் போகிறாய். இதில் நான் கூறியவர்கள் எல்லோரையும் காட்டிலும் உனக்குத் தான் பெருமை அதிகம்".



"அண்ணா! கொடை வள்ளலே நீ தவறு செய்யமாட்டாய். கிளி போன்று பேசுகின்ற சீதைக்கு உன் அனைத்துச் செல்வங்களையும் கொடுத்துவிடு. உனக்கு எப்பேர்ப்பட்ட நன்மை செய்திருக்கிறேன் பார்த்தாயா? அந்த சீதையைக் கவர்ந்து வருவதன் மூலம், அவன் தன் உயிரையே இழக்கப் போகிறானல்லவா. அதனை எண்ணியோ என்னவோ, சூர்ப்பனகை அவனை வள்ளலே என்று அழைக்கிறாள். "நீ பிழைக்கல் ஆற்றாய்" என்று நீ தவறு செய்ய மாட்டாய் என்று பொருள்பட இருந்தாலும், இனி நீ பிழைக்கப் போவதில்லை என்ற பொருளிலும் கொள்ளலாமே! அத்தகைய வஞ்சக எண்ணத்தோடுதானே அந்த சூர்ப்பனகை இராவணனிடம் வந்திருக்கிறாள். "அண்ணா! இந்த சீதை எந்தப் பெண்ணின் வயிற்றிலும் பிறந்தவளல்ல. அப்பேற்பட்ட சீதையை நான் உனக்குத் தந்தேன். அதற்குப் பிரதிபலனாக, நீ அந்த இராமனை எனக்குக் கொடுத்து விடு" என்று பேரம் பேசுகிறாள். "நன்மையோ, தீமையோ, ஒருவனுக்கு அவை ஊழ்வினை காரணமாகத்தான் கிட்டுகிறது. என்றாலும், அது எப்போது கிடைக்க வேண்டுமோ அப்போதுதான் கிடைக்குமே தவிர, வேறு காலங்களில் கிடைத்து விடுமா?

பத்து முகங்களும், வலிமை பொருந்திய மார்பும் இருபது தோள்களும் இருபது கண்களும் படைத்த நீ, இந்த சீதையைப் பெற்ற பின்தான் முழு செல்வமும் பெற்றவனாக ஆகிறாய்" இவ்வாறாக இராவணன் மனதில் சீதை பற்றிய ஆசைகளைப் பெருகச் செய்தாள். சீதையைக் கவர்ந்து கொண்டு வந்து உன்னிடம் சேர்க்க வேண்டுமென்று தான், நான் அவள் அருகில் சென்றேன். அப்போது அந்த இராமனின் தம்பி இலக்குவன் இடையில் புகுந்து, நான் அவளைப் பிடிக்கும் முன்பாக, என் மூக்கையும் காதையும் அரிந்து விட்டான். அதனால் என் வாழ்வும் முடிந்து விட்டது. நடந்த விசயங்களையெல்லாம் உன்னிடம் சொல்லிவிட்டு என் உயிரை விட்டுவிடத் தீர்மானித்து விட்டேன்" என்கிறாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூர்ப்பனகை ஏவிய அந்த மோகனாஸ்திரம் இராவணனை முழுமையாக ஆட்கொண்டுவிட்டது. காமனுடைய கணைகள் அவன் நெஞ்சிலே பாய்ந்து. சூர்ப்பனகை வர்ணித்த சீதையை மறக்க முடியாதவனாகி, தன் தம்பி முறையாகும் கரன் முதலானவர்கள் இறந்ததைக் கூட மறந்தான். அதைவிட தன் தங்கை காமவல்லியாம் சூர்ப்பனகையின் காது மூக்கை அரிந்த இராம லக்சுமணர்களின் வலிமையையும் உணர மறந்தான். இந்த நிகழ்ச்சியால் தனக்கு ஏற்பட்டுள்ள அவமானத்தையும் மறந்தான். முன்பு அவன் பெற்ற ஒரு சாபத்தால் மனைவி தவிர பிற பெண்களைத் தொட்டால் அவன் சிரசு வெடித்து இறப்பான் என்ற செய்தியையும் மறந்தான். ஆனால், அவன் மனத்தில் காமத் தீயை உண்டாக்கி விட்ட சீதையெனும் பெண்ணை மட்டும் மறக்க முடியாதவன் ஆனான். சீதையை சிறையெடுத்துக் கொண்டு வந்து இலங்கையில் வைக்கும் முன்னரே, அவன் தன் மனச் சிறையில் அவளைப் பூட்டி வைத்தான். அவன் மனம் சீதையின் நினைவால் வெயிலில் வைத்த வெண்ணெய் போல உருகியது. இராவணன் தனது இருக்கையை விட்டு எழுந்தான். கூடியிருந்த அவையோர் அவனுக்கு ஆசி கூறினர். ராஜசபை முடிந்ததற்கு அடையாளமாகச் சங்கம் முழங்கியது.

(தொடரும்....)

## 02. பாலருக்கு ஒரு கதை




ஒரு மரத்தில் தூக்கணாங் குருவிகள் கூடு கட்டி குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தன. ஒருநாள் கடும் மழை பெழிந்தது. அப்பொழுது அந்தக் குருவிகள் கூட்டிலிருந்தவாறு வெளியில் நடப்பவற்றைப் பார்த்தன.

ஒரு குரங்கு மழையில் நனைந்தவாறு அம்மரத்தடியில் வந்து அமர்ந்தது. அது மிகவும் நனைந்திருந்தது. அதனைப் பார்த்த குருவிகள் "நண்பர் குருங்காரே ஏன் இந்த மழையில் நனைந்து திரிகின்றீர்? உமக்கு இறைவன் இரண்டு கால்களையும் கைகளையும் தந்திருக்கிறார். அவற்றைப் பயன்படுத்தி ஒரு வீடு கட்டி வாழலாமே" என்றது.

நாங்கள் எங்கள் சின்னஞ்சிறிய சொண்டினால் வீடு கட்டி மழைக்கு நனையாமல் இருப்பதைப் போல நீரும் வீடு கட்டி மழைக்கு நனையாமல் இருக்கலாமே என்றது.


இதைக்கேட்ட குரங்குக்கு கடும் கோபம் வந்தது "தூக்கணாங் குருவிகளே எனக்குப் புத்தி சொல்ல நீங்கள் யார்?" எனச் சொல்லியவாறு விறுவிறு என்று மரத்தில் ஏறி அக்கூட்டினைப் பிடுங்கி எறிந்தது. இதனால் தூக்கணாங் குருவிகள் தம் குஞ்சுகளுடன் மழையில் நனைந்தபடி பறந்து சென்றன.

**நாம் ஒருவருடைய நிலையை அறிந்து கொண்டதன் பின்னரே அவருக்கு அறிவுரை கூற முற்பட வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. இலகுவழி ஆங்கிலம் [English]



**எனது பாடசாலை**

01. நான் செல்வி சஜனிகா பிரபாகரன்.
02. நான் தரம் நான்கில் இருக்கின்றேன்.
03. நான் யாழ்/கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கின்றேன்.
04. எனது பாடசாலை மிகவும் அழகானது.
05. அது யாழ்ப்பாணத்தில் இருக்கின்றது.
06. அது ஒரு கலவன் பாடசாலை.
07. அது ஒரு ஆரம்ப பாடசாலை.
08. அங்கே தரம் ஒன்றிலிருந்து தரம் ஐந்து வரை வகுப்புகள் இருக்கின்றன.
09. எனது பாடசாலையில் 230 மாணவர்களும் 15 ஆசிரியர்களும் இருக்கின்றார்கள்.
10. அங்கே மூன்று கட்டிடங்கள் இருக்கின்றன.
11. அங்கே ஓர் அழகான விளையாட்டு முற்றம் இருக்கின்றது.
12. எனது பாடசாலை அதிபரின் பெயர் திருமதி G . பரந்தாமன்.
13. அவர் மிகவும் இரக்கமானவர்.
14. எனது ஆசிரியர்கள் மிகவும் நட்பானவர்கள்.
15. நான் எனது பாடசாலையை மிகவும் நேசிக்கின்றேன்.

1. I am Miss Sajanika Prabakaran.
2. I am in grade 4.
3. I study at J/Kalviyankadu Hindu Tamil Mixed School.
4. My school is very beautiful.
5. It is in Jaffna.
6. It is a mixed school.
7. It is a primary school.
8. There are classes from grade 1 to grade 5.
9. There are 230 students and 15 teachers in my school.
10. There are three buildings in my school.
11. There is a beautiful playfield in my school.
12. The name of my school's principal is Mrs. G.Paranthaman.
13. She is very kind.
14. My teachers are very friendly.
15. I love my school very much.

**Mrs. Tharshini Kirusanthan,**
**English Teacher,**
**J/Kalviyankadu.**
**H.T.M. School.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலு -28 இப்பகுதியில் இடம்பெற்ற ஆக்கத்தில் சில அச்சுத் தவறுகள் ஏற்பட்டுள்ள மைக்காக வலு தனது வருத்தத்தினை தெரிவிக்கின்றது. இத்தவறுகளுக்கான முழுப் பொறுப்பினையும் ஏற்றுக் கொள்ளும் வலு இவ்வாக்கத்தில் இடம் பெற்ற தவறுகளைச் சரி செய்து மீள பிரசுரம் செய்கின்றது.


6. It was given as a gift by my uncle
6. அது எனது மாமாவினால் ஒரு பரிசாக தரப்பட்டது.
7. It belongs to famous dog breeds called Alsatian.
7. அது அல்சேஷன் எனப்படும் பிரபலமான நாய் இனங்களிற்குச் சொந்தமானது.
10. In every morning Roy goes out for a walk with my father lovingly.
10. ஒவ்வொரு காலையிலும் றோய் நடப்பதற்காக எனது அப்பாவுடன் அன்பாக வெளியே செல்கிறார்.


## 04. நலன் தரும் மருத்துவம் மாரடைப்புப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

(கடந்த இதழின் தொடர்ச்சி...)

### மாரடைப்புக்கான அறிகுறிகள்

மாரடைப்பு ஏற்படுவதற்கான அறிகுறி களை நோக்குமிடத்து மாரடைப்பு உண் டென்பதற்கான அறிகுறிகள் அனைவரும் கூறுவதுபோல வலியாக தென்படுவது வெறும் 50 சதவீதம்தான். பல பேருக்கு இனம் புரியாத ஓர் உணர்வு இருக்கும். அதை வெளிப்படுத்த இயலாது. இன்னும் நிறைய பேருக்கு அந்த இடத்தில் அமுக்கு வது போலவும் பிசைவது போலவும் இருக் கும். சில பேருக்கு வெறும் வாந்தி வரும் உணர்வாகத்தான் இருக்கும். சில பேருக்கு இதுவும் இருக்காது. உடலில் வியர்வை மட்டும் அதிகமாக வரும். இப்படி பல அறிகுறி கள் இருப்பதால் இப்படிப் வந்தால்தான் மாரடைப்பு என நாம் குறிப்பிட்டுக் கூற இய லாது. இந்த மாதிரி அறிகுறிகள் எங்கெல் லாம் தென்படலாம் என்றால். தாடைக்கு கீழும்; வயிற்றுப் பகுதிக்கு மேலும் முன் அல்லது பின் எங்கேனும். இந்த அறிகுறிகள் தென்பட்டால், அது மாரடைப்புக்கானதாக இருக்கலாம். மாரடைபபுககான அறிகுறி என்றால் வலியானது குறைந்தது 15 அல்லது 20 நிமிடம் வரை நீடிக்கும்.






மாரடைப்புக்கான சாத்தியங்கள் 100% உள்ள ஒருவருக்கு பின்வரும் அறிகுறிகள் தென்படலாம். நடக்கும்போதும் படிக்கட்டுகளில் ஏறும்போதும் சிலருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்ச்சிவசப்பட்டுப் பேசும்போதும் வலி ஏற்படும். இவ்வாறானவர்கள் மருத்துவ பரிசோதனை மேற்கொள்ள வேண்டும். சிலருக்கு இவ்வறிகுறிகள் இன்றியே மாரடைப்பு வரலாம். இவர்களுக்கு வலி ஏற்படுவதே தெரியாது. இவர்கள் தோள்பட்டையில் வலியை உணரலாம். வாயுத் தொந்தரவு, மூச்சுத் திணறல், படபடப்பு மற்றும் சட்டென்று வியர்ப்பது போன்றவை தென்பட்டால் அது மாரடைப்புக்கான அறிகுறிகளாக இருக்கலாம். அவர்கள் மருத்துவரை நாட வேண்டும். மூச்சு வாங்குதல், தலை சுற்றல் மற்றும் மயக்கம், அஜீரணக் கோளாறுகள், உடல் வலி, வியர்த்துப்போதல், படபடப்பு, நடக்கும் போது ஓர் அழுத்தத்தை உணர்தல், வயிற்று வலி, சோர்வு ஆகியவைதான் அந்த அறிகுறிகள்.



**பெண்களுக்கு வரும் மாரடைப்பு நோய் அறிகுறிகள்**

ஆண்களைப்போலவே பெண்களுக்கும் மாரடைப்பு நோய் ஏற்படுவது தவிர்க்க முடியாதது. ஆனால் அதற்கான அறிகுறிகள் ஆண்களைவிடப் பெண்களுக்கு வித்தியாசமானதாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அறிகுறிகள் அதாவது, இருதய நோய்களின் ஆரம்ப அறிகுறிகள் ஆண்களைவிட பெண்களால் வேறு மாதிரி உணரப்படும். பெண்களுக்கு ஏற்படும் அறிகுறிகள் மிக மென்மையாக இருக்கும். பொதுவாக அதிகப்படியான வேலை செய்வதால் ஏற்படுகிற சோர்வு, படபடப்பு, மூச்சிரைத்தல், நெஞ்சுவலி போன்றவை ஏற்பட்டால் உடனே இருதய நோய்களுக்காக கவனிக்கப்பட வேண்டும். இருதயத்திலிருந்து தொடங்கும் பிரச்சினை எந்தவிதமான செயலிலும் மோசமடையக் கூடும்.

**நெஞ்சுவலிக்கு நாக்குக்கு அடியில் மாத்திரை வைப்பது ஏன்?**

ஒருமுறை மாரடைப்பு ஏற்பட்ட ஒருவருக்கு திடீரென நெஞ்சு வலி ஏற்பட்டால் உடனடியாக அவர்களுக்கு நாக்குக்கு அடியில் ஹநைட்ரேட்' (Nitrate tablets). எனும் மாத்திரை வைக்கப்படுகின்றது. இதற்காகக் காரணம் நாக்குக்குக் கீழே வைத்தவுடன் அது வேகமாகக் கரைந்து இரத்தத்தில் கலந்து உடனடியாகப் பலனளிக்கும் என்பதனால் தான். இம்மாத்திரை அளவினை மருத்துவரின் சிபார்சுக்கு அமையவே பயன்படுத்த வேண்டும். இந்த மாத்திரையானது இதய இரத்தக் குழாய்களை விரிவடையச் செய்து, இதயத் தசைகளுக்கு இரத்தவோட்டத்தை அதிகரிக்கும். இதனால் வலி குறையும். பிற மருந்துகள் எல்லாம் வயிற்றுக்குப்போய் ஜீரணமாகி, பின்னரே இரத்தத்தில் கலக்கும். நரம்பில் போடப்படும் ஊசியான இன்ட்ராவைனஸ் (Intravenous)"க்கு இணையானது இந்த நைட்ரேட் மாத்திரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மாரடைப்பு ஏற்பட்டவுடன் செய்ய வேண்டிய முதலுதவி**

மாரடைப்பு ஏற்பட்டால் 20-30 நிமிடங்கள் வலி நீடிக்கும். இதயத் தசைகளுக்கும் பெரிய சேதத்தை உண்டாக்கும் என்று மருத்துவர்கள் கூறுகின்றனர். மார்பில் 20 நிமிடங்களுக்கு மேல் வலி நீடித்தல், தாடைக்கு வலி பரவுதல், தலைசுற்றல், வியர்வை, மூச்சு விட சிரமம் ஏற்படல். போன்ற அறிகுறிகள் தென்பட்டால் உடனே இந்த முதலுதவி விடயங்களைச் செய்யுங்கள்.

01. பாதிக்கப்பட்ட நபரை வசதியாக அமர வையுங்கள்

மாரடைப்பு அறிகுறிகள் இருக்கும் நபர் படுத்துக் கொள்ள விரும்பினால் அவர் படுத்துக் கொள்ளட்டும். அவரை வசதியாக இருக்க விடுங்கள்.

02. மூச்சுவிட வசதி

அந்த நபர் நல்ல காற்றை சுவாசிக்க ஏதுவாக காற்றோட்டமாக விடுங்கள். புதிய காற்றை சுவாசிக்கட்டும். அவர்களைச் சுற்றி மற்றவர்கள் நிற்காதீர்கள். அவருக்கு காற்று வர இடம் வருமாறு செய்யுங்கள்.

03. இறுக்கமான ஆடைகளை அவிழ்த்து விடுங்கள்

அந்த நபர் இறுக்கமாக ஆடை அணிந்திருந்தால் அதை அவிழ்த்து விடுங்கள். இது அவர் மேலும் நன்றாக சுவாசிக்க உதவியாக இருக்கும்.

04. அவசர எண்ணை அழைக்கவும்

சில நேரங்களில் அம்புலன்ஸ் வர சிறிது நேரம் ஆகலாம். அம்புலன்ஸ் வரும் வரை காத்திருக்க வேண்டாம். உடனடியாக அந்த நபரை அருகிலுள்ள மருத்துவ மனைக்கு அழைத்துச் செல்லுங்கள்.

05. ஐஸ்பிரின் மாத்திரை வழங்குதல்

இது ரத்தம் உறைதலைத் தடுக்கும். இதைக்கடித்து மென்று அல்லது சிறிதளவு தண்ணீரில் விழுங்கச் செய்யலாம்.

06. சி.பி.ஆர் முதலுதவி (கார்டியோபல்மோனரி)

ஒருவேளை மாரடைப்பு ஏற்பட்டவர் சுயநினைவை இழந்துவிட்டால், இதயத் துடிப்பு நின்றுவிட்டால் அவருக்கு சி.பி.ஆர் முதலுதவி அளிக்கலாம். சிபிஆர் செய்ய நீங்கள் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டும்:

- மார்பின் மையத்தில் ஒரு கையை வைத்து அதன்மேல் மற்றொரு கையை வைத்துக் கடினமாகவும் வேகமாகவும் அழுத்த (புஷ்) வேண்டும்.
- ஒரு நிமிடத்திற்கு 100-120 முறை அழுத்த முயற்சிக்கவும் (அவரின் இதயத் துடிப்பைப் பின்பற்றுங்கள்)
- தயவு செய்து நீங்கள் சிபிஆர் செய்யும்போது பயப்பட வேண்டாம்.

07. மாரடைப்பால் பாதிக்கப்பட்டவருக்கு எக்காரணம் கொண்டும் உணவோ, நீரோ அந்த நேரத்தில் கொடுக்காதீர்கள்.

08. டிஃபிபிரிலேஷன்

மாரடைப்பால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மற்றொரு முதலுதவி சிகிச்சை முறை டிஃபிபிரிலேஷன் ஆகும். பல பொது இடங்களில் தானியங்கி வெளிப்புற டிஃபிபிரிலேட்டர்கள் (AED) உள்ளன. இது ஒரு சிறிய மின்னணு சாதனம், இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயத்திற்கு அதன் சாதாரண இதய துடிப்பை மீட்டெடுக்க மின்சார அதிர்ச்சியை அளிக்கிறது. இந்த இயந்திரங்கள் மிகவும் உதவிகரமாக இருக்கும். மேலும் மாரடைப்பால் பாதிக்கப்பட்டவரின் உயிரைக் காப்பாற்ற இது உதவுகிறது.

மேற்கண்ட முதலுதவி சிகிச்சைகளை மருத்துவரின் ஒத்துழைப்போடு நீங்கள் செய்யும்போது ஒருவரின் உயிரை நம்மால் காப்பாற்ற முடியும். எனவே இந்த மாதிரியான முதலுதவிச் சிகிச்சைகளை அனைவரும் தெரிந்து கொள்வது அவசியம்.

**மாரடைப்பைத் தவிர்த்தல்.**

யாருக்கு வேண்டுமானாலும் மாரடைப்பு ஏற்படலாம். அதைத் தவிர்ப்பதற்கான காலம் கடந்து போய்விடவில்லை. ஏற்கெனவே, மாரடைப்பு வந்திருந்தாலும் மீண்டும் வர வாய்ப்பு உள்ளது. இன்றே இதற்கான முயற்சியை எடுப்பதன் மூலம் மாரடைப்பைத் தவிர்க்கலாம்.

01. மருத்துவரை அணுகி எளியப் பரிசோதனைகள் மேற்கொள்வதன்மூலம் மாரடைப்பு வருவதற்கான வாய்ப்பைக் கண்டறியலாம். வர வாய்ப்பு உள்ளது என்றால், தவிர்ப்பதற்கான மாத்திரைகளை மருத்துவர் பரிந்துரைப்பார். இவற்றைத் தவறாமல் எடுக்க வேண்டும்.
02. புகையிலையைத் தவிர்ப்பது
03. உடல் பருமனைத் தவிர்த்து சரியான பி.எம்.ஐ அளவைப் பராமரிப்பது.
04. இரத்த அழுத்தம் (இரத்தத்தில் சர்க்கரை, கொலஸ்ட்ரால் அளவைக் கட்டுக்குள் வைப்பது)
05. ஆரோக்கியமான உணவுப் பழக்கம்.
06. தினசரி உடற்பயிற்சி

## 05. பலன் சொல்லும் ஜோதிடம்

**ஜோதிடர் V.A.சிவராசா B.A.** (கடந்த இதழ் தொடர்ச்சி...)

**சனீஸ்வர மாற்றம் உங்களுக்கு எப்படி?**

1. 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகள் சனீஸ்வர மாற்றப் பலாபலன்கள்
2. 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம் வரை வியாழ மாற்றப் பலன்கள்
3. 2.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு இராகு கேது மாற்றப் பலன்கள்

◆ **துலாம்**

சித்திரை 3,4 / சுவாதி / விசாகம் 1,2,3

கண்டக் சனீஸ்வரன் வாக்கிய பஞ்சாங்கப்படி 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகளுக்கு துலா ராசிக்காரர்களை ஆட்டம் போட வைக்கப் போகின்றார். காரணம் 4இல் நிற்கும் சனீஸ்வரனேயாகும். வியாழ பகவான் 15.11.2020 தொடக்கம் ஒரு வருடத்திற்கு தர்மபுத்திரரை வனவாசம் செல்ல வைத்த நிலைப்பாடு 4இல் இருக்கப் போகின்றார். 02.09.2020 தொடக்கம் ராகு அட்டமத்திலும் கேது 02லும் அமர்ந்து தத்தமது அதிகாரத்தைக் காட்டிய வண்ணம் இருப்பார்கள். சர்ப்பகிரகங்களால் பாதிப்புக்கள் ஓரளவு குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாமிடத்தில் நிற்கும் சனீஸ்வரன் கண்டகச்சனி எனப்படும். வாழ்க்கை வசதிகளை அனுபவித்து கொண்டிருக்கும் உங்களது நன்மை பலாபலன்களில் இடையூறுகள், தடை, தாமதங்கள், குறுக்கீடுகள் என்பனவற்றை ஏற்படுத்திய வண்ணம் இருப்பார். சனீஸ்வர விரதம் மற்றும் வழிபாடுகளைச் செய்து வருவதுடன் ஆஞ்சநேயருக்கும் சனிக்கிழமைதோறும் வெற்றிலை மாலை சூடி வணங்கிவர துன்ப துயரங்கள் விலகிவிடும். மோசடிகள் உங்களுக்கெதிராக நடந்த வண்ணம் இருக்கும். குடியுரிமைபெறும் பொருட்டு வெளிநாட்டுப் பெண்மணிகளுடன் காகித திருமணம் ஏற்படலாம். மாதாவின் நோய்களைக் குணப்படுத்த முன் நில்லுங்கள். பிறர் உதவினால் மட்டுமே வெளிநாடு செல்ல கால் பதியுங்கள். வயது சென்ற பெண் பிள்ளைகள் திருமண பந்தத்தில் இடம்பெறாதிருப்பதை எண்ணி பெற்றோர் மனக்கிலேசமடைதல். சங்கடங்களைத் தீர்த்து வைக்கும் சனீஸ்வரனை மனதார வணங்குவதால் தடைப்பட்ட காரியங்கள் தங்கு தடையின்றி நிறைவேறிவிடும். வெளிநாட்டினின்றும் இரத்த உறவுகள் வருகை தந்து வீட்டைக் கலகலப்பாக்குவார்கள். கைவிட்டிருந்த காதல் உறவுகள் மீண்டும் மலர்தல். வெளியீடுகளில் ஆர்வம் காட்டுதல். மருகர் மாமன் இடையில் சொத்துச் சம்பந்தமான பிரச்சினை ஏற்பட்டு நீதிமன்றம்வரை செல்லும் நிலைமை ஏற்படும். ஐரோப்பிய மொழிகள் கற்கச் செல்லுதல். வாகன யோகங்கிட்ட சகோதரி உதவி செய்தல்.

◆ **விருச்சிகம்**

விசாகம் 4/அனுசம்/கேட்டை

வாக்கிய பஞ்சாங்கப்படி விருச்சிக ராசியினர்க்கு 26.12.2020இல் ஏழரைச்சனி முற்றாக விலகி விடும். இதுவரை காலமும் நொந்துருகிக் கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கிக்கிடந்தோரைக் கரையேற்றும் கைங்கரியத்தை 26.12.2020 தொடக்கம் 3ஆம் வீட்டுச்சனி செய்யப் போகின்றார். குருபகவான் 15.11.2020 தொடக்கம் ஒருவருட காலம் துரியோதனன் படையைப் பலமிழக்கச் செய்த மூன்றில் வருகின்றார். இராகு, கேது என்பன 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு ராகு 7ம் நிலையிலும், கேது ஜென்மத்திலும் நின்று பிராரத்த கன்ம வினையின் பிரகாரம் பலாபலன்களை அனுபவிக்கச் செய்வார்.

தைரிய வீரியத்திற்கு அதிபதியான சனீஸ்வரன் 03ஆம் நிலையில் வந்து உங்களின் பெருமைகளைப் பிறர் அறியச் செய்து விடுவார். சகோதரர்களின் உதவியினால் வெளிநாடு செல்லும் யோகங் கிட்டும். கைவிட்டிருந்த உறவினர்கள் கரம் கொடுக்க முன் வருவார்கள். மாறாத நோய்கள் குணமடைந்து விடும். அதிர்ஸ்டலாபச் சீட்டெடுப்பில் சிலருக்கு பணாங் கிடைத்து மகிழ்ச்சியில் திளைப்பர். அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலை வாய்ப்புகள் கிடைக்கும். பழைய நண்பர்களைச் சந்தித்து இளமைக் கால நினைவுகளை மீட்டி மகிழ்ச்சியடைதல். பெற்றோரின் வேண்டுதலுக்காக வெளியூர் போகும் மோகத்தைக் கைவிட்டு விடல். மின்சார ஒழுக்கில் கவனமெடுங்கள். பழக்கமில்லாதவருக்கு உங்கள் தொலைபேசியின் இலக்கத்தை கொடுத்து ஆபத்தை விலைக்கு வாங்க வேண்டாம். அனுபவமில்லாத தொழில் நடாத்த ஆசைப்பட்டு அல்லற்பட வேண்டாம். பிள்ளைகளினால் பெற்றோர்களுக்கு வெளிநாடு செல்லும் யோகம் கிடைக்கலாம். கால நிலையின் பாதிப்பினால் விவசாயம் பாழ்பட்டுப் போகலாம். நீண்டகாலம் வாடகைக்கு குடியிருந்த மனையை விட்டு எழும்பிச் செல்லும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கிய அவல நிலை உண்டாகலாம். போதைப் பொருள் பாவனை. வியாபாரம். கடத்தல் மற்றும் விநியோகத்தினால் சட்டத்தின் கரங்களில் சிக்குதல். சிலருக்கு இரண்டாந் தாரமும் முறை தவறிய காதலும். தத்துப் புத்திரயோகமும், முதியோர் நிலையில் பாலியல் இன்பமும் அனுபவிக்கும் நிலையுண்டாகும்.

◆ **தனு**

மூலம்/பூராடம்/உத்திராடம் 01

வாக்கியப் பஞ்சாங்கப்படி 26.12.2020 தொடக்கம் ஏழரைச் சனி வாக்குச் சனியாக இரண்டரை ஆண்டுகளுக்கு ஏழரைச் சனி கடைக்கூறு நிற்பதினால் நன்மையான பலாபலன்களை அனுபவிக்கப் போகின்றீர்கள். வியாழ பகவான் 15.11.2020 தொடக்கம் ஒருவருடத்திற்கு பொன்னையும், பொருளையும் வாரி வழங்கும் கோசர நிலை 02இல் நிற்பார். இராகு கேது என்பன 02.09.2020 தொடக்கம் ஒன்றரை வருடத்திற்கு ராகு 06ல், கேது 12ல் நின்று பிரச்சினைகளைச் சமாளிக்கும் திறன்களை வழங்கப் போகின்றார்கள்.

ஏழரைச் சனி வாக்குச் சனியாக இரண்டாம் இடத்தில் நிற்கப் போகின்றார். வாக்குத் தவறியதால் சிநேகித உறவு பாதிக்கப்படல். பொறுப்பின்றிக் கொடுத்த பணத்தைப் பெற முடியாமல் காவல் துறைக்குச் செல்லல். ஏழரைச்சனி கடைக்கூறாக இருப்பதினால் படிப்படியான முன்னேற்றம் ஆரம்பிக்கும். வாகன வேகத்தைக் கட்டுப்படுத்தவும். முக்கிய ஆவணங்கள் தொலைந்து போகும் அபாயம் உண்டாகலாம். வழுக்கி வீழ்வதினால் உடல் நிலை பாதிக்கப்படலாம். புதியன ஆரம்பிக்கையில் ஜாதகத்தின் திசாபுத்தியில் நற்பலன் தரும் நிலை காணப்பட வேண்டியதவசியம். சிலரின் ஆரம்பிக்கப்பட்ட புதிய மனை கட்டி முடிக்கப்படாது இழுபடலாம். பல காரணங்களின் நிமித்தம் கைகூடும் நிலையில் காணப்பட்ட விவாக முயற்சி ஸ்தம்பிதமடைந்து விடலாம். வெளிநாடு செல்லும் நிலைப்பாட்டைக் கைவிடல். வாடிக்கையாளர்களைக் கவர விலைக் குறைப்பை ஏற்படுத்தல். சட்ட விரோதமாக மின்னிணைப்பை ஏற்படுத்தியமையினால் தண்டனைக்கு உள்ளாதல். டெங்கு நோய் பரவக் காரணமாக இருந்தமை எனக் குற்றஞ் சாட்டப்படல். விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாமை, நிறைகுறைவாக விற்பனை செய்தல், பிழையான கணிப்பைக் காட்டும் கணினித்தராசுப் பாவனை. பொருட்களின் நிறையில் மோசடி செய்தல் என்பவற்றில் பிடிபட்டு தண்டனை அனுபவித்தல். பரீட்சைகளில் ஆள்மாறாட்டத்தினால் ஆபத்தேற்படல். பாலியல் இன்பம் அனுபவிக்க இயலாதவர் தனது குறைபாட்டைக் கூறாது திருமண பந்தத்தில் ஈடுபட்டுப் பெண்ணின் வாழ்க்கையை நாசமாக்கி விடல். சில பிள்ளைகள் சமபால் இன்பத்தில் ஈடுபடல்.

◆ **மகரம்**

உத்தரம்2,3,4 / திருவோணம் / அவிட்டம் 1,2

மகர ராசிக்கு வாக்கிய பஞ்சாங்க கணிப்பின் பிரகாரம் 26.12.2020 தொடக்கம் ஏழரைச்சனி ஜென்மத்துச் சனியாக இரண்டரை ஆண்டுகளுக்கு முதலாம் இடத்தில் நிற்கப் போகின்றார். குருபகவானும் சீதாபிராட்டியாரைச் சிறையில் வைத்த கோசர நிலைப்பாடு ஒன்றில் 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம்வரை வீற்றிருந்து பலன்களைப் புரியப் போகின்றார். தேவாமிர்தம் உண்டதனால் கிரக நிலையில் உள் வாங்கப்பட்ட ராகு,கேது என்பன 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராகு 05ம் இடத்திலும், கேது 11ம் நிலையிலும் நின்று ஏழரைச் சனியால் வருகின்ற துன்பங்களை நீக்கச் செய்யும் கைங்கரியங்களை நடாத்த முன் நிற்பார்கள்.

சனீஸ்வரன் ஜென்மச் சனியாக வருகை தந்து துன்ப துயரங்களை ஏற்படுத்த ஆட்சி பெற்றுள்ளமையினால் தலைக்கு வருந் துன்பம் தலைப்பாகையுடன் சென்று விடலாம். சனியின் கோசர நிலைப்பாட்டுப் பலனால் சிலருக்கு சிறைவாசம் நிச்சயமுண்டு. போதைப்பொருள் பாவனையைக் கட்டுப்படுத்த முடியாமல் அரச-துறையினர் திண்டாடுதல். பொருட்களை விற்பனை செய்ய அடிக்கடி புதிய புதிய யுத்திகளைச் சிலர் கைக்கொள்வார்கள். நீண்ட காலம் கைவிட்டிருந்த சொந்த மனைக்கு குடிபோதல். காசோலை மோசடிகள் ஏற்பட்டு வங்கிச் செயற்பாட்டில் நம்பிக்கையீனம் ஏற்படல். காணிகளின் எல்லைகள் மாற்றியமைக்கப்படலாம். எதிர்பாராத விதமாக நோய்களின் பீடிப்புக்கு ஆளாகலாம். முன்பின் அறிமுகமில்லாதவரை வீட்டுக்கு அழைக்க வேண்டாம். சிலர் சத்திரசிகிச்சை மேற்கொள்வர். சீதனப் பிரச்சினையால் விவாகம் இழுபடும். பரீட்சை முடிவுகள் பாதிக்கப்பட்டதினால் கல்விப்புலத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டு வெளிநாடு செல்லல், திருமணம் செய்ய முற்படல். ஒழுக்கம் உயிரினும் மேலாக ஓம்பப்படும் என்பதை மறவாதீர்கள். செல்லாத பணநோட்டுக்கள் கைக்கு வந்து சேரலாம்.

**கும்பம்**

அவிட்டம்3,4/ சதயம்/ பூரட்டாதி1,2,3

சனீஸ்வரனின் ஆட்சி வீடான கும்ப ராசியில் வாக்கிய பஞ்சாங்கப்படி 26.12.2020ல் ஏழரைச் சனி ஆரம்பமாகி ஏழரை ஆண்டுகளுக்கு சனீஸ்வரனின் வலைப்பின்னலுக்குள் அகப்படப் போகின்றீர்கள். கோசார ரீதியில் சனீஸ்வரன் 12,1,2 ஆகிய நிலைப்பாட்டுக்கு வரும் போது ஏழரைச் சனியின் ஆதிக்கம் தலைவிரித்தாடும். குருபகவானும் 15.11.2020 தொடக்கம் ஒரு வருடம் வரை 12ஆம் கோசரத்தில் நின்று விரயங்கள் ஏற்படச் செய்வார். சர்ப்பக் கிரகங்களான இராகுவும் கேதுவும் ஒன்றரை ஆண்டுகளுக்கு ஒரு தடவை இராசி மாற்றம் பெறுவார்கள். அந்த வகையில் 02.09.2020 தொடக்கம் ராகு 4ஆம் இடத்திலும், கேது 10ஆம் நிலையிலும் நிற்பார்கள்.

ஏழரைச் சனியின் காலத்தில் திருமண முயற்சிகளும் கைகூடலாம். ஏழரைச் சனி விரய ஸ்தானமான 12இல் நிலை கொண்டிருப்பதினால் சுபச் செலவுகள் ஏற்படும். வாகன யோகம், புதுமனை வாங்குதல், சடங்குகளுக்குப் பணம் கொடுத்தல் போன்றவற்றுக்கும் வெளிநாட்டுக்கு மக்களை அனுப்பவும் உயர்கல்வி கற்பிக்கவுமான நிலைகள் ஏற்படும். ஏழரையின் காலத்தில் பிறரை நம்பிக் கொடுத்த கடனை வாங்க முடியாது அவலப்படல். இயன்றவரை புண்ணியஞ் செய்து விமோசனம் பெறும் காரியங்களில் ஈடுபடுங்கள். ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக இருங்கள். விவாகப் பொருத்தம் பார்க்கும்பொழுது இருவரது ஜாதகங்களும் ஒரே பஞ்சாங்கத்தில் (திருக்கணித அல்லது வாக்கிய) கணிக்கப் பெற்றிருத்தல் அவசியம். பேய், பிசாசு, பில்லி, சூனியம், செய்கை, மருந்தீடு முகமாற்று வசியம் என்பனவற்றில் விழிப்பாக இருக்கவும். சகுனங்கள் முழிவியளங்கள் என்பவற்றையும் பார்த்து நாளாந்த உங்கள் செயல்களை நடாத்துங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

◆ மீனம்

பூரட்டாதி4 / உத்தரட்டாதி / ரேவதி

சனீஸ்வரனும் வியாழனும் 11ஆம் நிலைப்பாட்டில் நிற்கும்நிலையில் மீன ராசிக்காரர்கள் கொடுத்து வைத்த புண்ணியவான்களாவார்கள். வாக்கிய பஞ்சாங்கப்படி 26.12.2020 தொடக்கம் இரண்டரை ஆண்டுகளுக்குச் சனீஸ்வரன் 11ஆம் நிலைப்பாட்டை தக்க வைத்துப் பலன்கள் புரிவார். அடுத்த சனி மாற்றம் உங்களுக்கு ஏழரைச் சனியில் ஆரம்பமாகும். 15.11.2020 முதல் வியாழ பகவான் ஒரு வருடத்திற்கு 11இல் இருப்பதால் விசேட பலன்கள் ஏற்படும். இராகு 02.09.2020 தொடக்கம் ஒன்றரை ஆண்டுகளுக்கு 03ஆம் நிலையிலும், கேது 09ஆம் கோசரத்திலும் அமர்ந்து துன்பப்படும் அடியவர்களுக்கு நன்மையான பலாபலன்களைச் செய்வார்கள்.

சனீஸ்வரன் 11ஆம் கோசரத்தில் நிற்கும் காலப்பொழுதில் கைவிட்டுப் போனவை எதிர்பாராது கிடைத்துவிடும். குடும்பத்தில் ஏற்பட்ட பிணக்குகள், முரண்பாடுகள் அற்றுப் போகும். குடும்பத்தின் வசதி வாய்ப்புகளை பெருக்கவும் முன்னேற்றவும் முன் வருவீர்கள். தொழில் புரியும் சக ஊழியர்களை அரவணைத்துப் பணி சிறப்படைய ஒத்தாசையாக இருங்கள். வாழ்க்கைத் துணை உடல் நலம் தேறி விடுவார். கலைத் துறையினருக்கும் சாதனை புரிய, புதிய வாய்ப்புக்கள் தேடி வரும். உங்களை சந்தேகக் கண்கொண்டு நோக்குபவர்களின் எண்ணங்கள் பொய்த்து விடும். பாராட்டும் பண வரவும் செல்வாக்கும் ஏற்படுவதினால் 11ஆம் வீட்டுச் சனீஸ்வரனால் நினைத்தவை நடைபெறும். மனதை வருத்திய வலிகள் தீர்வதுடன் தேகமும் இளமை பெறும். வாகனச் சேர்க்கை ஏற்படும். அலட்சியம் காட்டாது மருத்துவ வசதிகளை முன்னெடுத்துச் செல்லுங்கள். வர்த்தகர்கள் நாட்டு நிலைப்பாட்டைக் கவனத்தில் எடுத்து புதிய முதலீடுகளை ஆராய்ந்து செய்ய வேண்டும். தம்பதிகள் மத்தியில் இணக்கப்பாடு ஏற்படாமல் 'ஈகோ' தடை போடும். செய்யும் முயற்சிகளைப் பரபரப்பும் பதற்றமும் இல்லாமல் மேற்கொள்ளுங்கள்.

## 06.வெளிநாட்டுப் பயணம்

### சோமாலியாக் குடியரசு



கொடி



சின்னம்

இம்முறை வெளிநாட்டுப் பயணத்தில் பிரவேசிக்கும் நாடு சோமாலியா. இது ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள ஒரு ஏழ்மையான நாடு. 1960களில் மிகச் செழிப்புற்றிருந்த இந்நாடு இராணுவப் புரட்சி, உள்நாட்டுப் போர்கள், கடும் வரட்சி போன்ற காரணிகளால் பாதிக்கப்பட்டு இன்று ஓர் ஏழை நாடாகக் காணப்படுகின்றது. பிரித்தானியா,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இத்தாலி போன்ற மேற்கு நாடுகளின் காலணித்துவத்தின்கீழ் இந்நாட்டின் வளங்கள் சுரண்டப்பட்டமையும் புவி வெப்பமயமாதலால் ஏற்பட்ட வரட்சியும் இந்நாட்டின் விளைநிலங்களை பாலை வனமாக்கியதுடன் மக்களின் ஜீவனோ பாயத்துக்கு உதவிய கால்நடைளையும் பலி எடுத்தது. இதனால் பல்லாயிரக் கணக்கான மக்கள் தாய் நாட்டை விட்டு புலம்பெயர்ந்தனர். தாய் நாட்டிலுள்ள பலர், பசிக்கும் பஞ்சத்திற்கும் இரையா கினர். இங்கு ஒரு நாளைக்கு ஒரு வேளை உணவைப் பெறப் போராடுபவர்கள் ஏராளம். கிடைக்கும் உணவைத் தங்கள் கடைசிக்குழந்தைக்குக் கொடுத்துவிட்டு பட்டினி கிடப்போர் பலர். சுகாதாரச் சீர்கேடுகளால் தொற்றுநோய்களால் பீடிக்கப்படுவோர் ஒருபுறம். இவ்வாறு பட்டினி, பஞ்சம், சோகம், துயரம் என இந்நாட்டு மக்களின் வாழ்க்கைப் பயணம் தொடர்கின்றது.

உலகில் பல நாடுகள் உள்ளன. இவற்றில் சில பணக்கார நாடுகள், பல நடுத்தர நிலையிலுள்ள நாடுகள், மேலும் சில ஏழை நாடுகள். இந்த ஏழை நாடுகளின் பட்டிய லில் முதல் பத்து இடங்களைப் பெறும் நாடுகளில் சோமாலியாவும் உள்ளடங்கும். சுமார் 12.3 மில்லியன் மக்கள் தொகையைக் கொண்ட இந்நாட்டில் 43 சதவிகித மக்கள் கடுமையான ஏழ்மைநிலையில் உள்ளார்கள். இவர்களின் நாள் வருமானம் ஒரு டாலருக்கும் குறைவு. சோமாலியாவில் நிகழும் கடும் பஞ்சத்தால் சுமார் 2,70,000 குழந்தைகள் ஊட்டச்சத்துக் குறைபாட்டு நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாக யூனிசெஃப் அறிக்கையொன்று தெரிவிக்கின்றது.

இந்நாட்டில் 2011 ஆம் ஆண்டு 250,000க்கு மேற்பட்டோரை வறுமை பலியெடுத்திருக்கின்றது. இந்நிலை இன்றும் குறைந்தபாடாய் இல்லை.

கிழக்கு ஆபிரிக்கப் பிரதேசத்தில் அமைந்துள்ள நாடுகளில் ஒன்று சோமாலியா. இதன் எல்லைகளாக தென்மேற்கே கென்யாவும், வடக்கே ஜிபூட்டி மற்றும் யேமனு டன் இணைந்த ஏடன் வளைகுடாவும், கிழக்கே இந்தியப் பெருங்கடலும், மேற்கே எதி ரோப்பியாவும் காணப்படுகின்றது. இந்நாடு ஆபிரிக்காவிலேயே நீண்ட கடற்கரையைக் கொண்டுள்ளது. இதன் நிலப்பகுதியில் முக்கியமான பீடபூமிகள், சமவெளிகள் மற்றும் மலைத்தொகுதிகள் என்பன அமைந்துள்ளன. இந்நாட்டின் காலநிலையைப் பொறுத்த வரை குறிப்பிட்ட காலத்தில் பருவக்காற்று மற்றும் ஒழுங்கற்ற மழைப்பொழிவு ஆகியவற்றுடன் ஆண்டு முழுவதும் வெப்பச் சூழல்களால் ஆனது.

சோமாலியா இத்தாலியிடமிருந்து யூலை1, 1960 இல் விடுதலை பெற்றது. அதே நாளில் இருந்து யூன் 26, 1960 இல் விடுதலை பெற்ற சோமாலிலாந்துடன் இணைந்து சோமாலிக் குடியரசு ஆகியது. சோமாலியாவின் ஜனாதிபதியாக முதல் முதலில் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆடம் அப்துல்லா ஒஸ்மான். இவருடைய காலப்பகுதியில் அதாவது, சுதந்திரம் அடைந்த 1960 முதல் 1969 வரை அமைதியான ஜனநாயக ஆட்சி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைபெற்றது. அவருக்குப் பின், சுதந்திரமாகவும் அமைதியாகவும் அப்திராஷித் அலி சர்மர்கே ஆட்சி புரிந்தார். இவர் 1969 ஆம் ஆண்டில் படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து ஜெனரல் சியாட் பாரே தலைமையிலான ஒரு இராணுவ சதியொன்று, சோமாலியாவின் ஜனநாயக அரசாங்கத்தின் காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. 1970 கள் மற்றும் 1980 களில் இராணுவ சர்வாதிகாரம் ஆட்சி கொண்டு - அதன் பின்னர் உள்நாட்டுப் போர் மற்றும் நாட்டில் குழப்ப நிலை காரணமாக இந்நாடு பெரும் பாதிப்பை எதிர்கொண்டது.

சோமாலிய நாட்டின் பரப்பளவு 17,700,000 கிலோமீற்றர்$^2$ தலைநரம் மொகடீசு, நாணயம் சோமாலி ஸில்லிங்கு (SOS), இந்நாட்டின் மொழி சோமாலி மொழி.

**07. ஸ்டீவ் பால் ஜாப்ஸ்**



பரந்து விரிந்த இந்த உலகை நம் கைகளுக்குள் தந்துவிட்டது 'சிமாட்' போன்கள். இந்த 'சிமாட்' போன்களைத் தயாரிக்கும் முன்னணி நிறுவனங்களில் ஒன்றுதான் அப்பிள். கணிணிகள், ஐபாட்டுக்கள், சிமாட் போன்கள் என இந்நிறுவனத் தயாரிப்புக்கள் ஏராளம். அதே போல் இந்நிறுவனத் தயாரிப்புக்களை விரும்பி வாங்கிப் பாவிப்பவர்களும் ஏராளம்.

ஒருவர் தன் மன ஆறுதலுக்காக அருகிலுள்ள அப்பிள் தோட்டத்திற்குச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது முதற் காதலும் அரங்கேறியது இவ்வப்பிள் தோட்டத்தில் தான். இவரது இன்ப, துன்பங்களைப் பகிர்ந்து கொண்ட ஓர் இடமாக அமைந்ததே இந்த அப்பிள் தோட்டம். இவ்வாறு அவ்வப்பிள் தோட்டம் அவரது வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தமையால் பின்னாளில் அவரால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்திற்கு 'அப்பிள்' எனப் பெயர் சூட்டக்காரணமாயிற்று என்கின்றார்கள்.


இரு பல்கலைக்கழக மாணவர்களுக்கிடையே மலர்ந்த காதல் ஒரு குழந்தையை பரிசளித்தது. ஆனால் அம்மாணவர்களின் பெற்றோர்களது எதிர்ப்பு அக்குழந்தையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னோர் தம்பதியினருக்கு தத்துக் கொடுக்க வைத்தது. இக்குழந்தை தான் பின்னாளில் உலகப் புகழ்பெற்ற நிறுவனம் ஒன்றின் ஸ்தாபகராகவும், உலகப் பணக்காரர்களில் ஒருவராகவும் வந்துள்ளது. ஆம்! இந்தக் குழந்தை தான் ஸ்டீவ் ஜாப்ஸ். இவரது வாழ்க்கை வரலாற்றினையே இங்கு நாம் பார்க்க இருக்கின்றோம்.

காதலர்களான சிரியாவைச் சேர்ந்த அப்துல்பட்டா ஜான் ஜன்டாலி மற்றும் ஜேர்மன் வம்சாவளியினரான ஜோன் சிப்பெல் ஆகியோருக்குப் பிறந்த குழந்தை தான் ஸ்டீவ் ஜாப்ஸ். இவர் 1955 பெப்ரவரி, 24 இல் அமெரிக்காவில் சான்பிரான்சிஸ்கோ நகரில் பிறந்தார். தாயாரின் பெற்றோர்களின் எதிர்ப்பின் காரணமாகப் பிறந்து சில மாதங்களிலேயே முறைப்படி பால்-கிளாரா, பால் ஜாப்ஸ் தம்பதியினருக்கு ஸ்டீவ் ஜாப்ஸ்ஸைத் தத்துக் கொடுத்தனர். ஏழ்மையான குடும்பத்தில் வாழ்ந்த ஜாப்ஸ் இளமைக் காலம் முதலே பல இன்னல்களையும், சோதனைகளையும் சந்தித்தவர். "நான் பிறக்கும் போது எனது தாய், தந்தை படித்துக் கொண்டிருந்தனர். என்னை மற்றொருவருக்கு தத்துக் கொடுத்தனர். அவர்கள் ஏழ்மையான குடும்பத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும், என்னைக் குறையின்றி வளர்த்தனர். அப்போது படிப்பைத் தொடர வேண்டாம், என முடிவெடுத்தேன். நண்பர்கள் உதவியுடன் அவர்கள் வீட்டின் தரையில் படுத்தேன். கோவில்களில் சாப்பிட்டேன். கஷ்டங்கள் தான் என்னுள் இருந்த உள்ளுணர்வையும் தன்னம்பிக்கையும் வளர்த்தன. பத்து ஆண்டு உழைப்பின்பயனாக, "மெகின்டோஷ்" கம்ப்யூட்டரை வடிவமைத்தேன். எனது முதல் கம்ப்யூட்டர், 'டைப் போகிராபி' (அச்சுக்கலை) கொண்டது." என ஜாப்ஸ் 2005ஆம் ஆண்டு ஜூன் 12 இல் அமெரிக்காவின் கலிபோர்ணியாவிலுள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும் போது தெரிவித்திருந்தார்.



சிறுவயது முதலே தொழில்நுட்பங்களில் ஆர்வம் கொண்டிருந்த ஸ்டீவ் ஜாப்ஸ், பள்ளி மற்றும் கல்லூரி நாட்களில் புத்தகங்களைக் கடந்து மனிதர்களையும் தொழில்நுட்பங்களையுமே அதிகம் பயின்றார் எனலாம். முன்கோபமும், பிடிவாதமும் ஒருங்கே கொண்ட ஸ்டீவ் ஜாப்ஸ், தனது இந்த குணங்களால் பலமுறை பள்ளி, கல்லூரிகளில் இருந்து இடைநீக்கமும் செய்யப்பட்டுள்ளார். 1972ஆம் ஆண்டு கலிபோர்ணியாவில் உள்ள ஹோம்ஸ்டெட் மேல் நிலைப் பள்ளியில் படிப்பை முடித்தார். பின் அமெரிக்காவின் ஓரிகன் மாநிலத்தின் போர்ட்லாண்டு நகரில் உள்ள ரீட் கல்லூரியில் பட்டப்படிப்பில் சேர்ந்தார். ஏழ்மையான நிலையால் கல்லூரிப் படிப்பை பாதியிலேயே கைவிட்டார். ஆன்மீகத்தில் நாட்டம் கொண்டிருந்த ஜாப்ஸ் 1970 இல் இந்தியாவிற்கு வருகை தந்தபொழுது புத்தத் துறவி ஒருவரின் போதனைகளால் கவரப்பட்டு அம்மதத்தில் இணைந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லூரிப் படிப்புமீதான ஆர்வம் குறைந்து கொண்டே சென்ற அதேநேரத்தில், தொழில்நுட்பம் குறித்த கனவுகள் அவரை தூக்கமில்லாமல் புரளச்செய்தன. தொழில்நுட்பத்தைக் கொண்டு சாதிக்க முடிவெடுத்த ஸ்டீவ், 1976, ஏப்ரல் 1, தொழில்நுட்ப சாம்ராஜ்யத்தின் அசைக்க முடியாத சக்தியாக மாறப்போகும் ஒரு நிறுவனத்தை, தனது நண்பர்கள் இருவருடன் சேர்ந்து மிக எளிமையாக ஆரம்பித்தார். இதற்கு 'அப்பிள்' என பெயரும் வைத்தார். ஸ்டீவ் அலுவலகங்களில் மட்டுமே பயன்படுத்தப்பட்டு வந்த விலை உயர்ந்த கம்ப்யூட்டர்களைப் பொதுமக்கள் ஒவ்வொருவரின் வீடுகளுக்கும் கொண்டு சேர்க்க நினைத்தார். 'அப்பிள்' நிறுவனத்தை தொடங்கிய 10 ஆவது நாளில், அதன் முதல் கம்ப்யூட்டரான 'அப்பிள்-1' ஐ உலகுக்கு அறிமுகம் செய்து வைத்தார். தொடந்து 1977 இல் 'அப்பிள்-2' என்ற கம்ப்யூட்டரையும் உருவாக்கினார். 1985 ஆம் ஆண்டு வரை யாரும் நெருங்க முடியாத அளவிற்கு அப்பிளின் கண்டுபிடிப்புக்கள் உயர் நிலையில் இருந்தன.


ஸ்டீவ் 1983 ஆம் ஆண்டு பெப்சி நிறுவனத்திலிருந்த ஜான் ஸ்கல்லி என்பவரை, அப்பிள் நிறுவனத்தில் சேர்த்துக் கொண்டார். இந்நிறுவனத்தின் 'சிஇஓ' வாக ஜான் ஸ்கல்லி தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்நிலையில் 1985 ஆம் ஆண்டு 'அப்பிள்-2' தொடர் பாக ஸ்டீவ் மற்றும் ஜான் ஸ்கல்லி இடையே ஏற்பட்ட ஒரு கருத்து வேறுபாடு, ஸ்டீவை அப்பிள் நிறுவனத்திலிருந்து வெளியேற வைத்தது. ஸ்டீவ் என்பவரால் வேலைக்கு அமர்த்தப்பட்ட ஜான் ஸ்கல்லி என்பவரே இவரால் ஆரம்பிக்கப்பட்ட நிறுவனத்தில் ருந்து, இவரை வெளியேற்றக் காரணமானார். ஜான் ஸ்கல்லியின் இந்த முடிவிற்கு அப்பிள் நிறுவனம் மிகப்பெரிய விலையை கொடுக்க நேரிடும் என அப்போது அந்நிறுவனம் அறிந்திருக்கவில்லை.

அப்பிள் நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்பட்ட ஸ்டீவ், நெஸ்ட் நிறுவனம் ஒன்றைத் தொடங்கினார். இந்நிறுவனம் எதிர்பாராத தோல்விகளை ஸ்டீவுக்கு கொடுத்தது. இதனால் திரைத்துறை பக்கம் தனது பார்வையைத் திருப்பினார். பிக்ஸார் கிராஃபிக்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்தார். அந்நிறுவனத்தில் எடுக்கப்பட்ட 'டாய் ஸ்டோரி' படம் மிகப்பெரிய வெற்றியைப் பெற்றது. அப்பிள் நிறுவனத்தை விட்டு வெளியே வந்த ஸ்டீவ், மீண்டும் ஒரு முதன்மைத் தொழில் நிறுவனத்தைக் கட்டமைத்து எழுப்புவதில் வெற்றிகளை குவித்துக் கொண்டிருந்தார். இதேவேளை ஸ்டீவை இழந்த அப்பிள் நிறுவனம் 1989 இல் 188 மில்லியன் டொலர் வரை நஷ்டத்தைச் சந்தித்தது. தொடர் இழப்புக்களினால் 1996 இல் அப்பிள் நிறுவனம் மீண்டும் ஸ்டீவை நாடியது. நீண்ட பேச்சுவார்த்தைக்குப் பின்னர் 1997ஆம் ஆண்டு தனது நெஸ்ட் நிறுவனத்தை அப்பிள் நிறுவனத்துடன் இணைத்தார் ஸ்டீவ். இது தொடர்பாக ஸ்டீவ் 2005, ஜூன்12 இல் அமெரிக்காவில் கலிபோர்ணியாவிலுள்ள ஸ்டான்போர்டு பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாவில் உரையாற்றும்போது "லவ் அண்ட் லாஸ்" நான் மிகவும் அதிர்ஷ்டசாலி. 20 வயதில் என் வீட்டில் அப்பிள் நிறுவனத்தை ஆரம்பித்தேன். 10 ஆண்டு உழைப்பிற்கு பின் 2 பில்லியன் டொலர்களுடன் 4,000 பேரை வேலையில் அமர்த்தியது என் நிறுவனம். 30 வயதில் என்னுள் எழுந்த வெறிக்கு அளவே இல்லை. அப்போது என் நிறுவனத்திலிருந்து நான் வெளியேற்றப்பட்டேன். அடுத்த ஐந்து ஆண்டுகளில் "நெக்ஸ்ட்" மற்றும் "பிக்ஸர்" ஆகிய நிறுவனங்களை ஆரம்பித்தேன். அப்போது தான் என் வாழ்வில் காதல் மலர்ந்தது. "பிக்ஸரில்" முதல் கம்ப்யூட்டர் அனிமேஷன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமாவான 'டாய் ஸ்டோரி' உருவானது. சில காலம் கழித்து அப்பிள் நிறுவனம், 'நெக்ஸ்ட்டை' வாங்கியது. நான் மறுபடியும் புதிய உத்வேகத்துடன் அப்பிளில் இணைந்தேன்." என்றார்.



சரிந்து கொண்டிருந்த அப்பிள் நிறுவனத்தை மீண்டும் தூக்கி நிறுத்த அவருக்கு ஒரு மிகப்பெரிய துணை தேவைப்பட்டது. அப்போது அவருக்கு கை கொடுத்தவர்தான் பில் கேட்ஸ். மைக்ரோசாப்ட் மற்றும் அப்பிள் ஆகிய இரண்டு நிறுவனங்களும் ஒரே காலகட்டத்தில் துவங்கப்பட்ட நிறுவனங்கள்தான். தொடக்க காலத்தில் இரண்டு நிறுவனங்களும் இணைந்து பணியாற்றினாலும் பின்னர் இந்த உறவில் விரிசல் ஏற்பட்டது.

இரு நிறுவனங்களும் பரஸ்பரம் விமர்சித்துக் கொண்டாலும், ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றும் பில் கேட்ஸ் தனிமனித நாகரிகத்தை முறையாக கடைபிடிப்பவர்களாகவே இருந்தனர். தொழில்ரீதியாகப் பல போட்டிகளைச் சந்தித்தாலும், அன்றைய சூழலில் இணைந்து பணியாற்றுவதே சிறந்தது என முடிவெடுத்தனர். இதன் பலனாக சரிவு நிலையில் இருந்த அப்பிள் மீண்டும் வளர்ச்சிப் பாதையில் பயணிக்கத் தொடங்கியது. தொடர்ந்தும் புதிய வடிவிலான கணினிகளைப் புதிய தொழிநுட்பங்களுடன் அறிமுகப்படுத்தியதுடன் ஐபாட், ஸ்மாட்போன் என்பனவற்றையும் அறிமுகப்படுத்தியது அப்பிள் நிறுவனம். இவை மக்கள் மத்தியில் பெரும்வரவேற்பைப் பெற்றன. விலை அதிகமாக இருந்தாலும், இவற்றின் தரம் மக்களை கவர்ந்தது. தொடர்ந்து அப்பிள் நிறுவனம் வெற்றிப் பாதையில் பயணிக்கலானது.

ஸ்டீவ்வின் பெற்றோர்களான அப்துல்பட்டா ஜான் ஜண்டாலி மற்றும் ஜோன் சிப்பெல் ஆகியோர் காதலர்களாக இருந்து பின்னாளில் திருமணம் செய்து கொண்டனர். இவர்களுக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. இவள் வளர்ந்து யுவதியான பின்னர் தான் தனது அண்ணனை சந்திக்கும் வாய்ப்பினைப் பெற்றாள். ஏறத்தாழ 27 ஆண்டுகளுக்குப் பின் ஸ்டீவ் தனது சகோதரியைச் சந்தித்த போது ஏற்பட்ட அனுபவம், பாசம் என்பன பலரையும் நெகிழ வைத்தது.

ஸ்டீவ், லாரன் பவல் என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். லாரன் பவல் 1963 இல் நியூ ஜெர்சியில் பிறந்தார். இவர் பென்சில்வேனியா பல்கலைக் கழகத்தில் கலைத்துறையில் 'இளங்கலை' படிப்பை முடித்த பின் பொருளாதாரத் துறையிலும் 'இளங்கலை' படிப்பை முடித்தார். ஒருமுறை லாரன் ஸ்டான்போர்ட் பிசினஸ் ஸ்கூலில் நுழைகிறார். அங்கு விரிவுரைக்காக அழைக்கப்பட்ட ஸ்டீவ் ஜாப்ஸை, லாரன் பவல் முதல் முதலில் சந்திக்கின்றார். இங்கு உதயமான காதல் உணர்ச்சிமிக்க காதல் கதையாக மாறியது. ஸ்டீவின் கூற்றுப்படி, அவரது இளமை பருவத்தில், லாரன் பவல் தவிர்க்க முடியாதவர், மேலும் அவர் அவளால் முழுமையாக வசீகரிக்கப்பட்டார். இவர்களின் நல்லிணக்கம் திருமணம் வரை சென்றது. ஸ்டீவ் ஜாப்ஸ் மற்றும் லாரன் பவலின் திருமணம் 1991 மார்ச்18 இல் 'யோசெமிட்டி தேசிய பூங்கா'வில் உள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஹ்வாஹ்னி ஹோட்டலில் நடைபெற்றது. இவர்களுக்கு ஒரு மகனும், இரண்டு மகள்களும் உள்ளனர்.

ஸ்டீவ் ஜாப்ஸ் 2004 இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். 2009 இல் இவருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது. 2011 ஜனவரி 17இல் நோயின் தீவிரத்தினால் மீண்டும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். 2011 அக்டோபர் 5இல் புற்றுநோய் அவரின் உயிரை பலியெடுத்தது. இவரது மறைவுக்கு பல நாட்டுத் தலைவர்களும், பிரதமர்களும் இரங்கல் தெரிவித்தனர். கணவரின் மரணத்திற்குப் பிறகு, லாரன் ஒரு கோடீஸ்வரரானார், அவருடைய செல்வத்தின் ஒரு பகுதியைப் பெற்றார்.

"வாழ்வின் ஒவ்வொரு நாளையும் இறுதி நாளாக நினைத்து வாழ்ந்தால், ஒரு நாள் அது நிறைவேறும்" இந்த வாசகத்தை நான் எப்போதும் கடைபிடிப்பேன். தினமும் காலையில் எழுந்து கண்ணாடியில் முகம் பார்க்கையில் இன்றே நமக்கு இறுதி நாள் என்று நினைத்துக் கொண்டு வேலைகளை ஆரம்பித்தேன். கடந்த ஆண்டு எனக்கு கணையத்தில் புற்றுநோய் இருப்பது, பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின் அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தற்போது நான் நலமாக உள்ளேன். ஆனால், எனது வாழ்நாள் இறுதிக் கட்டத்தை நோக்கி செல்வது எனக்குத் தெரியும். உங்களுக்கு ஒதுக்கப்பட்ட நேரம் குறைவு. அதை வீணாக்காதீர்கள். மற்றவர்கள் கூறிய கருத்துகளை வேதவாக்காகக் கொண்டு, வாழ்க்கையை நிர்ணயிக்காதீர்கள்; உள்ளுணர்விற்கு மதிப்பளியுங்கள். "பசியோடு இருங்கள்; புதிய சிந்தனைகளோடு வாழுங்கள்". என குறிப்பிட்டுச் சென்றவர்தான் ஜாப்ஸ்.

**08 . அதிசயிக்க வைக்கும் உண்மைகள்**

**சென்னை அருகே வாழ்ந்த ஆதி மனிதர்கள்: 3,85,000 ஆண்டுகளுக்கு முந்தைய வரலாறு**

சென்னையை அடுத்துள்ள அதிரம்பாக்கத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வில் கிடைத்த கற்கருவிகள், 3,85,000 வருடத்திலிருந்து 3,25,000 வருடங்களுக்குள் இடைக் கற்காலம் அங்கு நிலவியிருக்கலாம் என்று காட்டுவதாக சமீபத்திய ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. தெற்காசியாவில் இடைக் கற்காலம் முன்பு கருதப்பட்டதை விட முன்கூட்டியே நிகழ்ந்திருக்கலாம் என்பதை இது சுட்டிக் காட்டுகிறது.



சமீபகாலம் வரை கற்கருவிகளைப் பயன்படுத்தும் கலாசாரம் 90,000 வருடங்களிலிருந்து 1,40,000 வருடங்களுக்குள் இந்தியாவுக்கு வந்திருக்கலாம் என்று கருதப்பட்ட நிலையில் சென்னையைச் சேர்ந்த ஆய்வாளர்களின் இக்கண்டுபிடிப்பு, மனித இனப் பரவல் குறித்த ஆய்வில் புதிய வெளிச்சத்தைப் பாய்ச்சியுள்ளது.


சென்னையில் உள்ள ஷர்மா சென்டர் ஃபார் ஹெறிடேஜ் எஜுகேஷனைச் சேர்ந்த ஆய்வாளர்கள் ஷாந்தி பாப்பு மற்றும் குமார் அகிலேஷ் ஆகியோர் மேற்கொண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வில் இந்த முடிவுகள் தெரிய வந்திருக்கின்றன.

சென்னையிலிருந்து சுமார் 60 கி.மீ. தூரத்தில் பூண்டி நீர்த்தேக்கத்திற்கு அருகில் கொசஸ்தலை ஆற்றின் அருகில் அமைந்திருக்கிறது அதிரம்பாக்கம். இந்தப் பகுதியில் 1999ஆம் ஆண்டிலிருந்தே ஷாந்தி பாப்புவும் அவரது குழுவினரும் ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.



"முதலில் பழைய கற்காலத்தைச் சேர்ந்த கருவிகள் கிடைத்தன. அதற்குப் பிறகு அங்கு மனிதர்கள் வசித்ததற்கான தடயம் கிடைக்கவில்லை. பிறகு மீண்டும் இடைக்கற்காலத்தைச் சேர்ந்த கருவிகள் கிடைத்திருக்கின்றன. இவை 3 லட்சத்து 85 ஆயிரம் வருடங்களிலிருந்து 3 லட்சத்து 25 ஆயிரம் வருடங்கள் வரை பழமையானவை. இதற்கு முன்பாக இடைக் கற்காலம் என்பது இந்தியாவில் ஒரு லட்சத்து 40 ஆயிரம் வருடங்களுக்கு முன்பாகத் தான் துவங்கியது என்று கருதப்பட்டு வந்தது" என பிபிசியிடம் தெரிவித்தார் ஷாந்தி பாப்பு.

ஆனால் இடைக் கற்காலத்தைச் சேர்ந்த மனித எச்சங்கள் ஏதும் இதுவரை இங்கு கிடைக்கவில்லை. இந்தக் கண்டுபிடிப்பு குறித்த தகவல்கள் 'நேச்சர்' இதழில் பதிப்பிக்கப் பட்டதையடுத்து உலகம் முழுவதும் இது குறித்த விவாதம் தீவிரமடைந்திருக்கிறது.

பொதுவாக, நவீன மனிதர்களும் மனிதர்களின் மூதாதையர்களும் கிழக்கு ஆபிரிக்காவில் தோன்றி உலகம் முழுவதும் பரவினார்கள் என்பது பொதுவான புரிதல். அவர்கள் எந்தக் காலகட்டத்தில் எந்தெந்தக் கண்டங்களுக்குப் பரவினார்கள் என்பது குறித்த விவாதத்தில் தற்போதைய கண்டுபிடிப்பு மாற்றத்தை ஏற்படுத்தலாம் எனக் கருதப்படுகிறது. தற்போது நாம் கருதுவதைவிட சுமார் 1ஒரு லட்சம் வருடங்களுக்கு முன்பாகவே இந்த இடம்பெயர்தல் நடந்திருக்கலாம் என்பதை தற்போது கிடைத்துள்ள கற்கருவிகள் சுட்டிக் காட்டுவதாகச் சில ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

"நவீன மனிதர்கள் உருவான பிறகு அதாவது 1,25,000 வருடங்களுக்கு முன்புதான் இடைக் கற்கால மனிதர்கள் இங்கு வந்ததாக இதுவரை கருதப்பட்டு வந்தது. இருந்தபோதும் தற்போதைய கண்டுபிடிப்பை வைத்து உடனடியாக எந்த முடிவுக்கும் வந்துவிட முடியாது. இந்தியாவின் பல இடங்களிலும் கிடைத்திருக்கும் கற்கருவிகளை ஆய்வுக்கு உட்படுத்த வேண்டும்." என்கிறார் ஷாந்தி.

மனித இன வளர்ச்சியில் பழைய கற்காலம் முடிந்து இடைக்கற்காலம் தோன்றிய காலகட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. சுமார் மூன்று லட்சம் வருடங்களுக்கும் 2 லட்சம் வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்த மாற்றம் நிகழ்ந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது. அதுவரை மிகப் பெரிய கற்கருவிகளைப் பயன்படுத்திவந்த மனித இனத்தின் மூதாதையர், சிறிய, திருத்தமான கருவிகளைப் பயன்படுத்த ஆரம்பித்தது இந்தக் காலகட்டத்தில்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெற்காசியாவில் இதற்கு முன்பாகப் பல இடைக் கற்காலப் பகுதிகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த இடைக் கற்கால கலாசாரத்தின் வயது அந்தக் கலாசாரம் எப்படி சம்பந்தப்பட்ட இடத்திற்கு வந்தது போன்றவை மிகக் குறைவாகவே ஆய்வு செய்யப்பட்டிருக்கின்றன. மரபியல்ரீதியான ஆய்வுகள், மனித எச்சங்கள், தொல்லியல் ஆய்வுகள் மூலமாகக் கிடைத்த தகவல்களை வைத்து, நவீன மனிதர்களுக்கு முந்தைய ஹொமினின்களின் பரவலை உறுதி செய்வதும் கடினமான காரியமாகவே இருக்கிறது.

ஒரு கூற்றின்படி, இந்தியாவில் இடைக் கற்காலம் என்பது ஆபிரிக்காவிலிருந்து நவீன மனிதர்கள் வெளியேறிய காலகட்டத்தை ஒத்தது என்று கூறப்படுகிறது. இந்தக் காலகட்டம் 1,30,000 வருடத்திற்கும் 80 ஆயிரம் வருடங்களுக்கும் இடைப்பட்ட காலமாகக் கருதப்படுகிறது. டோபா எரிமலைச் சீற்றத்திற்குத் தப்பிய மாந்தர்களே இங்கு வந்ததாக நம்பப்படுகிறது. ஆனால், மற்றொரு கூற்று 71 ஆயிரம் வருடங்களுக்கும் 57 ஆயிரம் வருடங்களுக்கும் இடைப்பட்ட காலத்தில் இந்தப் பரவல் நடந்திருக்கலாம் என்று கூறுகிறது.

இந்த இரண்டு கூற்றுகளுக்கும் இடையில் மிகப் பெரிய காலகட்டம் இருக்கிறது. அகழ்வாராய்ச்சியில் கிடைக்கும் பொருட்களை கதிர்வீச்சு ஆய்வுக்குட்படுத்துவதில் உள்ள சிக்கல்களும் தெற்காசியப் பகுதிகளில் மனித எச்சங்கள் இல்லாமல் இருப்பதும் தான் இந்தக் காலகட்டத்தை நிர்ணயம் செய்வதில் பெரும் தடையாக இருக்கிறது என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

தற்போது அதிரம்பாக்கத்தில் கிடைத்திருக்கும் முடிவுகள் இந்தத் திசையில் ஓரளவுக்கு உதவக்கூடும். ஷர்மா மையத்தைச் சேர்ந்த ஷாந்தி பாப்பு, அகிலேஷ் உள்ள டங்கிய குழுவினர் கொசஸ்தலை ஆற்றின் கிளை நதி ஒன்றுக்கு அருகில் 1999ல் இந்த ஆய்வைத் துவங்கினர். பல்வேறு இடங்களில் 4 முதல் 9 மீட்டர் அளவுக்கு குழிகள் தோண்டப்பட்டன. இந்தக் குழிகளில் பல்வேறு காலகட்டங்களைச் சேர்ந்த மண் படிவுகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டன.

இந்தக் குழிகளில் உள்ள மண் படிவுகள் 8 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டன. 8 முதல் 6 வரையிலான பிரிவு பழங்கற்காலத்தைச் சேர்ந்தவை எனக் கருதப்படுகிறது. இவை 17 லட்சம் முதல் 10 லட்சம் வருடங்களுக்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தவை. 5 முதல் முதலாவது பிரிவு வரையிலான படிவுகள் இடைக் கற்காலத்தைச் சேர்ந்தவை.

இந்தப் பகுதியில் கிடைத்த கற்கருவிகளை ஆராய்ந்தபோது, கற்காலத்தைச் சேர்ந்தவர்களைப்போலவே, இடைக்கற்காலத்தைச் சேர்ந்த மனிதர்களும் அந்தப் பகுதியில் கிடைத்த கற்களை வைத்தே தங்கள் கற்கருவிகளைச் செய்திருக்கின்றனர் என்பதை அறியமுடிந்தது.

இது தவிர பழைய கற்காலம் முடிந்து இடைக் கற்காலம் துவங்குவதற்கு இடைப்பட்ட காலத்தைச் சேர்ந்த கற்கருவிகள் ஏதும் இங்கு கிடைக்கவில்லை. இது டோபோ எரிமலை வெடித்த காலத்தோடு ஒத்துப்போவதால், பருவநிலை மாற்றங்களால் இங்கிருந்தவர்கள் வெளியேறியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தியா முழுவதும் பல இடங்களில் பிந்தைய-பழைய கற்காலப் பகுதிகளைச் சேர்ந்த கருவிகள் கிடைக்கும் நிலையில் இங்கு அந்த காலகட்டத்தைச் சேர்ந்த கருவிகள் ஏதும் கிடைக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிரம்பாக்கத்தைப் பொறுத்தவரை, இங்கு கிடைத்த கற்கருவிகளை வைத்து இங்கு வசித்தவர்கள் நவீன மனிதர்களா அல்லது அதற்கு முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்தவர்களா? என்பதை உறுதி செய்ய முடியவில்லை. நர்மதா நதிக்கரையில் கிடைத்த ஒரு மண்டை ஓட்டைத் தவிர இந்தியாவில் இதுவரை மனித எச்சங்கள் ஏதும் கிடைக்கவில்லை.

"ஆனால், தற்போது கிடைத்திருக்கும் கருவிகளை வைத்து இந்தியாவில் இடைக்கற்கால மனிதர்கள் 3.85 லட்சம் வருடங்களுக்கு முந்தைய காலகட்டத்தில் ருந்து 1.72 லட்சம் வருடங்களுக்குள் வாழ்ந்திருக்கலாம் என்ற முடிவுக்கு வர முடியும்" என்கிறார் அகிலேஷ்.

அதிரம்பாக்கத்தில் கிடைத்த கற்கருவிகளின் காலம் அகமதாபாதில் உள்ள ஃபிசிகல் ரிசர்ச் லபோரட்டரியில் கணிக்கப்பட்டது. பொதுவாக அகழ்வாராய்ச்சியில் கிடைக்கும் பொருட்கள் கார்பன் டேட்டிங் முறையில் காலக் கணிப்பு செய்யப்படுவது வழக்கம். ஆனால் லட்சக்கணக்கான வருடங்கள் பழைய பொருட்களைக் காலக் கணிப்புச் செய்ய அந்த முறை உதவாது. ஆகவே Luminescence dating என்ற முறை கையாளப்படுகிறது. அதாவது ஒரு பொருளில் ஒளி கடைசியாக எப்போது பட்டது என்பதை வைத்து அதன் காலத்தைக் கணிக்கும் முறை. அதிரம்பாக்கத்தில் கிடைத்த பொருட்கள் இம்மாதிரியான சோதனைக்கே உட்படுத்தப்பட்டன.

இதற்கு 'ஃபிசிகல் ரிசர்ச் லபோரட்டரி'யைச் சேர்ந்த பேராசிரியர் ஏ.கே. சிங்கி பெரிதும் உதவினார் என்று குறிப்பிடுகின்றனர் ஷாந்தியும் அகிலேஷும். மிகச் செலவு பிடிக்கும் இந்த முறையிலான காலக் கணிப்பைத் தன் செலவிலேயே செய்து கொடுத்திருக்கிறார் ஏ.கே. சிங்வி.

அதிரம்பாக்கம் அகழ்வாராய்ச்சித் தலம் என்பது சுமார் நூற்றி ஐம்பது ஆண்டுகளாகவே தொல்லியளாளர்களின் கவனத்தை ஈர்த்து வந்திருக்கிறது. 1863இல் முதன் முதலில் ராபெர்ட் ப்ரூஸ் ஃபூட் மற்றும் வில்லியம் கிங் ஆகியோரால் இந்த இடம் அகழ்வாய்வு செய்யப்பட்டது. அதன் பிறகு தொடர்ச்சியாக 1930களிலும் 60களிலும் இந்த இடம் ஆய்வு செய்யப்பட்டது.

19ஆம் நூற்றாண்டிலும் 20ஆம் நூற்றாண்டிலும் இங்கிருந்து எடுக்கப்பட்ட கற்காலக் கருவிகள் உலகமெங்கும் உள்ள அருங்காட்சியகங்களில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கின்றன. தற்போதும் அதிரம்பாக்கம் பகுதியில் சுமார் 50,000 மீட்டர் பரப்பளவுக்குக் கற்காலக் கருவிகள் சிதறிக் கிடக்கின்றன.

சமூக ஊடகங்களில் பிபிசி தமிழ்: நன்றி

## 09. வாத்து (Duck)



**உயிரியல் வகைப்பாடு**

திணை: விலங்கினம் — தொகுதி: முதுகுநாணி

வகுப்பு: பறவை — குடும்பம்: அனாட்டிடே

இற்றைக்கு 4000 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இனங்களுள் ஒன்றாக வாத்து இனம் காணப்படுவதாக அறிவியலாளர்கள் கூறுகின்றனர். இதன் தாயகமாக எகிப்து கருதப்படுகின்றது. பொதுவாக வாத்துகள் அவற்றின் இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் மனிதர்களால் வளர்க்கப்படுகின்றன. பொதுவாக ஆசிய மக்கள் இப்பறவை இறைச்சியினை விரும்பி உண்கின்றனர். வாத்துகள் நன்னீரிலும் உவர் நீரிலும் வாழும் தன்மை கொண்டவை. வாத்துகள் அவற்றின் வகைகளுக்கு ஏற்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறகமைப்பைக் கொண்டுள்ளன. காட்டில் வாழும் வாத்துகள் பழுப்பு நிற இறகுகளையும் வீட்டில் வளர்க்கப்படும் வாத்துக்கள் பெரும்பாலும் நன்கு அடர்ந்த வெண்மை நிற இறகுகளையும் கொண்டவை.

"வாத்துகளின் பின்புறத்தில் கொழுப்புகள் நிறைந்திருப்பதனால் பறக்க முடிவதில்லை. காட்டில் வாழும் வாத்துகள் குறைந்தது ஆண்டுக்கு சுமார் 50 முட்டை வரை இடும்.

"ஆண் வாத்துகள் பொதுவாக பெண் வாத்துகளை விட உயரமாகவும் நீண்ட கழுத்துடனும் காணப்படுகின்றன. ஆண் வாத்துக்கள் ஆபத்தினை உணர்ந்தால் பெண் வாத்துகளுக்கு நடுவில் போய் நிற்கும் அச்ச குணம் உடையவை.

பெரும்பாலான வாத்துகளுக்கு அதன் அலகு அகண்டு தட்டையாக இருக்கும். இது இரையைக் கொத்தி எடுப்பதற்கு உதவுகின்றது. வாத்துகள் புற்கள், நீர்த் தாவரங்கள், மீன்கள், புழுக்கள், சிறுநத்தைகள், தவளை போன்றவற்றை உணவாக உட்கொள்கின்றன. வாத்து இறைச்சி, கோழி இறைச்சியைவிட சற்று கடினமானவை. வாத்துகளைக் கையாள்வது எளிது. வாத்துகள் தமது இரண்டாவது வருடத்திலிருந்து நல்ல முட்டை உற்பத்தியை அளிக்கின்றன. வாத்து இனங்களில் 'காக்கி கேம்பெல்' இனம் முட்டை உற்பத்திக்கும் வெள்ளை பெக்கின் இனம் இறைச்சிக்கும் பெயர் பெற்றவையாகும்.

**காக்கி கேம்பெல்**

இவ் இனம் லண்டனில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டவை. ஒரு முட்டை சுழற்சியில் 300 முட்டைகள் வரை தரக்கூடிய இனங்கள் இவை. இவ்வின பெண் வாத்துகள் 2தொடக்கம் 2.2 Kg மும் ஆண் வாத்துகள் 2.2 தொடக்கம் 2.4 Kg எடையும் கொண்டிருக்கும். முட்டை எடை 65-75 கிராம் வரை இருக்கும்.

**வெள்ளை பெக்கின்**

வியட்நாமிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட இவ்வினம் இந்தியச் சூழ்நிலைக்கு மிகவும் ஏற்றது. இவ்வினம் விரைவில் வளரும் தன்மைக்கும் நல்ல இறைச்சி உற்பத்திக்கும் புகழ் பெற்றது. குறைந்தளவு உணவை உண்டு நல்ல தரமான இறைச்சியை உற்பத்தி செய்யக்கூடியது. இது 2.2 தொடக்கம் 2.5 Kg எடையை 42 நாட்களில் அடைந்து விடும்.

**10. மாணாக்கருக்கு ஒரு கட்டுரை**

கொவிட்-19 (கொரோனா வைரஸ்) இன் சுயசரிதை



எனது பெயர் கொவிட். நான் 2019 பிறந்தமையினால் எல்லோரும் என்னை கொவிட்-19 என்றே அழைப்பர். கொரோனாக் குடும்பத்தில் நான் கடைக்குட்டி. எனது பெற்றோர்கள் யாரென்பதும், நான் எங்கு பிறந்தேன் என்பதும் எனக்குத் தெரியாது. ஆனால் சிலர் என்னை வௌவாலில் இருந்து பிறந்ததாகச் சொல்கிறார்கள். வேறு சிலரோ நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆய்வுகூடத்திலிருந்து வந்ததாகக் கதைக்கின்றார்கள். சீனா நாட்டின் வூகான் நாகரில் தான் என்னை முதல் முதல் கண்டு பிடித்தார்கள்.

அந்த நகரத்திலிருந்த மக்களையும் அங்கு வந்தோரையும் முதலில் நான் பாதிப்புக்கு உள்ளாக்கினேன். பின்னர் அவர்களூடாக உலகம் முழுதும் சென்று இன்று கோடிக்கணக்கானோரைப் பாதித்தும் இலட்சக் கணக்கானோரைக் கொன்றும் விட்டேன். அத்துடன் முழு உலகையுமே முடக்கி வைத்துள்ளேன்.

சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிக்காத மக்களை நான் இலகுவாகத் தாக்கி விடுவேன். மூக்கு, தொண்டை வழியாகவே நான் மனிதர்களுக்குள் அதிகளவில் நுழைகின்றேன். மனிதர்களின் கண்ணின் கருவிழியூடாகவும் என்னால் ஓரளவு நுழைய முடியும். அவர்களின் கைகளிலிருந்தால் அக்கையூடாக மூக்கு, வாய் என்பனவற்றைத் தொடும் போது இலேசாக அவர்களுள் சென்று விடுவேன்.

அடிக்கடி கைகளைக் கழுவினாலோ, முகக்கவசம் அணிந்திருந்தாலோ என்னால் அவர்களை நெருங்க முடியாது. மனிதர்களின் கண்ணுக்குத் தெரியாத நான் ஒரு மெழுகு உறையினால் போர்க்கப்பட்டு பக்குவமாக இருக்கின்றேன். என்ன கொடுமை என்றால் வெப்பம் படும்போது எனக்கு மேலுள்ள மெழுகு உருகினால் என்னால் உயிர் வாழ முடியாது. சில நிமிடங்கள் சூரிய ஒளிபட்டாலே போதும் நான் சிலவேளை இறந்து விடுவேன். மனித மூக்கின் அடியிலும் தொண்டை அடியிலும் முதலில் குடியிருப்பேன். அவர்கள் வெந்நீர், சுடுநீராவி என்பனவற்றைப் பிடித்தால் நான் சிலவேளை அழிந்து விடுவேன். அத்துடன் அதிக நோயெதிர்ப்பு சக்தி உள்ள மனிதர்களை என்னால் இலகுவாகத் தாக்க முடியாது.

ஐஸ்கீறிம் எனப்படும் குளிர்களி, குளிர்பானம் போன்றவற்றில் நான் விரும்பி உறைவேன். அத்துடன் பணத்தாள்கள்,உலோகக் கைபிடிகள் என்பனவற்றிலும் அதிக நாட்கள் உயிருடன் இருப்பேன். ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நான் இலகுவில் தொற்றி விடுவேன். நெருசலான இடங்களில் ஒரே நேரத்தில் பலரிடத்தில் என்னால் தொற்றிக்கொள்ள முடியும். நோயெதிர்ப்புச் சக்தி குறைந்த மக்களில் இலகுவாகத் தொற்றி அவர்களை பாதிப்புக்குள்ளாக்குவது எனக்கு இலேசான காரியம். சளி, இருமல், தும்மல், காய்ச்சல் எனத் தொடரும் என் பாதிப்புக்களின் பட்டியல் மூச்சுத் திணறல், மரணம் வரை நீளும். ஒரே சமயத்தில் பலருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதால் எல்லோரும் இன்று எனக்குப் பயப்படுகிறார்கள். ஒரு மீற்றர் தொடக்கம் 2 மீற்றர் வரை சமூக இடைவெளியைப் பேணினால் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு என்னால் தொற்றிப் பாதிப்பை ஏற்படுத்த முடியாது. திருமண நிகழ்வுகள், ஆலய விழாக்கள், மரண வீடு எனப் பொதுமக்கள் கூடும் இடங்களில் அதிகளவானோர் பங்கு பற்றினால் நான் அவர்களில் ஒருவரிடத்திலிருந்தால் எல்லோரிடத்திலும் இலகுவாகப் பரவி அவ்வூரையே முடக்கி விடுவேன். இதனால் இன்று இந்நிகழ்வுகளில் பங்குபற்று பவர்களின் எண்ணிக்கையினை அரசாங்கமே குறைத்து விட்டது.

எனக்குப் பயந்து உலக நாடுகள் இன்று பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், பொது நிகழ்வுகள், விளையாட்டுப் போட்டிகள் என எல்லாவற்றையுமே அவ்வப்போது நிறுத்தி வருகின்றன. அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றுபவர்களை மட்டுப்படுத்தியுள்ளது. அங்கு செல்லும் மக்களின் தொகையினையும் கட்டுப்படுத்தி உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னை முழுமையாக அழிப்பதற்கான முயற்சியில் இன்று உலகம் இறங்கியுள்ளது. ஆனால் இதுவரை இது சாத்தியமாகவில்லை. உலக நாடுகள் பல தடுப்பூசிகளைக் கண்டுபிடித்துள்ள போதிலும் அவை எவ்வளவு தூரம் பயனளிக்கும் என்று சொல்ல முடியாது. இதனால் எனது தாக்கம் குறைவாக இருக்குமே தவிர நான் இலகுவில் அழிந்துவிட மாட்டேன். நான் இந்த உலகில் உயிரோடு இருக்கும் வரை மனிதர்கள் சுகாதார நடைமுறைகளைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அப்பொழுது தான் அவர்களால் ஆரோக்கியமாக வாழ முடியும்.

மூக்கு தொண்டை வழியாக மனிதர்களுக்குள் ஊடுருவும் நான் ஓரிரு வாரங்கள் அங்கு தங்கியிருந்து என்னைப் பலப்படுத்திக் கொண்டு பின்னர் அவர்களது வெள்ளை அணுக்களுடன் போராடுவேன். இப்போராட்டத்தில் நான் வெற்றி பெற்றுவிட்டால் மனிதர்களை ஆட்டிப் படைத்து விடுவேன். ஆனால் மனித வெள்ளை அணுக்கள் வெற்றி பெற்றுவிட்டால் என்னுடைய கதை முடிந்து விடும். மனித உடலினுள் செல்லும் நான் அங்கு இறந்துவிட்டால் மீண்டும் என்னால் தொழிற்பட்ட முடியாது. இதனால்தான் சில தடுப்பூசி தயாரிக்கும் நிறுவனங்கள் என்னைக் கொன்று பெறப்படும் ஒரு பகுதியினைப் பயன்படுத்தி ஊசி மருந்துகளைத் தயாரித்து மனிதர்களுக்குச் செலுத்துகின்றனர். இதனூடாக இறந்த என் கலங்கள் அவர்கள் உடலில் இருப்பதனால் புதிதாக என்னால் நுழைந்து அவர்களைத் தாக்க முடியாது. இந்த நிலை தொடருமானால் சில காலங்களில் நான் அழிந்து போய் விடுவேன். இந்த அழிவிலிருந்து மீளுவதற்காகத்தான் அவ்வப்போது நான் பரிணாம வளர்ச்சி எடுத்து வருகின்றேன். புதிய பிரிவுகளாக வளர்ச்சியடையும் நான் சில மாத கால இடைவெளியில் மீண்டும் கொரோனா அலைகளாய் உலகைத் தாக்கி முடக்கி வருகின்றேன். எனினும் இன்றைய நவீன தொழிநுட்ப உலகம் பல கண்டுபடிப்புக்களைக் கண்டுபடித்த வண்ணம் இருக்கிறது. எனவே என்னை அழிக்கும் ஒரு மருந்தையும் இந்த உலகம் மிக விரைவில் கண்டு பிடிக்கத்தான் போகிறது. அது வரைக்கும் உலகக் களத்தில் என் ஆட்டம் சிறப்பாகத் தான் இருக்கும்.

உலகம் அவ்வப்போது முடக்கப்படுவதனால் காற்று மண்டலம் சுத்தமாகி வருகிறது; மரங்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கின்றன. விலங்குகள் பயமின்றி நடமாடுகின்றன. குடும்ப அங்கத்தவர்கள் அடிக்கடி தங்கள் குடும்பத்தினரோடு ஒன்று கூடி மகிழ்கின்றனர். இவ்வாறான நல்ல விடயங்களும் தீய என் செயற்பாடுகளின் மத்தியில் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. இவ்வாறாகப் பார்த்தால் நான் நல்லவனாகவும் தெரிவேன்.

ஒன்று தொடக்கம் 2 மீற்றர் வரையான சமூக இடைவெளி, முகக்கவசம் அணிதல். அடிக்கடி சவர்க்காரம் போன்ற நுரைக்கும் திரவங்களைப் பயன்படுத்தி கைகளைக் கழுவுதல் போன்றவற்றினால் என் பாதிப்பிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முடியும். வெப்பம், சூரியஒளி, சூடான பதார்த்தங்கள், சவர்க்கார நுரை போன்றவற்றைக் கண்டால் நான் ஓடி விடுவேன். இல்லையேல், ஒழிந்து விடுவேன். எது எப்படியோ நான் இவ்வுலகில் உள்ளவரை நீங்கள் ஒவ்வொருவரும் சுகாதார நடைமுறைகளைப் பேணி நலமாய் வாழுங்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுதுங்கள் / வெல்லுங்கள்

## போட்டி இல. 29 வினாக்கள்

- **தமிழ்**

01. மெய் எழுத்துக்கள் எத்தனை?
02. சிலப்பதிகாரத்தின் ஆசிரியர் யார்?
03. பஞ்சபாண்டவர்கள் யாவர்?

- **பொது அறிவு**

04. உலகிலேயே மிகப் பெரிய விலங்கு எது?
05. உலகிலேயே பரப்பளவில் மிகப்பெரிய நாடு எது?
06. இந்தியப் பிரதமரின் பெயர் என்ன?

- **மாற்றுத்திறனாளிகள்**

07. சர்வதேச ஓட்டிச (தற்சிந்தனையாளர்) தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகிறது?
08. முதல் முதலாக ஐ.நாவினால் மாற்றுத் திறனாளிகள் ஆண்டு எப்போது பிரகடனப்படுத்தப்பட்டது?
09. இரு கைகளும் அற்ற நிலையில் விமானத்தைச் செலுத்தி அதற்கான உரிமத்தைப் பெற்றவர் யார்?
10. இலங்கையின் தமிழ்ப்பிரதேசத்தில் முதல் முதலில் கட்புல செவிப்புலனற்றவர்களுக்கான பாடசாலை எப்போது? எங்கே ஆரம்பிக்கப் பட்டது?

## எழுதுங்கள்; வெல்லுங்கள்.

### போட்டி இல. 30 விடைகள்

01. ..............................................
02. ..............................................
03. ..............................................
04. ..............................................
05. ..............................................
06. ..............................................
07. ..............................................
08. ..............................................
09. ..............................................
10. ..............................................

**இவ்வினாக்களுக்குரிய சரியான விடைகளை எழுதி அனுப்பி வையுங்கள். விடைகள் எமக்குக் கிடைக்க வேண்டிய இறுதிநாள் டிசம்பர் 2021. இவ்விடைகளுடன் உங்கள் சுயவிபரத்தையும் (முழுப்பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், பிறந்த ஆண்டு) இணைத்து அனுப்புங்கள். சரியான விடைகளை எழுதி அனுப்புவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசில் வழங்கப்படும்.**

## போட்டி இல:29 விடைகள்

01. 12
02. புகழேந்திப் புலவர்
03. இராமன், பரதன், இலக்குமணன், சத்துருக்கன்
04. நீக்கோழி
05. சீனா
06. மஹிந்த ராஜபக்ஷ
07. மார்ச்-21
08. 1943ஆம் ஆண்டு டாக்டர் லியொ கானர் (Dr.Leo Kanner)
09. 1904 ஆம் ஆண்டு
10. 1912 ஆம் ஆண்டு, இரத்மலானை

1. முழுப் பெயர் : ..............................................
2. தபால் முகவரி : ..............................................
..............................................
3. தொலைபேசி இல. : ..............................................
4. பிறந்த ஆண்டு/மாதம்/திகதி : ..............................................




**அனுப்ப வேண்டிய முகவரி:** எழுதுங்கள்; வெல்லுங்கள்
கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம்.
இல: 290, பருத்தித்துறை வீதி, நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

**அன்பார்ந்த வலு வாசகர்களே!**

இன்றைய கொவிட் பெருந்தொற்று இடர்காலத்திலும் வலு தொடர்ச்சியாக வெளிவருகிறது என்பதனை வாசகர்களுக்குத் தெரியப்படுத்துகின்றோம். தொடர்ந்து வரும் காலங்களில் 'வலு' உரிய காலத்திலேயே உங்கள் கரங்களில் தவழ்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முற்றத்து மல்லிகை

நேர்காணல் : கணபதி சர்வானந்தா

# கருவியோடு இணைந்து மாற்றத்தை நோக்கிய ஒரு பயணத்திலே...



*திருமதி கலாநிதி ரஜனிகாந்த்*

இந்த இதழின் முற்றத்து மல்லிகை என்ற பக்கத்தை அலங்கரிப்பவர் திருமதி. கலாநிதி ரஜனிகாந்த். இவர் ஒரு மாற்றுத் திறனாளி. பலருக்கு முன்னுதாரணமாக இருப்பவர். வாழ்வில் தான் சந்தித்த சாவால்கள் அனைத்தையும் தனக்குச் சாதகமாக்கிக் கொண்டவர். பல தோல்விகள், சில வெற்றிகள் எனப் பலவற்றைச் சந்தித்த போதும் இவர் தனது முன்னேற்றத்திலே குறியாகவும், தனது மகளை வளர்த்தெடுத்து சமூகத்துக்கு ஒரு முன்மாதிரியாகவும் இருக்க வேண்டும் என்ற வாஞ்சையோடும் வாய்ப்புகளைத் தேடலானார். அப்போதே இவர் கருவியின் அங்கத்தவரானார்.

சாதாரணமானவர்களோடு ஒப்பிடும் போது நாம் எந்த விதத்திலும் சளைத்தவர்கள் அல்லர்.நாங்கள் வலுவற்றவர்கள். எம்மால் சக மனிதர்களைப்போல வாழ முடியாது என்று எண்ணும் மாற்றுத் திறனாளிகளை நோக்கி "வாருங்கள் முன் செல்லுவோம்" என்றவாறு தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார் கலாநிதி ரஜனிகாந்த்.

நயினாதீவு இவர் பிறப்பிடம். பிறக்கும் போதே பார்வைக் குறைபாட்டோடு பிறந்தவர். பின்னர் 1983 இல் "குமுதினிப் படகு" அனர்த்தம் ஏற்பட்டபோது அதன் தாக்கத்தினாலேதான் தனது பார்வையை முற்றாக இழந்ததாக அவர் குறிப்பிட்டார். நயினாதீவில் உள்ள நயினை நாகபூசணி வித்தியா லயத்திலேயே இவர் தனது ஆரம்பக் கல்வி யைக் கற்றுக் கொண்டார். பின்னர் நயினாதீவு மகாவித்தியாலயத்தில் எட்டாம் வகுப்பு வரை படித்தவர். 1999 இல் கைதடியிலுள்ள 'நபீல்' பாடசாலையில் படித்து ஒரு வருடத் தின் பின்னர் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி மூன்று பாடங் களில் சித்தியெய்தினார். 2000 ஆம் ஆண்டு மானிப்பாயில் இருந்தபோது நாட்டுப் பிரச்சினை காரணமாகப் படிப்பைத் தொடர வில்லை.

பின்னர் புங்குடுதீவுக்கு இடம் பெயர்ந்தார். 2001 இல் திருமணம் நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பின்னர் கணவனைப்பிரிய நேரிட்டதால். வாழ்க்கையில் பல சவால்களை எதிர் கொண்டு தனித்து நின்று போராடினார். வாழ்வாதாரத்துக்காகப் பலவற்றை அவர் தேடலானார். அப்போது பனம் பொருட்களா லான பாய், நீத்துப் பெட்டி போன்றவற்றை தயாரித்து விற்றுத் தனது வாழ்வாதாரத் தைப் பேணிக்கொண்டார்.

2005 இல் புங்குடுதீவில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு இடம்பெயர்ந்தார். ஓட்டு மடத்தில் ஒரு வாடகை வீட்டைப் பெற்று வாழ்ந்து வந்தபோது பிரதேசச் செயலகத் தின் உதவியினால் கோழி வளர்ப்புக்கான உதவி கிட்டியது. அப்போது கடிதம் அனுப்பப் பயன்படும் கடித உறை (என்வலப்) தயாரிப் பைப் பழகிக்கொண்டார். அதிலும் வசதி வாய்ப்பு அதிகமாக இல்லாதது கண்டு ஒரு மாற்றத்தைத் தேடினார்.

2014 இல் கருவி நிறுவனத்தின் தொடர்பு கிட்டியது. அப்போது கருவியோடு தன்னை இணைத்துக் கொண்டு அங்கே கைவேலை பயிற்சி பெற்றார்.

2016 ஆம் ஆண்டு கருவி உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தல் அலகு திறக்கப் பட்ட போது அங்கே மாற்றுத் திறனாளருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. அதிலே ஒரு விற்பனைப் பிரதிநிதியாகச் சேர்ந்து கொண்டார். இவருக்கு சாரதியுடனான ஒரு முச்சக்கர வண்டியும் ஒரு பெண் உதவியா ளரும் கருவியினால் வழங்கப்பட்டது. அன்று தொட்டு 2021 வரை கருவி திரவ சலவை சவர்க்காரத் தயாரிப்புகளின் விற்ப னைப் பிரதிநிதியாக பணியாற்றியவர் சேவைக் கால அடிப்படையில் தற்போது கருவியின் இன்னும் ஒரு பிரிவான சூழல் அலகுக்கு மாற்றம் பெற்றுள்ளார்.

தற்போது கலாநிதி சூழல் செயல் திட்டத் தில் மீள் சுழற்சிப் பிரிவில் பணியாற்று கிறார். உபயோகித்த கடதாசிகளை உரு மாற்றி மீள் சுழற்சிக்கு வழங்கும் சிறிய உபகரணத்தைத் தானாக இயக்குகிறார். அது மட்டுமல்லாது அங்கு தைக்கப்பட்டு விற்பனைக்குத் தயாராகும் பொருட்களை ஒழுங்குபடுத்துவதையும் இவர் நடை முறைப்படுத்துகிறார்.

இவரது மகள் தொழில் நுட்பக் கல்லூ ரியில் இணைந்து சிறுவர் பராமரிப்பு பற்றிய பயிற்சியினைப் பெற்றுவருகிறார். அத்துடன் வீட்டு வேலைகளில் தனது தயாருக்கு உதவியாகவும் இருக்கிறார்.

மொத்தத்தில் கருவியோடு இணைந் தது தனது பாக்கியம் எனவும் கருவியில் தான் பல பயன்களைப் பெற்றிருப்பதாகவும் குறிப்பிட்ட அவர் கருவியின் செயற்பாடு களை நன்றியோடு நினைவு கூருகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மாற்றுத்திறனாளிகள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துமா?

# நவீன தொழில்நுட்பங்கள்

(கடந்த இதழ் தொடர்ச்சி...)

இன்றைய உலகில் நவீன தொழில் நுட்பம் நாளாந்தம் வளர்ச்சியடைந்து கொண்டு செல்கின்றது. இது மக்களின் வாழ்க்கையினை இலகுபடுத்துகின்றது. இந்த வளர்ச்சி மாற்றுத் திறனாளிகளின் வாழ்க்கையினையும் இலகுபடுத்துமாயின் அது தொழில்நுட்ப வளர்ச்சிக்குக் கிடைத்த பெருவெற்றிகளில் ஒன்றாக அமையும். மாற்றுத் திறனாளிகள் பலர் தங்களது அன்றாட தேவைகள் சிலவற்றைப் பூர்த்தி செய்வதற்குச் சிரமப்படுவதைக் காணலாம். இந்த சிரமத்தைப் போக்கும் வகையில் அவர்களுக்கு உதவக் கூடிய தொழில்நுட்ப சாதனங்கள் கண்டறியப்படுமாயின் அது அவர்களுக்கு உதவி கரமானதாக அமையும். இதுவே அவர்களினதும் அவர்கள் சார்ந்த குடும்பங்களினதும் வளர்ச்சியினை மட்டுமன்றி, நாட்டின் அபிவிருத்தியையும் மேம்படுத்தும்.

பார்வையற்றவர்கள் வாழ்க்கையை இலகுபடுத்தவென பல தொழில்நுட்பச் சாதனங்கள் பாவனைக்கு வந்துள்ளபோதிலும் இன்னும் அவர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப சாதனங்களின் தேவை இருந்த வண்ணமே உள்ளது.

பொதுவாக இன்று 'சிமாட்' (Smart) போன்களைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகரித்துள்ளது. இதற்குக் காரணம் அந்த போன்களில் காணப்படும் சிறப்பம்சங்கள். சிமாட் போன்களில் பல 'அப்ஸ்கள்' காணப்படுகின்றன. மேலும் எமக்கு தேவையான அப்ஸ்களை தரவிறக்கிப் பயன்படுத்தவும் முடியும்.இதனால் இவை பலருக்கும் பயனு டையதாக உள்ளது.

அண்மைக்காலத்தில் கண்டறியப்பட்ட புதிய அப்ஸ்கள் மாற்றுத் திறனாளிகளுக்கும் பயனுடையதாக உள்ளன. அந்த வகையில் சுற்றுச் சூழலைக் கண்காணிக்கவெனப் பயன்படுத்தப்படும் ஒரு வகையான அப்ஸ் பார்வையற்றவர்களுக்கும் பயனுடையதாக அமைந்துள்ளது. இதன் பயனை முற்றாக அவர்கள் பெற்றுக் கொள்ள முடியுமா? என்பது கேள்விக்குறியே.

தற்போது, உலகையே அச்சுறுத்தும் 'கோவிட் 19 பெருந்தொற்று' காரணமாக உலகம் முடங்கியுள்ளது. இத்தொற்றில் இருந்து பாதுகாக்க முகக்கவசம் அணிதல், சமூக இடைவெளி பேணல், கைகளை அடிக்கடி கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகள் பேணப்படுகின்றன. சனசந்தடி மிக்க சமூகத்தில் வாழப் பழகிய மக்களுக்குச் சமூக இடைவெளி பேணி நடமாடுவது என்பது சற்றுக் கடினமான விடயமாகும். ஆனால் தொற்றிலிருந்து பாதுகாப்பாக வாழ இந்நடைமுறையைப் பின்பற்றுவது கட்டாயமானதாகும். ஆனால் பார்வையற்றவர்களைப் பொறுத்தவரையில் இச்சமூக இடைவெளியைப் பேணுவதென்பது இயலாத விடயம். ஏனெனில் அவர் பயணிக்கும் பொழுது எதிரே வருபவருக்கான இடைவெளி எவ்வளவு இருக்கும் என்பதனை அவரால் அறிந்து கொள்ள முடியாது. இதனால் சில பார்வையற்றவர்கள் வெளியில் செல்ல அஞ்சுகின்றனர்.

இவர்களது அச்சத்தைப் போக்கும் வகையிலான 'அப்ஸ்' ஒன்று 'ஐ போன்-12' இல் பயன்படுத்தக்கூடியதாக உள்ளது. அதாவது



இந்த அப்ஸ்சானது எதிரிலுள்ளவர்க்கும் இந்த அப்ஸ்சை பயன்படுத்துபவர்களுக்கும் இடையிலான இடைவெளியைத் தெரிவிக்கும். பார்வையற்றவர்கள் இதனைப் பயன்படுத்தும்போது தனக்கும் எதிரிலுள்ளவர்களுக்குமான இடைவெளியை அறிந்து சமூக இடைவெளியை பேணிக் கொள்ள முடியும்.

இவ்வாறான அப்ஸ்கள் (Apss) செயல் வடிவம் பெற்று பார்வையற்றவர்கள் பயன்படுத்தும் வெள்ளைப் பிரம்பு, மூக்குக் கண்ணாடி என்பவற்றில் பயன்படுத்தப்படும் பொழுது பார்வையற்றவர்கள் கூடுதலான நன்மைகளைப் பெற்றுக்கொள்ள முடியும். இது உடனடியாகச் சாத்தியப்படும் என்பது கடினமாக இருப்பிலும் காலப்போக்கில் சாத்தியமாவதற்கான வாய்ப்புக்களும் நிறையவே உள்ளன. எனவே இவை சார்ந்த வல்லுநர்களும் நிறுவனங்களும் இவ்விடயத்தில் கூடிய கவனமெடுத்துப் பார்வையற்றவர்களின் வாழ்வை இலகுவாக்க உதவ வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவற்குழி சு.சிவராசா,
சாவகச்சேரி.



# புதிய தரிசனம்

கஸ்தூரி என்ன செய்வது? ஏது செய்வது? என்று ஒன்றும் புரியாமல் மனம் தடுமாறினாள். துன்பமும் துயரமும் அவளோடு கூடப் பிறந்தவை. இத்தனை வயதிற்கும் அவளோடு பிரியாத சினேகம் கொண்டவை. துன்பப் புயல் அடிக்கும் போதெல்லாம் பாறையாக அசையாமல் நின்று பழகியவள். ஆனால் இப்பொழுது கொஞ்சம் நிதானமாகச் சிந்தித்தும் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை. முன்பு வந்தவையெல்லாம் தற்காத்துக் கொள்ளும் போராட்டத்தில் ஊடுருவி நடந்த தாக்குதல்களாகவே இருந்தன. கொசுவைத் தட்டுவது போல அவற்றையெல்லாம் தட்டிவிட்டிருக்கின்றாள். இப்பொழுது வந்திருப்பதைத் தட்டித் துடைத்து விட முடியாது.

மோகன் என்பது அவளுடைய கணவனின் பெயர். அவன் கஸ்தூரியைக் கைப்பிடித்து மனைவியாக்கிக் கொண்டதும் ஒரு விபத்து என்றுதான் இப்பொழுது அவள் நம்புகின்றாள். கஸ்தூரி எப்படி இந்த விபத்தில் மாட்டிக் கொண்டாள் என்பது கண்ணீர்க் கதை.

கஸ்தூரியின் பெற்றோர் கிராமத்தில் வாழ்ந்து வந்தனர். அவளுடைய அப்பா விவசாயம் செய்து பிழைப்பு நடாத்தி வந்தார். கஸ்தூரியைப் பெற்றுப் போட்ட பின்னர் அவளுடைய அம்மா இந்த உலகத்தை விட்டுப் போய் விட்டாள். குழந்தையை வளர்ப்பதற்கு அப்பா ஒரு போராட்டமே நடாத்திக் கொண்டிருந்தார். ஆற்றாமையால் அவர் மறுமணம் செய்வதென்று தீர்மானித்தார். கஸ்தூரிக்கு ஒரு சித்தி கிடைத்து விட்டாள்.

சித்தி ஆரம்பத்தில் குழந்தையான கஸ்தூரியை நன்றாகவே வளர்த்து வந்தாள். காலப்போக்கில் சித்திக்கும் மூன்று குழந்தைகள் பிறந்தன. அந்தப் பிள்ளைகள் வளர வளர கஸ்தூரிக்கு பிரச்சினைகளும் வளர்ந்து வந்தன. சித்தியிடம் மாற்றாந் தாய் மனப் பான்மை வளர்ந்து வந்தது. அவள் தான் பெற்றெடுத்த பிள்ளைகளிடமிருந்து கஸ்தூரியை வேறுபடுத்திப் பிரிவுடன் நடாத்த ஆரம்பித்து விட்டாள்.

கஸ்தூரி ஆறாம் தரத்தில் படித்துக் கொண்டிருந்தபோது அவளைப் பள்ளிக் கூடத்திலிருந்து நிறுத்திவிட்டாள். சித்தியினுடைய பிள்ளைகள் ஒருவர் பின் ஒருவராகப் பள்ளிக்கூடத்திற்குச் சேர்ந்து விட்டனர்.

சித்திக்கு உதவியாக கஸ்தூரி வீட்டு வேலைகளைச் செய்ய வேண்டியிருந்தது. சித்தியின் பிள்ளைகள் சீருடையணிந்து புத்தகப் பையுடன் பள்ளிக்குச் செல்வதை கஸ்தூரி ஏக்கத்துடன் பார்த்துக் கொண்டு நிற்பாள். அப்பாவும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது கஸ்தூரியிடம் பெரிதாக அக்கறை காட்டுவதில்லை. அவர் சித்தியின் தலையணை மந்திரத்தில் சொக்கிக் கிடந்தார். எப்போதும் கஸ்தூரியைப் பற்றி இல்லாததையும் பொல்லாததையும் சித்தி அப்பாவிடம் சொல்லிக் கொண்டே இருந்தாள். அந்த மகுடிக்கு ஏற்றபடி அப்பா பாம்பு நடனம் ஆடிக்கொண்டு இருந்தார். அப்பாவும் சித்தியும் தான் இப்படி என்றால் சித்தி பெற்ற பிள்ளைகள் மூவரும் இன்னும் ஒருபடி மேலே இருந்தார்கள். அந்தப் பிள்ளைகள் கஸ்தூரியைத் தமது அக்கா என்று மதிப்பதே இல்லை. அவளைத் தங்கள் வீட்டு வேலைக்காரியாகவே நடாத்தி வந்தார்கள். இடி மின்னலாக வந்து கொண்டிருந்த துன்பங்களையெல்லாம் தாங்கும் இடிதாங்கி ஆனாள்.

பொறுத்தார் பூமி ஆள்வார்' என்ற நம்பிக்கையை வளர்த்துக் கொண்டாள், புறச்சூழலில் ஏற்படும் நன்மை, தீமைகளைப் பற்றிக் காலதேவன் கவலைப்படுவதேயில்லை. பெண்கள் விடயத்தில் அவனுடைய கைவண்ணம் அலாதியாகவே இருக்கின்றது. பருவத்தின் பூரிப்பில் நின்ற கஸ்தூரி பார்ப்பவர் கண்களையெல்லாம் உறுத்திக் கொண்டு இருந்தாள். அவளுடைய அழகு சித்தியின் எரிச்சலைக் கிளறிக்கொண்டிருந்தது. கஸ்தூரியை வீட்டிலிருந்து எப்படியாவது அப்புறப் படுத்தியாக வேண்டும் எனச் சித்தி முடிவு செய்தாள். புறோக்கர் கந்தையா அடிக்கடி வந்து போகத் தொடங்கினார். மோகனுடைய சாதகம் பொருந்தி வந்தது. நகரத்திலிருந்து கொண்டு சந்தைக்கு வருகின்ற பொருட்களை வாங்கி விற்கும் வியாபாரம் செய்வதில் மோகன் கைதேர்ந்தவன். இந்தக் காலத்தில் எல்லா ஆண்களும் தான் குடிக்கின்றார்கள். மோகனிற்கு இருக்கும் செல்வாக்கின் அளவிற்கு இது பெரிய குறையொன்றும் இல்லை. திருமணமாகி குடும்பப் பொறுப்பு வந்துவிட்டால் சரியாகிவிடும் என்று சமாதானம் செய்து கொண்டார்கள். நல்லது கெட்டது பார்த்துக் காலத்தைக் கடத்திக் கொண்டு போக சித்தி தயாராக இல்லை. அவள் போடுகின்ற தாளத்திற்கு எல்லாம் அப்பா கோவில் மாடு போலத் தலையாட்டிக் கொண்டிருந்தார்.

மோகன் கஸ்தூரி திருமணம் ஆர்ப்பாட்டம் இல்லாமல் சிக்கனமாக நடந்து முடிந்தது. சனியன் தொலைந்தது, சங்கடம் தீர்ந்தது என்று சித்தியோடு அப்பாவும் சேர்ந்து நிம்மதி பெரும் மூச்சு விட்டார். ஆனால் கஸ்தூரியின் நிம்மதி திருமணத்தின் பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைந்து கொண்டே சென்றது. 'வைரஸ் தொற்று ஏறிய கொம்பியூட்டர் புறோக்கிறாம்' போல் அவளது வாழ்க்கை சீரழிந்து கொண்டிருந்தது. குடிவெறியில் வருகின்ற மோகன் எடுத்ததற்கெல்லாம் அவளை அடித்துக் கொண்டிருந்தான். அவளுடைய நகைகளையும் ஒவ்வொன்றாகப் பிடுங்கிக் கொண்டிருந்தான். இந்த இலட்சணத்தில் அவள் ஒரு குழந்தையையும் வயிற்றில் சுமக்கத் தொடங்கினாள்.

திருமணத்தின் பின்னர் சித்தி இது வரையில் அவளைப் பார்க்க வரவில்லை. அப்பா இரண்டு தடவைகள் ஒப்புக்காக வந்து போனார். கஸ்தூரி தன்னுடைய கஷ்ட நஷ்டங்களைத் தனக்குள்ளேயே போட்டு புதைத்துக் கொண்டிருந்தாள். வயிற்றில் குழந்தையையும் மனதிலே துயரங்களையும் சுமந்து கொண்டிருந்தாள். பத்து மாதங்கள் நகர்ந்து விட்டால் எப்படியும் பிரசவத்திற்குச் சித்தி வந்து வீட்டிற்குக் கூட்டிச் செல்வாள் என்று இதுவரையில் நம்பிக்கையோடு இருந்தாள். ஆனால் அது நடக்காது போல் இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கஸ்தூரியின் கணவனின் அடாவடித் தனங்கள் இப்பொழுது தாங்க முடியாத அளவிற்கு அதிகரித்து விட்டன. பிரசவத் திற்கு உன்னை வீட்டுக்கு அழைத்துச் செல்ல யாரும் வரவில்லை. இந்தச் செலவுகளைச் சமாளிக்க உன்னுடைய நகைகளைக் கொடு' இப்படித் தான் நகை விற்பனைப் படலம் தொடர்ந்தது.

கஸ்தூரிக்குப் பிறந்த வீடும் சரியில்லை, புகுந்த வீடும் சரியில்லை தொடர்ந்து வந்த காயங்களினால் மனம் மரத்துப் போய் விட்டது. சிறுவயதிலிருந்து அன்பிற்காகவும் ஆதரவிற்காகவும் ஏங்கிப்போய் ஏமாந்து போனாள். அவளு டைய கணவனுக்கு அன்பு என்றால் என்ன வென்று தெரியவில்லை. இப்பொழுது அவளுக்குப் புதிய உறவொன்று கிடைத் திருக்கிறது. அவள் சுமந்து பெற்ற பிள்ளை தான் இப்பொழுது எல்லாமாக இருந்தது.

அவளிடமிருந்த எல்லாவற்றையும் இழந்து விட்டுத்தான் இந்த உறவைப் பெற்றிருக்கின்றாள். நகை நட்டுகள் எல்லாம் முடிந்த பிறகு கஸ்தூரியின் கணவன் வீட்டில் உள்ள பொருட்களை ஒவ்வொன்றாக விற்றுக் கொண்டிருந் தான். அவனுடன் வீட்டிற்கு வருகிற ஆசாமிகள் கஸ்தூரியை பார்க்கிற பார் வையே சரியில்லை. எல்லோருமாகக் கூடி அவளையும் ஒரு விற்பனைப் பொரு ளாக்கி விடுவார்களோ என்று அவள் அச்சப்பட்டாள். வீட்டில் வந்து குடி யேறிய தெரு நாய் ஆட்டைக் கடித்து மாட்டைக் கடித்து அதன் பின்னர் மனிதரையும் கடிப்பதற்கு தயாராகிக் கொண்டிருக்கிறது.

கஸ்தூாரி முன்னெச்சரிக்கையாக இருந்தாள். தலையைக் குறிவைத்து எறியப்பட்ட கல் தலைப்பாகையைத் தட்டிக் கொண்டு போனது. பணம் கொடுத்து பசி தீர்க்க வந்த ஆசாமிக்கு பச்சை தண்ணீரும் கிடைக்கவில்லை. அம்பு எய்தவனிடமே ஆவேசமாத் திரும்பி வந்து மோதியது. மன அடுப்பில் சூடு ஏறிக் கொண்டிருந்த ஆத்திரத் தண்ணீரின் வெப்பநிலை கொதிநிலைக்கு ஏறியது. மோகன் கஸ்தூரியை முரட்டுத் தனமாகத் தாக்கினான். ஒரு வயது கூட சரியாக நிரம்பாத அவளுடைய பெண் குழந்தை இந்த 'களபுளா'வைப் பார்த்து வீரிட்டு அலறியது.

மோகனின் கோபம் குழந்தையின் பக்கமாகத் திரும்பியது. பாய்ந்து சென்று பிள்ளையை உதைந்து தள்ள காலை வீசினான். அந்த ஒருகணத்தில் தாய்மை புலியாகப் பாய்ந்தது. கதவு ஒரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்த கதவுக்குப் போடுகின்ற வார்த்தடி அவளுடைய கைக்கு மாறியது. அடுத்த வினாடியே அந்த வார்த்தடி மோகனின் காலை பதம் பார்த்தது.

கஸ்தூரி கொடுத்த அடியினால் மோகன் அலறியபடி சுரண்டு விழுந்தான். தன்னுடைய குழந்தையை வாரி எடுத்துக் கொண்டு அங்கிருந்து வேகமாக வெளி யேறினாள். நேராக சித்தியிடம் வந்து சேர்ந்தாள். வீட்டில் அப்பா இருக்க வில்லை. மோகனைத் தான் அடித்து முறித்து போட்டு விட்டு வந்திருப்பதாகச் சொன்னாள். அதைக் கேட்டு சித்திக்கு கையும் ஓடவில்லை; காலும் ஓடவில்லை என்ன செய்வதென்று ஒரு நிமிடம் யோசித்தாள்.

'அடிப் பாவி மகளே' ஒரு வேளை நீ மோகனை அடித்துக் கொலை செய்து விட்டாயோ? இப்பொழுது இங்கே வந்து எங்களையும் கொலையில் மாட்டிவிடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாக்கிறியா? உடனே இங்கி ருந்து போய் விடு இல்லா விட்டால் உன்னை காவல்துறையிடம் பிடித்துக் கொடுத்து விடுவேன்." என்று கூறி கஸ்தூரியை உள்ளே எடுக்காமல் துரத்தி விட்டாள்.

கைப்பிள்ளையோடு கண்ணீர் சோர வீதியில் இறங்கிய கஸ்தூரி கால் போன திசையில் நடக்கத் தொடங்கினாள். மீள முடியாத துன்பத்தின் நடுவிலும் ஒரு அதிர்ஷ்டம் இருக்கத்தான் செய்தது. வீதியோரமாகச் சுவரில் மாட்டப்பட்டி இருந்த ஒரு விளம்பரப் பலகை எதேச்சை யாகக் கண்ணிற்பட்டது. "பாதிக்கப்பட்ட மகளிர் புனர்வாழ்வு நிலையம் என்ற அந்த விளம்பரப்பலகை" கஸ்தூரியை உள்ளே வா என வரவேற்பது போல இருந்தது. எந்தத் தயக்கமும் இன்றி உள்ளே நுழைந் தாள். அங்கேயிருந்த மேற்றன் அவனைப் பார்த்ததுமே அவளுடைய நிலைமையை ஓரளவு ஊகித்துக் கொண்டார்.

கஸ்தூரிக்கு அந்த இல்லத்தில் தங்குவ தற்கு அனுமதி கிடைத்தது. இதற்கிடை யில் கஸ்தூரியிடம் அடிவாங்கிய மோகன் மருத்துவமனையில் அனுமதிக் கப்பட்டிருந்தான். மருத்துவமனையில் மோகனிடம் இந்த விபத்து எப்படி ஏற்பட்டது என்று விசாரித்தார்கள். பல குற்றங்களில் ஏற்கனவே மோகன் சம்பந்தப்பட்டிருந்தான். அதனால் உண்மையான காரணத்தைச் சொல்லி வம்பை விலைக்கு வாங்கிக் கொள்ள அவன் விரும்பவில்லை. ஏதோ ஒரு சாக்குப்போக்கு சொல்லி அவன் மழுப்பி விட்டான். இறைவனால் கொடுக்கப்பட்ட கஸ்தூரி என்னும் செல்வத்தைச் சீரழித்த மோகன் தன் வாழ்க்கையையும் கெடுத்துச் குட்டிச்சுவராக்கி விட்டான். இப்போது அவனை ஆதரிப்பார் யாருமில்லை. ஊன்றுகோல்களைத் தாங்கியபடி தாண்டித் தாண்டி நடக்க வேண்டிய துர்ப்பாக்கியம் அவனுக்குக் கிடைத்திருக்கின்றது.

கஸ்தூரி தன் பிள்ளைக்கு அன்புச்செல்வி என்று பெயரிட்டாள். அன்புச்செல்வியின் பிறந்ததினத்தன்று அர்ச்சனை செய்வதற்காக அவளையும் அழைத்துக்கொண்டு அருகிலுள்ள முருகன் கோவிலுக்குக் கஸ்தூரி வந்தாள். அவளுக்கு மிகவும் பழக்கமான ஒரு குரல் தர்மம் போடும்படி கெஞ்சிக்கொண்டிருப் பது காதுகளில் விழுந்தது. அந்தப் பக்கம் இலேசாகத் தலையை சாய்த்துப் பார்த்தாள். அந்த நொண்டிப் பிச்சைக் காரன் வேறு யாரும் அல்ல அவளுடைய கணவன் என்று இந்த நொடிப் பொழுதில் தெரிந்து கொண்டாள்.

ஒரு கணம் கஸ்தூரியின் கண்கள் அந்த பிச்சைக்காரனின்மீது குத்திட்டு நின்றன. பின்னர் ஒரு முடிவுக்கு வந்தவளாக அங்கிருந்து விறுவிறு என்று நடந்து முருகனின் சந்நிதானத்தை அடைந்தாள். வேண்டாத உறவு தொடர வேண்டாம். என்று முருகனிடம் முறையிட்டாள். அப்போது கோயில் மணி ஒலிக்க குருக்கள் தீபம் காட்டினார். முருகனின் திருமுகம் பிரகாசமாய் தெரிந்தது. ஆறுமுகனும் அவளது முடிவை ஆதரிப்பது போல இருந்தது. மோகனும் கஸ்தூரியும் இனிமேல் வாழ்க்கையில் இணைய முடியாத தண்டவாளங்கள் ஆகி விட்டார்கள். குழந்தையோடு ஆலயத்திலிருந்து கஸ்தூரி மனநிம்மதியோடு வெளியேறினாள். அவள் புனர்வாழ்வு இல்லத்தை நோக்கி வேகமாக நடக்கத் தொடங்கினாள். நொண்டிப் பிச்சைக்காரனின் குரல் மெல்ல மெல்ல குறைந்து கொண்டு வந்து மறைந்து போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடந்த இதழ் தொடர்ச்சி

# கனவுகள் காணும் மௌன மொழி!

## மொழியில் பலவிதம்

உலகெங்குமுள்ள காதுகேளாதவர் சமுதாயங்களில் ஒரு பகுதியினர் தமக்கென ஒரு சைகை மொழியை உருவாக்கிப் பயன்படுத்தி வருகின்றனர். இன்னொரு பகுதியினர் பொதுவான சைகை மொழியின் அம்சங்களைப் பின்பற்றி வருகின்றனர். இன்றைய ASLஇன் சில சைகைகள் 180 வருடங்களுக்கு முன்பு பிரெஞ்சு சைகை மொழியில் இருந்து வந்தவை. இவை அமெரிக்காவில் ஏற்கெனவே காலங்காலமாய் பயன்படுத்தப்பட்டு வந்த சைகை மொழியோடு கலக்கப்பட்டன. இந்தக் கலவைதான் இப்போதைய ASL சைகை மொழிகள் உருவாகக் காரணமானது. ஒவ்வொரு தலைமுறையிலும் பல மாற்றங்களைச் சந்தித்து இவை முன்னேறும்.

பொதுவாக ஒரு நாட்டில் பேசப்படும் மொழிக்கான சைகை மொழிதான் அங்கு பயன்படுத்தப்பட வேண்டும் என்ற அவசியமில்லை. உதாரணத்திற்கு பியூர்டோ ரிகோவில் ஸ்பானிஷ் மொழி பேசப்பட்டாலும் ASL சைகைமொழி பயன்படுத்தப் படுகிறது. இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் ஆங்கிலமே பேசப்படுகிறது. ஆனாலும் இங்கிலாந்தில் பிரிட்டிஷ் சைகை மொழியே பயன்படுத்தப்படுகிறது. இது ASL இலிருந்து மிகவும் வேறுபட்டது. அதே விதமாய் மெக்ஷிகன் சைகை மொழிக்கும் இலத்தின் அமெரிக்காவைச் சேர்ந்த அநேக சைகை மொழிகளுக்கும் வித்தியாசம் உண்டு.

சைகை மொழியைப் பற்றி அறியவரும் போது அதன் உள்ளார்ந்த நுணுக்கங்களும் தத்ரூபமான அமைவுகளும் வியப்பூட்டுகின்றன. கிட்டத்தட்ட எல்லா விஷயங்களையும் எண்ணங்களையும், கருத்துக்களையும் சைகை மொழியில் பேசலாம். சந்தோஷமான விஷயம் என்னவென்றால், இப்பொழுது காது கேளாதோருக்காக வீடியோ கஸட்டுக்களைத் தயாரிப்பது பிரபலமாகி வருகிறது. அவற்றில் கதைகள் சொல்லவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





கவிதை படிக்கவும் சரித்திர விவரங்களை அளிக்கவும் பைபிள் சரித்தியத்தை கற்றுக் கொடுக்கவும் முடிந்துள்ளது. இதனூடாக இவ்விடயங்களினை காதுகேளாதோர் சமுதாயம் சைகை மொழியூடாகப் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இன்று அநேக நாடுகளில் சைகை மொழியறிவு அதிகரித்து வருகிறது.

**காதால் கேட்காத ஒன்றை படிப்பது**

சாதாரண மக்களுக்கு வார்த்தைகளின் ஒலி ஏற்கனவே மனதில் பதிந்திருக்கின்றது. ஆகவே அவர்கள் வாசிக்கும்போது அது ஞாபகத்திற்கு வருகிறது. வாசிப்பது அவர்களுக்குப் புரிகிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் வாசிப்பதை அவர்கள் ஏற்கனவே செவிகளால் கேட்டிருக்கிறார்கள். பெரும்பாலான மொழிகளில், எழுதப்படும் வார்த்தைகள், அவை அர்த்தப்படுத்தும் கருத்துக் களைப்போல் தோன்றாது. அநேகர் இந்த விதிகளற்ற முறையை அல்லது எழுத்து வடிவை, பேசும் மொழியின் ஒலியோடு சம்பந்தப்படுத்தி, இவ்வாறு புரிந்து கொள்கின்றனர். அத்தோடு வாசித்தும் கற்றுக்கொள்கின்றனர். கொஞ்சம் கற்பனை செய்து பாருங்கள் ஒலியை, வார்த்தையை, அல்லது மொழியை வாழ்க்கையில் ஒரேயொரு முறை கூட நீங்கள் கேட்டதில்லை! என்றால். கேட்க முடியாத ஒரு மொழியின் விதிகளற்ற எழுத்து வடிவத்தைக் கற்றுக்கொள்வது சாமானியம் அல்ல. அவ்வாறு கற்றுக் கொள்வது சில சமயம் வெறுப்பூட்டவும் செய்யலாம். அப்படிப்பட்ட ஒரு மொழியை காது கேளாதோர் முக்கியமாய் பிறவியிலேயே காது கேளாதோர் அல்லது பிள்ளைப் பராயத்தில் செவியாற்றலை இழந்தவர்கள் கற்றுக் கொள்வது ஒரு பெரிய சவால் என்பது இப்போது புரிகிறது அல்லவா?

காது கேளாத பிள்ளை, மொழியைப் புரிந்து கொண்டு முன்னேறும் ஆரம்ப கட்டத்திலேயே சைகை மொழியை பயன்படுத்துவது மிகவும் பயனளிக்கிறது என உலகெங்குமுள்ள காது கேளாத பிள்ளைகளுக்கான அநேகமான கல்வி மையங்கள் கண்டு பிடித்திருக்கின்றன. காது கேளாத இளம் பிள்ளை சகஜமான சைகை மொழியைக் கற்கும்போது மொழிக்கான அத்திவாரம் போடப்படுகிறது. இது படிப்பிலும் சமுதாய வாழ்விலும் வெற்றிகளை கொடுக்கும் அத்தோடு மொழியின் எழுத்து வடிவைக் கற்றுக் கொள்வதற்கும் பெரிதும் உதவியாய் இருக்கும் என அந்த மையங்கள் கண்டிருக்கின்றன.

கல்வி,அறிவியல், கலாச்சாரம் ஆகியவற்றுக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையம், காது கேளாதோருக்கான கல்வியைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. “இனியும் சைகை மொழியை அசட்டை செய்யக் கூடாது காது கேளாதோருக்கான கல்வித் திட்டங்களில் அம்மொழியை அதிகமாகப் பயன்படுத்த எம் பங்கில் உழைக்காமல் இருக்கக் கூடாது.” பெற்றோர் தங்கள் காது கேளாத பிள்ளைக்கு, எவ்வித காது கேளாதோர் கல்வியையும் தேர்ந்தெடுக்கலாம். ஆனால் தாய் தகப்பனாகிய இருவருமே பிள்ளையின் வளர்ச்சியில் முழுமையாகப் பங்கு கொள்ள வேண்டியது மிக முக்கியம்.

தொடரும் நன்றி : ஆதாரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் எட்டாம் ஆண்டு நிறைவு விழா சிறப்பு மலர்.

**தலைவரின் செய்தி**

*காலச் சக்கரத்தின் கனதியை உணர்ந்தபடியே தான் இந்தக் குறிப்பை நாம் எழுதுகின்றோம்.*

*கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையம் 8வது ஆண்டை நிறைவு செய்து ஒன்பதாவது அகவையில் சமூகப்பணிப் பயணத்தை தொடர்கிறது என்பதை நினைக்கிற போது உள்ளம் பேருவகை கொள்கிறது.*

*பத்தாவது ஆண்டை கருவி நிறுவனம் 2023ஆம் ஆண்டு நிறைவு செய்கின்றபோது நிரந்தரமான ஓர் இடத்தில் நிறுவப்பட வேண்டும் என்ற இலக்கோடு நாம் எத்தனிப்புக்களை முன்னெடுத்து வருகின்றோம். அங்கத்தவர்களுக்கான புதிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குவதன்மூலம் சுய சார்புப் பொருளாதாரத்தை நோக்கிய திட்டங்களை நாம் வகுத்து செயல் நிலைப்படுத்தி வருகின்றோம். கருவி நிறுவனம் நிரந்தரமான ஓர் இடத்தில் நிறுவப்பட்டு ஒரு பிரபஞ்ச இயக்கமாக மக்களால் உணரப்பட வேண்டும் என்பது எமது கனவாக இருக்கின்றது.*

*வலு, கருவி நிறுவனத்தின் காலாண்டு இதழாக மலர்ந்து 30வது இதழை விரிக்கின்ற தருணம் இது. பல்லாயிரக்கணக்கான வாசகர்களின் துணையோடும் இதழ் குழுமத்தின் அயராத உழைப்போடும் 'வலு' வலுவாகத் தடம்பதித்து எமது சமூகத்தில் ஆரோக்கியமான கருத்துப் பரம்பலை ஏற்படுத்தி வருகின்றது.*

*தமிழ் இதழியல் வரலாற்றில் புதிய தரிசனத்தையும் மாற்றத்தையும் வலு வழங்கி வருகிறது என்பதை தன்னடக்கத்தோடு நாம் பதிவு செய்ய விரும்புகின்றோம்.*

*எப்பொழுதும் போலவே சஞ்சிகையாளர்கள் எதிர் நோக்குகின்ற சவால்களைச் சந்தித்தபடியே தான் வலு குழுமமும் தங்களது பணிகளை ஆற்றிக் கொண்டிருக்கிறது. கொவிட்-19 பெரும் தொற்றுக் காலத்திலும் கூட வலுவின் வெளிவருகையில் தாமதம் ஏற்படக் கூடாது என்பது கருவி நிறுவனத்தின் இலக்காக இருக்கிறது. அது மெய்ப்பிக்கப்பட்டிருப்பது எமக்கு மிகுந்த மன நிறைவைத் தருகிறது.*

*வலுவின் வலுவான பயணத்திற்காய் உழைத்துக் கொண்டிருக்கின்ற இதழ்க் குழுமத்தினர், வாசகப் பெருந்தகையாளர்கள், நலன் விரும்பிகள், ஆர்வலர்கள், அனுசரனையாளர்கள் எல்லோரையும் வலுவின் 30ஆவது இதழ் விரிகின்ற இந்தக் கணத்தில் நன்றியுணர்வோடு நெஞ்சில் இருத்திக் கொள்கின்றோம்.*

*தலைவர்,*
**க.தர்மசேகரம்**
**கருவி நிறுவனம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2020ஆம் ஆண்டு கருவி நிறுவனத்தினால் முன்னெடுக்கப்பட்ட பணிகள்.

கருவி நிறுவனம் 01.01.2020 தொடக்கம் 31.12.2020 வரையான காலப்பகுதியில் முன்னெடுத்த செயத் திட்டங்களை இங்கு பதிவு செய்கின்றோம்.

### வாழ்வாதார உதவிகள் -2020




கருவி நிறுவனம் வலுவிழந்த நிலையிலுள்ள அங்கத்தவர்களினதும் அவர்களினது குடும்பங்களினதும் வாழ்வாதார நிலையை உயர்வடையச் செய்யும்பொருட்டுப் பொருத்தமான வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்றது. அங்கத்தவர்களின் கோரிக்கைகள் தேவை மதிப்பீட்டுக் குழுவினரால் பரிசீலிக்கப்பட்டுப் பயனாளிகள் வாழ்வாதார உதவித் திட்டங்களுக்காக உள்வாங்கப்படுகின்றனர். இந்த வகையில் 2020 பெப்ரவரி 13 இல் பயனாளி ஒருவருக்கு 10,000.00 ரூபா பெறுமதியான தூள் திரிப்பதற்கான மூலப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டன. பெப்ரவரி 15 இல் சந்தைப்படுத்தல் பிரிவில் பணியாற்றும் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 200,000.00 பெறுமதியான கருவி உற்பத்திப் பொருட்கள் வழங்கப்பட்டன. மார்ச் 15 இல் பயனாளி ஒருவருக்கு வாழ்வாதார உதவியாக ரூபா 50,000.00 வழங்கப்பட்டது. செப்ரெம்பர் 19 இல் அங்கத்தவர் ஒருவருக்கு ரூபா 45,000.00 பெறுமதியான கருவி உற்பத்திப் பொருட்கள் வழங்கப்பட்டன. செப்ரெம்பர் 26 இல் பயனாளி ஒருவருக்கு ரூபா 90,000.00 பெறுமதியான பழச்சாறினை பயன்படுத்தி மென்பானம் தயாரிப்பதற்கான மூலப்பொருட்கள் மற்றும் ஒருதொகுதி உபகரணங்கள் ஆகியவை வழங்கப்பட்டன. ஒக்டோபர் 21 இல் பயனாளி ஒருவருக்கு 10,000.00 ரூபா பெறுமதியான கருவி உற்பத்தி பொருட்கள் வழங்கப்பட்டன.

## அடிப்படை வசதிப்படுத்தல்கள்-2020



கருவி நிறுவன தேவை மதிப்பீட்டுக் குழுவினரால் அங்கத்தவர்களின் கோரிக்கைக் கடிதங்கள் பரிசீலிக்கப்பட்டு அத்தியாவசியமான தேவைகள் நன்கொடையாளர்களின் உதவியுடன் பயனாளிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இந்த வகையில் கிணறு வசதியின்றி இருந்த 2 அங்கத்தவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழாய்க்கிணறுகள் மற்றும் தொட்டி, என்பன அமைத்துக் கொடுக்கப்பட்டன. இவ்வுதவித் திட்டத்தின் மூலம் ஒவ்வொருவருக்கும் தலா 40,000.00 ரூபா செலவீடு செய்யப்பட்டது. மேலும் ஒரு பயனாளிக்கு மார்ச் 10இல் 25,000.00 ரூபா பெறுமதியிலான நீர்க்குழாய் வசதி செய்து கொடுக்கப்பட்டது.

## சுயதொழில் உதவிகள் -2020



எமது அங்கத்தவர்கள் சுயமாகத் தொழிலினை ஆரம்பிப்பதற்கும் ஏற்கனவே மேற்கொண்டு வருகின்ற சுயதொழிலினை மேம்படுத்துவதற்குமான உதவிகளைக் கருவி நிறுவனம் பொருத்தமான பயனாளிகளைத் தெரிவு செய்து வழங்கி வருகின்றது.

இந்த வகையில் எமது அங்கத்தவர்களில் முச்சக்கரவண்டியூடாக தமது குடும்ப வாழ்வாதாரத்தை மேற்கொள்ளும் இரு அங்கத்தவர்களுக்கு முச்சக்கரவண்டிக் கொள்வனவுக்கென ஒரு தொகுதி நிதி உதவி வழங்கப்பட்டது. ஒவ்வொருவருக்கும் தலா 180,000.00 ரூபா நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டது. இந்நிதியுதவியூடாக முற்சக்கரவண்டிகளை கொள்வனவு செய்து இவ்வங்கத்தவர்கள் சுயதொழிலினை மேற்கொண்டு வருகின்றனர். கதிரை பின்னும் தொழிலினைத் தனது சுயதொழிலாக மேற்கொண்டு வரும் அங்கத்தவர் ஒருவருக்கு டிசெம்பர் மூன்றில் ரூபா 10,000.00 பெறுமதியான கதிரைப் பின்னலுக்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் வழங்கப்பட்டன.




## அணுகு வசதிப்படுத்தல்கள் - 2020

எமது அங்கத்தவர்களின் சுயமான நடமாடலை மேம்படுத்தும் நோக்குடன் அவர்களுக்குப் பொருத்தமான வகையிலான அணுகு வசதிகள் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த வகையில் இவ்வாண்டு இரண்டு அங்கத்தவர்களுக்கு சக்கர நாற்காலிகள் வழங்கி வைக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதம் ஒரு பொதி - 2020



வலுவிழப்பின் அதீத பாதிப்பினால் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ள எமது அங்கத்தவர்களுக்கு மாதம் ஒரு பொதி எனும் செயற்றிட்டத்தினூடாக உலர் உணவுப் பொதிகளினை வழங்கி வருகின்றோம். கொரேனா வைரசின் பாதிப்பின் காரணமாக எமது அங்கத்தவர்கள் பலர் தொழில் வாய்ப்புக்களை இழந்துள்ளனர். இவர்களுக்கும் இயலாநிலையிலுள்ள அங்கத்தவர்களுக்கும் உலர் உணவுப் பொதிகளை வழங்கியிருந்தோம்.

இத்திட்டத்தின்கீழ் 2000 முதல் 3000 ரூபா பெறுமதியான உலர்உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. இவ்வாண்டு ஜனவரி தொடக்கம் டிசெம்பர் வரையான காலப்பகுதியில் 904 உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டள்ளன. இதில் வெளிமாவட்ட அங்கத்தவர்களுக்கான பொதிகள் குறித்த மாவட்டங்களில் வைத்து வழங்கி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கல்வியுதவி -2020

அங்கத்தவர்களிலும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களிலும் மாணவ நிலையில் இருப்பவர்களின் கல்வி நிலையை உயர்வடையச் செய்யும் நோக்கோடு கருவி நிறுவனம் கல்வி உதவித்திட்டத்தின்கீழ் பொருத்தமான உதவிகளினை வழங்கி வருகின்றது. இந்த வகையில் பெப்ரவரி 13 இல் ஒரு பயனாளிக்கு ரூபா 17200.00 பெறுமதியான துவிச்சக்கர வண்டி வழங்கப்பட்டது. ஜனவரி மாதம் முதல் அன்பர் ஒருவரால் மாணவர் ஒருவருக்கு மாதாந்த நிதி உதவியாக ரூபா 2000 வழங்கப்பட்டு வருகின்றது. மேலும் ஒரு அன்பரினால் 5 மாணவர்களுக்கு 1500 ரூபா வீதம் மாதாந்த நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது. பிரான்ஸ் பழைய மாணவர் சங்கத்தினூடாக, தொடர்ச்சியாக மாணவர் ஒருவருக்கு ரூபா 1000.00 என்ற அடிப்படையில் 10 மாணவர்களுக்கு மாதாந்த கல்விநிதி வழங்கப்பட்டு வருகின்றது. டிசெம்பர் மூன்றில் 20 மாணவர்களுக்குப் புத்தகப்பை உள்ளிட்ட கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

## கருவியின் ஆண்டுவிழா- 2020

கருவி மாற்றுத் திறனாளிகளின் சமூக வள நிலையத்தின் 07ஆம் ஆண்டு நிறைவு விழா கடந்த யூன் 12. 2020 அன்று இலக்கம் 290, பருத்தித்துறை வீதி, நீர்வேலியில் உள்ள கருவி அலுவலகத்தில் இடம்பெற்றது. உலகில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் பாதிப்பின் காரணமாக சுகாதார நடைமுறைகளுக்குமைய மட்டுப்படுத்தப்பட்ட அங்கத்தவர்களுடன் இந் நிகழ்வு இடம்பெற்றது.

கருவியின் தலைவர் திரு.க. தர்மசேகரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்த் ஒன்றுகூடல் நிகழ்வின் சிறப்பு விருந்திரனராக வடமாகாண சுற்றுலாத்துறைத் தலைவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு.க.தேவராஜா அவர்கள் கலந்து சிறப்பித்திருந்தார். அத்துடன் கருவி நிர்வாக சபையினர், நலச்சேவை இணைப்பாளர், கருவி நிறுவனப் பணியாளர்கள், நல்லன் விரும்பிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கருவி நிறுவனத்தின் தோற்றம், வளர்ச்சி, எதிர்கால நடவடிக்கைகள் பற்றி இவ்வொன்று கூடல் நிகழ்வில் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் கலந்து கொண்ட அனைவரும் கருவி உடனான தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டனர். செயலாளர் திரு.து.யசிந்தன் அவர்க ளின் நன்றியுரையுடன் இந் நிகழ்வானது மதியம் 01.00 மணியளவில் நிறைவுற்றது. தொடர்ந்து மதிய விருந்தும் இடம்பெற்றது.

## "கருவி" மாற்றுத் திறனாளிகள் தினம் 2020

இவ்வாண்டு "மாற்றுத் திறனாளிகளை உள்ளடக்கி மற்றும் அணுகக்கூடிய வசதிகளுடன் கொவிட்-19 இற்குப் பின்னரான நிலைத்திருக்கக்கூடிய வகையில் உலகைக் கட்டியெழுப்புதல்" எனும் தொனிப் பொருளில் உலகளாவிய ரீதியில் டிசம்பர் 03ம் திகதி மாற்றுத் திறனாளிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

குறித்த நிகழ்வு கருவி நிறுவனத்தில் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக 03.12.2020 அன்று அனுஷ்டிக்கப்பட்டது. கருவியின் தலைவர் திரு.க.தர்மசேகரம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக் கான வாழ்வதார உதவிகள், உலர்உணவுப் பொதிகள், மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டன. அத்தோடு இத்தினத்தையொட்டி வெளிமாவட்டப் பயனாளிகளுக்குக் குறித்த மாவட்டங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட இடங்களில் வைத்து உலர்உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

கருவி நிறுவனம் வருடாந்தம் மாற்றுத் திறனாளிகள் தினத்தையொட்டி நடாத்தும் கவிதை, கட்டுரை, ஓவியம், சிறுகதை போட்டிகளில் பங்குபற்றி வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள், பதக்கங்கள், சான்றிதழ்கள் என்பனவும் இந்நிகழ்வின்போது வழங்கப்பட்டன.

## கருவியின் ஒளிவிழா-2020

கருவியின் ஒளிவிழா நிகழ்வு கடந்த 18.12.2020 அன்று கருவி நிறுவனத்தில் கருவியின் பொருளாளர் திரு.ஜே.கொன்கிளேடியஸ் அவர்களின் தலைமையில் கொவிட்-19 சுகாதார நடைமுறைகளுக்கு அமைய இடம்பெற்றது. இந்நிகழ்வில் நத்தார் ஆசிச்செய்தி மற்றும் சிறப்பு நிகழ்வுகள் என்பன இடம்பெற்றதோடு சிறார்களுக்கு அன்பளிப்புக்களும் வழங்கப்பட்டன.

உலகில் ஏற்பட்ட கோவிட்-19 பெருந்தொற்றுக் காரணமாக எமது பணிகளும் இவ்வாண்டில் மட்டுப்படுத்தப்பட்ட வகையிலேயே முன்னெடுக்கப்பட்டன. எனினும் இயலுமானவரை அங்கத்தவர்களுக்கான உதவிகளை அவ்வப்போது வழங்கியிருந்தோம். இந்நெருக்கடியான காலகட்டத்திலும் எமது அங்கத்தவர்களின் மேம்பாட்டிற்காக நிதி மற்றும் பொருள் உதவிகளை வழங்கிய நன்கொடையாளர்கள் அனைவருக்கும் கருவி நிறுவனம் தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது. அத்துடன் எமது அனைத்து சேகைளோடும் இணைந்து கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் கருவி நிறுவனம் தனது மனப்பூர்வமான நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அங்கத்தவர் ஒருவருக்கு குழாய்க் கிணறு அமைத்துக் கொடுத்தல். ஆகஸ்ட் - 01



அங்கத்தவர் ஒருவருக்கான வாழ்வாதார உதவி வழங்கல். செப்ரெம்பர் - 26




வெள்ளைப்பிரம்பு தினம்
ஒக்டோபர் - 15



மாதம் ஒரு பொதி. நவம்பர் - 19






மாற்றுத்திறனாளிகள் தின நிகழ்வு. டிசெம்பர் - 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org